


# இலங்கையைக் கூண்டில் நிறுத்துகிறது அமெரிக்கா

ஏப்ரல் 17 - ஏப்ரல் 23, 2011 April 17 - April 09, 2011 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி


வார மலர்



## டயானாவின் மகனுக்குத் திருமணம்

## அதிகாரத்தின் முட்டாள்தனம்

## முடிவுபெறாத அவசர காலம்



# அதிகாரத்தின் முட்டாள்தனம்

தம்பி

தமிழீழ விடுதலைப் புலிகளது ஆதிக்கம் வடக்கில் முற்றாக இல்லாமலாக்கப்பட்ட பின்னர் இலங்கை அரசாங்கம் செய்த நிர்வாகத்துறை ரீதியான முதல் மாற்றம் பலமுள்ள, திறனுள்ள, தமிழ் மக்கள் நலன் சார்ந்து செயற்படக் கூடிய உயரதிகாரிகளை நீக்கியமையே ஆகும். அதாவது இப்பிராந்தியங்களில் கடமையாற்றுகின்ற உயரதிகாரிகளைத் தம்வசப்படுத்தி, தமது கட்டுக்குள் வைத்திருப்பதற்காக இயன்ற வரைக்கும் ஆண் தலைமைத்துவ நிர்வாகத்தை ஓரங்கட்டச் செய்ததே. இதற்குப் பல ஆண்கள் பலியாகினர். இவர்களுக்கு பதிலாக நியமிக்கப்பட்டவர்கள் அனைவரும் பெண்கள் என்பது அனைவரும் அறிந்த விடயம். யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், யாழ்ப்பாண நகர மேயர் யோகேஸ்வரி பற்குணராசா, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி சார்ள்ஸ் மற்றும் அண்மைய புதுவரவான வசந்தி அரியரட்ணம் (துணைவேந்தர் யாழ்.பல்கலைக் கழகம்) என நீள்கிறது வடக்கில் உயரிடங்களைப் பிடிக்கும் பெண்களின் பெயர்ப்பட்டியல்.

இவ்வாறான தொரு அதிரடியான மாற்றங்கள் புலிகளின் தோல்விக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்டு வருவது, தமிழ் பகுதிகளின் அதிகார பலத்தை நலிவடையச் செய்வதற்கான நடவடிக்கை என உணரப் பட்டாலும், அதுயாராலும் வெளிப்படையாக சுட்டிக் காட்டப்படவில்லை.

பெண்களிடம் அதிகாரம் கையளிக்கப்படுவது பெண்நிலை, பாலியல் சமத்துவ நோக்கில் முற்போக்கானது தான். ஆனால் யதார்த்தத்தில் அவர்கள் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு இடமளிப்பவர்களாகவே கருமமாற்றுகின்றனர்.

அண்மைக்காலங்களில் உயர்பதவிகளில் பெண்களை அமர்த்துகின்ற போதிலும், அதனை நகர்த்துவது மறைவில் இருக்கும் ஆண்கள் தான். ஆண்களுக்கு இக்கட்டான நிலைமைகள் ஏற்படுகின்றபோது அல்லது அப்பதவிகளில் ஆண்கள் அமர்த்தப்படுவது அதிகாரத்தில் இருக்கின்றவர்களுக்கு இடையூறாக மாறுகின்றபோது குறிப்பிட்ட அதிகாரங்கள் பெண்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. ஆண்கள் கதிரைகளை மட்டும் ஒப்படைத்து விட்டு முழு அதிகார பலத்தையும் கையகப்படுத்திக் கொள்கின்றனர். ஆண்களின் கைப்பொம்மைகளாக பெண்கள் மாறிவிடுகின்றனர். இதற்கு மிகப் பிந்திய உதாரணம் ஒன்று யாழ்ப்பாணத்திலிருந்து கிடைத்திருக்கிறது.

யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரிபற்குணராசா. வடக்கில் உயர்பதவிகளை பெறுவதில் விழும் சாபக் கேடு இவருக்கும் விழுந்தது. அதாவது அரசாங்கத்தின் அனுசரணையாளர்களாக செயற்படும் கட்சியின் ஆதரவுடனேயே இவரும் முதல்வராகினார். எனவே சிலவேளைகளில் மக்கள் வழங்கிய அதிகாரத்தைத் தனது அரசியல் பின்புலங்களுக்கு பயன்படுத்திக் கொண்டார். இது மாநகர சபைக்கு கிடைக்க வேண்டிய 3கோடி ரூபா வருமானத்தை இழக்கச் செய்தது.

இந்த ஊழல் விடயத்தை யாழ்ப்பாணத்தின் ஊடக அடையாளமாக விளங்கும் பத்திரிகை ஒன்று உரிய ஆதாரங்களோடு வெளிப்படுத்தியது. ஊழல் சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்களும் மக்களுக்கு சென்றடைந்துவிட்டது. இதைப்பயன்படுத்திக் கொண்ட யாழ்.மாநகர சபையின் எதிரணியினர் உண்மையை உள்ளிருந்து கிளறத்தொடங்கினர். குட்டை குழம்பத் தொடங்கியதும் ஆடிப்போன பெண்ணதிகாரி 'தடால்' நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கினார்.

குறித்த பத்திரிகை மீது வசைபாடல்களை மெய்மறந்து கொட்டித் தீர்த்தார். அப்பத்திரிகை சார் ஊடகவியலாளர்கள் யாழ்.மாநகர சபையின் கூட்டங்களில் செய்தி சேகரிப்பதற்கு தடைவிதித்தார். இதனைத் தொடர்ந்து எதிரணிகளின் தீவிர போராட்டங்களினால் தனது நிலைப்பாட்டிலிருந்து பின் வாங்கிக் கொண்டார். ஆனபோதிலும், யாழ்.மாநகர சபைக்குட்பட்ட நூலகங்கள், அரச திணைக்களங்கள் போன்றவற்றில் குறித்த அப் பத்திரிகையை முற்றாகத் தடை செய்வதாகச் சுற்று நிருபம் மூலம் அறிவித்தார். இவ்வளவு காரியங்களும் ஜனநாயக வழிமுறைகளுக்கு உட்பட்டு மேற்கொள்ளப்படவில்லை. மாறாக மாநகர சபையில் பெரும்பான்மை வகிக்கும் கட்சி சார்பில் எடுக்கப்பட்டவைகளே இவ்வளவு தடை அறிவித்தல்களும். யாழ்ப்பாணத்தின் மக்கள் தொகையின் பெரும்பாலான தொகையை பிடித்துக் கொள்வது யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியே. இங்கு வாழுகின்ற மக்கள் அளித்துள்ள வாக்குகளில் ஆட்சியை பிடித்துக் கொண்டு, அவர்களது அன்றாட வாசிப்பைக் கூட தடை செய்யும் அதிகாரத்தை இவருக்கு யார் வழங்கினார்கள்? அப்படியாயின் குற்றுயிராய்க் கிடக்கும் ஜனநாயகத்தின் மீதியாய் இருக்கும் கருத்துரிமையையும் தமது சொந்த நலன்களுக்காக தடை செய்துள்ளாரா?

அவர் கூறுவது போல் குறித்த பத்திரிகை உண்மைக்குப் புறம்பான செய்திகளை மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றதென்றால், அது எப்போதோ மக்கள் மத்தியில் நிராகரிக்கப்பட்டிருக்கும். அத்தோடு உண்மையை நிராகரிப்பதற்காக ஊடகத்தைத் தடைசெய்வது அறிவுள்ளோரின் தீர்மானமாகவும் அமையாது.

25 வருடங்கள் யாழ்ப்பாண பத்திரிகைத் துறையில் குறித்த பத்திரிகை ஆற்றிவரும் பங்களிப்பையும், அதன் உண்மைத்தன்மையையும் சாதாரணர் கூட அறிவர். அதைவிடுத்து குறிப் பிட்ட சில வருடங்களுக்கு மட்டும் இருக்கக் கூடிய அதிகாரத்தை வைத்துக் கொண்டு ஒட்டுமொத்த பொது மக்களதும் வாசிப்பு உரிமையை, செய்தியறியும் உரிமையைப் பறிப்பது உலகத்திலேயே முதல்தரமான முட்டாள்தனம். அப்படி ''பொய்கூறும் பத்திரிகைகளையெல்லாம் தடை செய்தல்'' என்ற சட்டம் கொண்டுவரப்பட்டால் நாட்டில் தடைசெய்வதற்குப் பல பத்திரிகைகள் உண்டு.

இந்த உதாரணத்திலிருந்து தான் வடக்கில் பெண்ணதிகாரத்தின் துஷ்பிரயோகத்தை ஓரளவுக்காவது புரிந்து கொள்ளலாம். ஆள்பவருக்குத் தேவை, செயற்றிறன் குறைவான நிர்வாகிகள், உள்ளூர்க் கட்சிகளுக்கு தேவை தமது அதிகாரங்களை கொண்டு மேற்கொள்ளப்படும் காரியங்களுக்கு ஆதரவளிக்கும் நிர்வாகிகள். இவ்விரு தரப்பினருக்கு ஏற்ற வகையிலேயே இப்போதிருக்கும் உயர் பெண்ணதிகாரிகள் காணப்படுகின்றனர்.

தற்காலத்தில் அரசியல் மற்றும் நிர்வாகத் துறைகளில் பெண்களின் பங்களிப்பு வலியுறுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு விடயமாகவே இருந்து வருகிறது. இவ்விடயம் வரவேற்கத்தக இருப்பினும், வடக்கு கிழக்கைப் பொறுத்த வரையில் பால்நிலை சமத்துவம் மிக முக்கியமாக பேணப்படவேண்டியது அவசியம். தனியே பெண்களிடம் குவியும் அதிகாரமானது, தன் இன இருப்புக்கே ஆப்பு வைக்கும் நடவடிக்கைகளுக்கு வழி சமைத்துவிடும். இது தவிர்க்கப்பட வேண்டுமெனில், கட்சி சார்பற்ற பெண்கள் உயர்பதவிகளுக்குத் தெரிவாகவேண்டும். அதைவிடுத்து அரசியல் நோக்கங்களுக்காக உயர் பதவி பெறும் பெண்களால் மக்களுக்கு எந்தக் காரியத்தை யும் திருப்திகரமாக மேற்கொள்ளமுடியாது போகும்.*

## இரண்டு செய்திகள்

யாழ். மாநகர சபைக்குக்கிடைத்திருக்க வேண்டிய பல கோடிக்கணக்கான ரூபா பணம், சபை யைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஆளும் தரப்பின் அதிகாரத் தரப்பின் துஷ்பிரயோகத்தால் தனியார் வர்த்தகர் ஒருவருக்குத் தாரைவார்க்கப்பட்டுள்ளது. நகரின் மையப் பகுதியில் 5 மாடிகளைக் கொண்ட கடைத் தொகுதி ஒன்றை மாநகர சபை அமைக்கிறது. இதனை அமைப்பதற்கான ஒப்பந்தம் தனியார் வர்த்தகர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கடைத் தொகுதியில் 75க்கும் மேற்பட்ட கடைகள் அமைக்கப்பட உள்ளன. கட்டடத்தை அமைப்பதற்கான பணம் மாநகர சபையால் வழங்கப்படவில்லை. பதிலாக கட்டடத்தை அமைப்பவரே கடைகளை விற்பனை செய்து பணத்தை எடுத்துக் கொள்ளும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

கட்டடத்தை அமைக்கும் நிறுவனம் அந்தக் கடைகளை தற்போதே விற்க ஆரம்பித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் கடை வைத்திருக்கும் இடைத் தரகர் ஒருவர் மூலம் விற்பனை நடைபெற்று வருகின்றது. ஒவ்வொரு கடையும் ரூபா 2 கோடிவரைக்கும் விற்பனை செய்யப்படுகின்றன என்று நம்பகமாகத் தெரிய வருகின்றது. கடைகளை விற்பதன் மூலம் கிடைக்கப் போகும் மிகப் பெரிய தொகையில் சில கோடிகள் கட்டடத்தை அமைக்கச் செலவாவது போக மீதி அனைத்தும் அந்த நிறுவனத்துக்கே சென்று சேரப் போகின்றது. இந்தக் கட்டடத்தை அமைப்பதற்கான கேள்வி கோரல் உள்ளூர் பத்திரிகைகள் எதிலும் வெளியிடப்படவில்லை. கொழும்பில் அரச பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விளம்பரத்தைப் பார்த்து ஒரேயொரு நிறுவனமே விண்ணப்பித்துள்ளது. அந்த நிறுவனத்துடன் உடனடியாகவே சபை ஒப்பந்தம் செய்துள்ளது. உள்ளூராட்சிச் சபை விதிகளின்படி எந்த ஒரு கேள்வி கோரலுக்கும் ஒரேயொரு விண்ணப்பம் கிடைத்தால், மீள் கேள்வி கோரப்பட வேண்டும். இந்த ஒப்பந்தத்தில் அந்த விதி முழுமையாகப் புறக்கணிக் கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபையில் இடம்பெற்ற ஊழல் முறைகேடுகளை அம்பலப்படுத்தியதுக்குத் தண்டனையாக உதயன் பத்திரிகையை யாழ். மாநகரசபை வளாகத்துக்குள்ளேயே எடுத்து வரக் கூடாது என்று 'தடா' போட்டுள்ளார் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா.

முதல்வரால் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட உத்தரவுகளின் முழு விவரம் அதில் உள்ளவாறே இங்கு தரப்படுகிறது:-

சகல திணைக்கள மற்றும் பகுதித் தலைவர்களுக்கும்

<u>உதயன் பத்திரிக்கையைத் தடை செய்தல்</u>

கடந்த 05.04.2011 ஆம் திகதி யாழ். மாநகர சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம் சபையின் வளாகத்தினுள் ~~சபை நிர்வாகத்துக்குட்பட்ட சனசமூக நிலையங்கள், நூலகங்கள் உட்பட சகல அமைப்புக்களிலும்~~ உதயன் பத்திரிகை வாங்குவதை இன்று முதல் உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>உதயன் பத்திரிகையைத் தடை செய்தல்</u>

கடந்த 05.04.2011 ஆம் திகதிய யாழ். மாநகர சபையின் தீர்மானத்தின் பிரகாரம் சபையின் விளம்பரங்கள், அறிவித்தல்கள் என்பவற்றை உதயன் பத்திரிகைக்கு வழங்குவதை இன்று முதல் உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா

மாநகர முதல்வர், யாழ். மாநகர சபை யாழ்ப்பாணம்.

*(இரண்டு உத்தரவுகளுக்கும் ஒரே தலைப்புத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது)*





# மனிதர்களை விற்கும் போட்டி

கிரிக்கெற் ஒரு வித்தியாசமான அழகியல், அலுப்பூட்டும் தருணங்களும், மூச்சுத் துடிப்பை நிறுத்துமளவுக்குப் பரபரப்பூட்டும் கணங்களும் நிறைந்திருக்கும் ஆட்டம்.

அது இன்று பலகோடி மக்களை ஈர்த்து வைத்திருக்கும் ஒரு விளையாட்டாக மட்டுமன்றி, அதிக பணம் கொழிக்கும் துறையாகவும் மாறிவருகிறது. இந்தப் பண மீட்டலில் மிகப்பெரும் சாதனையைப் படைத்திருப்பது தான் இந்தியக் கிரிக்கெற் கட்டுப்பாட்டு வாரியத்தின் கண்டுபிடிப்பான இந்தியன் பிரிமியர் லீக் (I.P.L)

## I.P.L உருவாக்கம்

இந்திய அணி 2007 இல் உலகக்கிண்ணப் போட்டியின் முதல் சுற்றிலேயே வெளியேறிய அதிருப்தியில் இருந்து மீள்வதற்காக உருவாக்கப்பட்டதே I.C.L. இதனைக் கபில்தேவை முன்னிறுத்தி உருவாக்கியவர் ஜீ.குழுமத்தின் சுபாஷ் சந்திரா. தொடர்ச்சியான தோல்விகளைச் சம்பாதித்துக் கொண்டிருந்த இந்தியக் கிரிக்கெட் வாரியத்தின் அசமந்தப் போக்கைக் கேள்விக்குட்படுத்தும் வகையிலேயே இது அமைக்கப்பட்டது. உலகளவிலான வீரர்களையும், உள்ளூர் இளம் வீரர்களையும் இணைத்துப் போட்டித் தொடர்கள் நடத்தப்பட்டன. இது 'ஜீ' தொலைக் காட்சியிலும் ஒளிபரப்பட்டு நல்வரவேற்பைப் பெற்றது. இதைக்கண்டு பொறாமையுற்ற இந்தியக் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை பல தடாக்களை அறிவித்தது. ஐ.சீ.எல்லில் விளையாடுபவர்களுக்கு இந்திய அணிகளில் இடம் கிடையாது என அறிவித்தது; பிற வாரியங்களையும் அவ்வாறு செய்யுமாறு கேட்டுக் கொண்டது.

I.C.L. இன் முன்னேற்றத்தைக் கண்டு பொறுக்க முடியாமல், தானும் லீக்போட்டியைத் தொடங்க இந்திய கட்டுப்பாட்டுசபை முடிவு செய்தது. ஏற்கனவே வாரியத்திடம் நடப்பு வீரர்கள் இருந்ததாலும், அரசு மற்றும் வாரியங்களின் ஒத்துழைப்பு கிடைத்ததாலும், சினிமா துறையினரின் பங்களிப்பு இருந்ததாலும் இதில் பெரும் வெற்றியீட்டியது. கட்டுப்பாட்டுச்சபையின் பண பலமும் அதிகாரப் பலமும் I.C.L ஐ முடக்கி ஓரங்கட்டியது. அதில் விளையாடிய வீரர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கி I.P.L இல் இணைத்துக் கொண்டது.

இவ்வாறு இதன் ஆரம்பமே அராஜகங்களுடன் தொடங்கியது. இதன் பண பலத்துக்கு பணிந்த சர்வதேச கிரிக்கெற் சபையும் வாய்மூடி பேசாமல் இருந்து விட்டது. I.C.C இன் ஒத்துழைப்பு, பிரபல ஆட்டக்காரர்களின் பங்களிப்பு, சினிமா நட்சத்திரங்களின் இருப்பு, கவர்ச்சிப் பாவைகளின் ஆட்டம் போன்றவைகள் பணம் சம்பாதிப்பதை அதிகப்படுத்துகின்றன.

## I.P.L. எனும் பணம் காய்க்கும் மரம்

இந்திய கிரிக்கெற் வாரியம் 1928 ஆம் ஆண்டில் தொடக்கப்படும் போது அது ஒரு அறக்கட்டளை போலவே இயங்கியது. இதனால் கணக்கறிக்கைகளை காட்ட வேண்டிய அவசியமோ, வரி செலுத்தவேண்டிய நிலையோ அதற்கு ஏற்படவில்லை. 2007 க்கு பின் இதில் கொண்டுவரப்பட்ட, பயிற்சி நிலையங்களைத் தொடங்குதல், 20 ஓவர் போட்டிகளை நடத்துதல் ஆகிய சட்டதிட்டங்களால், இதன் அறக்கட்டளை அந்தஸ்தை இந்திய வரித்துறை 2009 ஆம் ஆண்டில் நீக்குவதற்குக் காரணமாகியது.

இந்திய கிரிக்கெற் சபையின் நடவடிக்கைகள், அவை அமைக்கப்படும் விதம் ஆகியவைகளைக் கொண்டு, இந்த அமைப்பு வணிக நோக்கில் செயற்படுவதாக வரித்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். கிரிக்கெற் என்பது இதன் செயல் திட்டங்களில் தற்செயலாக இடம்பெற்றுள்ள ஒரு பகுதி என்று சொல்லக்கூடிய அளவுக்கு இதன் நடவடிக்கைகள் முழுக்க முழுக்க வணிகமயமானவை என்று அவர்கள் வர்ணிக்கின்றனர். இது தன் வருமானத்தில் 8 வீதம் மாத்திரமே கிரிக்கெற் விருத்திக்குப் பயன்படுத்துகிறது எனவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு I.P.L பணம் காய்க்கும் மரமாக மாறியதற்குப் பல காரணங்களுண்டு. அதில் போட்டிகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புவது முதலாவது. 1970 களில் தொடங்கிய இந்த ஒளிபரப்பு இன்று உச்சத்தை எட்டி இருக்கிறது. பணம் கொடுத்து டிக்கெற் வாங்கிப் போட்டிகளைப் பார்க்க வசதியற்ற ரசிகர்களுக்கும் பார்ப்பதற்கான வாய்ப்பை இத் தொழில் நுட்பம் வழங்கியிருக்கிறது. இதுவரை ரிக்கெற் வருவாய் மட்டுமே கிடைத்துவந்த சபைக்குத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யும் நுட்பம் விளம்பர வருமானத்தை அதிகரித்தது.

இத்தொலைக்காட்சிகள் கிரிக்கெற்றை ஒரு மதமாக மாற்றிவிட்டன. இந்திய சுதேச விளையாட்டுக்கள் ஓரங்கட்டப்பட்டு, கிரிக்கெற்றில் அரசியல் புகுத்தப்பட்டு, அதன் வீரியம் பட்டி தொட்டியெங்கும் பரப்பப்பட்டிருக்கிறது. ரசிகர்கள் பல்கிப் பெருகினர். கிரிக்கெற் வீரர்கள் நட்சத்திர அந்தஸ்துக்குரியவர்களாயினர்.

இதைப் பயன்படுத்திக் கொண்ட கிரிக்கெற்சபை, கிரிக்கெற்றை சந்தைப் படுத்துவதில் தீவிரம் காட்டியது. டிக்கெற் விற்பனை, ஒளிபரப்பு உரிமம், விளம்பர அனுசரணை, மைதானங்களில் விளம்பரம் வைப்பது, மைதானப் பொருட்களில் விளம்பர முத்திரைகள் பதிப்பதென விளையாட்டு முழுவதையும் வணிக மயமாக்கியது. இதனால் 2007-2008 காலப்பகுதியில் உச்சமான வருமானத்தை ஈட்டியது (1000.41 கோடிக்கு மேல்). இதில் பெருமளவிலான லாபம் ஒளிபரப்பு உரிமத்திடம் இருந்தே பெறப்பட்டது. இவ்வாறு பணம் பெறும் வழிமுறைகளை மேலும் விரிவுபடுத்துவதற்காகவே 2009 இல் I.P.L போட்டிகளை அறிமுகப்படுத்தியது.

இந்திய கிரிக்கெற் சபைக்காக விளையாடுவதில் உள்ள அந்தஸ்துயர்வை எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்ட இந்திய கிரிக்கெற் கழகங்கள் போட்டி போட்டுக்கொண்டு அங்கத்துவ உரிமங்களைப் பெற்றுக் கொண்டன. அத்தோடு தமது அணி வெல்ல வேண்டுமென்பதற்காகச் சர்வதேச கிரிக்கெற் நட்சத்திரங்களைப் பலகோடி ஏலத்தில் எடுத்துள்ளன.

## I.P.L இன் வளர்ச்சியும், வருமானமும்

இதன் பொருளாதார மதிப்பு 18000 கோடிக்கு மேல் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் இருக்கும் 'பிராண்ட வினான்ஸ்' எனும் நிறுவனங்களின் பொருளாதாரத்தை மதிப்பிடுவதற்கான நிறுவனம், 2010 இல் I.P.L இன் மதிப்பு 4.13 பில்லியன் டொலர் (ரூ 18500 கோடி) என மதிப்பிட்டுள்ளது. 2009 இல் இதே நிறுவனம் கணக்கிட்ட மதிப்பு 2.01 பில்லியன் டொலர். ஒரே ஆண்டில் இரட்டிப்பு மடங்குப் பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளது. 2009 இல் எவ்வளவாக இருக்கும்? இதன்படி இந்தியாவின் மிகப்பெரிய மதிப்பு வாய்ந்த நிறுவனங்களான டாட்டாவுக்கும், றிலையான்சுக்கும் அடுத்த இடத்தில் I.P.L உள்ளது.

I.P.L போட்டிகளை ஒளிப்பரப்பு செய்வதற்கான பத்தாண்டு உரிமையை சொனி என்டர்டெய்மன்ட், சிங்கப்பூர் வேல்ட் ஸ்போட்ஸ் குரூப்க்கு ரூ 8700 கோடிக்கு விற்றுள்ளது. பிறநாடுகளில் இதை ஒளிபரப்புவதற்கான உரிமைகளை அந்தந்த நாட்டு தொலைக்காட்சிகளுக்கு Sony Entertiment விற் பனை செய்திருக்கிறது. அனுசரணைக்காக 225 கோடி ரூபாய்களை டி.எல்.எப் நிறுவனம் கட்டியிருக்கிறது. இதனாலேயே I.P.L போட்டிகள் D.L.F.I.P.L போட்டிகள் என அழைக்கப்படுவதற்கும், சிக்சர்கள் D.L.F மக்ஸிமம் என்று அழைக்கப்படவும் காரணம் ஆகின்றது. இதைவிட ஹீரோ ஹொண்டா, பெப்சிகோ, கிங்பிஷம் ஆகியவையும் பெருந் தொகையைக் கட்டியுள்ளன.

## I.P.L இன் தாக்கங்கள்

மேற்கண்ட விதத்தில் கிரிக்கெற்றை மிகப் பெரும் தொகைக்கு விற்பனை செய்வதில் சாதனை படைத்த பெருமை I.P.L க்கு உரியது.

பலநாட்டு வீரர்களும் ஒருநாட்டுக்குள் வெவ்வேறு அணிகளில் விளையாடுவதால் விறுவிறுப்பும், அலங்கோலங்களும் எழுவது தவிர்க்க முடியாததாகிறது. உலகக் கிண்ணப் போட்டியில் இந்தியா வெல்வதற்காக அரும்பாடுபட்ட தோனியும், டெண்டுல்கரும் எதிரெதிர் அணிகளில் மோதிக்கொள்கின்றனர். இது கிரிக்கெற்றின் தேசியத் தன்மையை உடைப்பதோடு, வீரர்களின் தனித் தன்மையையும் இழக்கச் செய்து, அவர்களைக் கிரிக்கெற் விபச்சாரிகளாக மாற்றுகின்றது.

தமது சொந்த நாட்டு அணிக்காகச் சர்வதேச போட்டிகளில் விளையாடிப் பெருமை சேர்ப்பதிலும் பார்க்க, குறுகிய மணித்தியாலங்களுக்கு அதிக சம்பளத்துக்கு உழைத்து விடலாம், என எண்ணுகின்றனர். இதனை வீரர்கள் வெளிப்படையாகவே தெரிவித்தும் வருகின்றனர்.

இந்த நிலைமைகள் கிரிக்கெற்றை சுவாரஸ்யமற்ற விளையாட்டாக மாற்றி வருவதோடு ரசிகர்களைச் சலிப்படையவும் செய்கிறது. அத்தோடு அதில் இடம்பெறுகின்ற ஊழல் மற்றும் சூதாட்டங்கள் விளையாட்டின் கனதியை அருகச் செய்பவைகளாக உள்ளன. எந்த விடயத்தையும் சந்தைப்படுத்தினால்தான் அந்த விடயம் பிழைத்திருக்க முடியும் என்பதால் கிரிக்கெற் சந்தைப்படுத்தலையும் ஏற்றுத்தான் ஆக வேண்டும். ஆனால் அதில் எல்லைகளை வரையறுப்பதிலும், விளையாட்டின் நோக்கங்களைச் சரிவரக் கடைப்பிடிப்பதிலுமே I.P.L இன் எதிர்காலம் தங்கியிருக்கிறது. ❋



அட்சயன்

# கல்வியின் ஏணிகள்

தொலையா நினைவுகள்

அன்றைய நாள் பாடசாலை தொடங்கி அமைதி நிலவக் கற்றல் கற்பித்தல் நிகழ்ந்து கொண்டிருந்தது. நான் படித்த எனது எட்டாம் தரத்தில் சுகாதார பாடத்துக்கான குறிப்புக்களை செல்லம்மா ரீச்சர் சொல்லிக் கொண்டிருந்தார். அவருடைய கற்பித்தலில் ஒரு தெளிவிருந்தது. என்னிடத்தில் அப் பாடத்தைக் குறிப்பெடுக்கக் கொப்பியோ பென்சிலோ இருக்கவில்லை. ஆனால் என்னிடத்தில் இருந்த குறும்பினால் நான் அவர் சொன்ன குறிப்புக்களைக் கேட்டு எழுதுவதாகப் பாசாங்கு செய்தேன். அவரின் குறிப்புச் சொல்லும் வேகத்திற்கும் மேலாக எனது குறிப்பு எழுதும் வேகத்தை காண்பிக்க உரத்துக் கூறும் தொனி அதிகரித்திருந்ததை அவதானித்த ரீச்சர், என்மீது சந்தேகம் கொண்டார். எனது கொப்பியை எடுத்துக் கொண்டு தனக்கருகே வருமாறு என்னை அழைத்தார். உண்மையிலேயே நான் பயந்துபோனேன். வேறு வழியில்லை. எதுவுமே செய்ய இயலவில்லை. கொப்பியோ பேனாவோ என்னிடம் இருக்கவில்லை. நான் எழுதுவதாகப் பாவனை செய்ததை அவதானித்தே அவர் என்னை அழைத்தார் என்பதை உணர்ந்தேன். பயத்துடன் வேறொரு பாடக்கொப்பியை எடுத்துக்கொண்டு அவர் அருகிலே சென்றேன். அந்தக் கொப்பியில் சுகாதாரக் குறிப்புகள் எதுவுமே எழுதப்பட்டிருக்கவில்லை. அதனைக் கண்டதும் அவர் என்னைக் கோபத்தோடு பார்த்தார். வகுப்பறைக்கு வெளியே என்னைக் கலைத்துவிட்டார்.

நான் பயம் கலந்த பார்வையுடன் உடல் சுருக்கி, முகம் சோர வகுப்பறைக்கு வெளியே நின்றேன். கண்கள் கலங்கிவிட்டன. அவரது பாடம் முடியும்வரை அவர் என்னை வகுப்பறைக்குள் அழைக்க வில்லை. பாட முடி வில் இடைவேளை நேரம் மணி அடித் தது. ஆசிரியர்கள் வகுப்பறைகளை விட்டுத் தமது ஓய்வறையை நோக்கிப் போய்கொண் டிருந்தார்கள். பிள்ளைகளும் வகுப்பறைகளில் இருந்து வெளியேறினர். நானோ அவ்விடத்தில் பலரின் பார்வைக்கும் ஒரு வேடிக்கைப் பொரு ளாகி நின்றிருந்தேன். சிறிது நேரத்தில் ஓய் வறைக்குச் சென்றிருந்த செல்லம்மா ரீச்சரிடம் இருந்து என்னை வருமாறு அழைப்பு வந்தது. என்னை அழைத்துப்போக வந்த மாணவனின் பின்னே பயந்து பயந்தே சென்றேன். ரீச்சரின் முன்னால் போகவும், நிற்கவும் பயந்தேன்.

அவரோ என்னை ஒருமுறை பரிதாபத்தோடு பார்த்தார். ''ஏன் என்னை ஏமாற்றினாய்'' எனக் கவலை தோயக் கேட்டார். அந்தக் கேள்வியில் அவர் என்மீது கொண்ட அன்பு வெளிப்பட்டது. ''கொப்பி வாங்கக் காசில்லை'' என்றேன் பயத்தோடு. எனது குடும்பத்தையும் எங்கள் கஷ்ட நிலையையும் நன்றாய் அறிந்தவர் ரீச்சர். நான் சொன்னதில் பொய் இல்லை என்பதைப் புரிந்து கொண்டார். ஒவ்வொரு பிள்ளையையும் அவர்களின் பின்னணியையும் அறிந்தவராகவே அவர் இருந்தார். அதனை உறுதிப்படுத்தும் வகையிலான அவரின் செய்கை என்னை வெட்கப்படுத்தியது. அவரின் ஆசிரியப் பணியின் மகத்துவம் அது.

எனது ஆச்சரியம் அடங்குவதற்கு முன்னர் ''உனக்குத் தேவையான கொப்பி, புத்தகங்களைச் சொல்லு'' என்று கேட்டார். என் உடல் புல்லரித்தது. ஒரு தாளை எடுத்து என்னிடம் தந்து அதில் ''உனக்குத் தேவையான புத்தகம், கொப்பிகளை எழுது'' என்றார். நான் எழுதினேன். நான் எழுதிய அரை டசின் கொப்பிகளையும், பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம் என்பவற்றையும் எங்கள் பாடசாலையில் இருந்த புத்தகக் கடையில் தனது கணக்கிலே வாங்கித் தந்தார். அப்பொழுது தான் நான் செய்த தவறின் கனதி எனக்கு உணர்த்தப்பட்டதாகத் தெரிந்தது.

ரீச்சர் தான் சொல்லிய குறிப்புக்கள் அனைத்தையும் இரண்டு தினங்களுக்குள் எழுதிக் காண்பிக்க வேண்டும் எனப் பணித்தார். என்னால் தவற விடப்பட்ட பாடங்களைக் கற்க அது தூண்டியது. நான் செய்த தவறை எனக்கு உணர்த்த இத்தனை அக்கறையுடனும் கருணையுடனும் ஆசிரியர் ஈய்ந்த உதவிகளை எண்ணியபோது, அவரின் எதிரில் எனது தவறான செய்கைகளுக்காகக் கூனிக் குறுகினேன். அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் அவரை ஏமாற்றவோ, அவரது கற்பித்தலை அலட்சியப் படுத்தவோ என்னால் முடியவில்லை. எனது கற்றலில் நானே அக்கறை கொள்ளும் வகையில் செயற்பட்ட ரீச்சரை எண்ணிப் பார்க்கிறேன்.

என்னை நானாக உயரச் செய்த ஆசிரியர்களுள் செல்லம்மா ரீச்சர் என் முன்னே உயர்ந்து தோன்றுகின்றார். அன்றைய நாள் நான் செய்த தவறை உணர்த் தியது மாத்திரமல்ல, அதே போன்ற தவறை மீண்டும் செய்யாமல் இருக்க அவர் எடுத்துக் கொண்ட முயற்சியினால் நானும் எனது ஆசிரியப் பணியில் அவரைப் பின் பற்றிச் செயலாற்றும் ஆற்றலைப் பெற்றேன். அவ்வகையிலேயே என் மாணவர்களுடன் கல்வியைப் பகிர்ந்து கொள்கின்றேன்.

இன்று அத்தகைய ஆசிரியர்கள் உள்ளனரா என்பதையும் தேடிப்பார்க்கிறேன். என் முன்னே ஒரு சிலர் தோன்றத்தான் செய்கிறார்கள். செல்லம்மா இராசரட்ணம் ரீச்சர் ஓய்வுபெற்று இன்றும் தமது பிள்ளைகளோடு வாழ்கிறார். அவரது பிள்ளைகளும் கற்றுயர்ந்து நல்ல பதவிகளில் அமர்ந்திருப்பதைப் பார்க்கிறேன். ''ஊரார் பிள்ளை தலை தடவ, தன் பிள்ளை தானே வளரும்'' என்பார்கள். அதற்கு இலக்கணமாக அவரைப் பார்க்கிறேன். இன்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்தியவர்கள் தமது வகுப்பு ஆசிரியர்களைப் பாராட்டுகின்றனர். க.பொ.த. சாதாரண, க.பொ.த.உயர் தர வகுப்புகளில் சித்தியடைந்தவர்கள் தமது வகுப்பாசிரியர்களைப் பாராட்டுகின்றார்கள். இத்தனைக்கும் முன் பள்ளியில் இருந்தே நாம் சந்திக்கும் ஆசிரியர்களின் தொகையோ அனேகம். ஆனால் ஆசிரியர்கள் என்ற ஆளுமைக்குள் அகப்படுவோர் மிகச் சிலராகவே இருக்கின்றார்கள். இன்றைய நாட்களில் ஆசிரியர்கள், ஆசிரியர்களாகச் செயற்பட, தம்மைத் தாமே ஆளுமை உள்ளவர்களாக மாற்றிக் கொள்ளுதல் அவசியமாகிறது. இதுவே ஆசிரியத்துவத்தின் மகிமை.

பாடசாலைக் கல்வியில் படித்தேன், பரீட்சை எழுதினேன், சித்தியடைந்தேன் என் பவற்றுக்கும் மேலாகக் கல்வியால் வாழ்கிறேன் என்ற பெருமைக்குள் என்னை வாழ வைத்த ஆசிரிய வழிகாட்டிகள் என் றுமே நினைவிலிருத்தி வாழ்த்தப்பட வேண்டியவர்கள். ✱

நெடுந்தீவு மகேஷ்



# அன்பின் அழுத்தத்தில் சுபத்திரன்



உணர்வுகளின் அழுத்தத்தால் ஒடித்திரிபவன் மனிதன். பிறக்கிறான்; இறக்கிறான். இடைப்பட்டகாலத்தில் அவன் செய்தவைகளால் சிறக்கிறான். செயற்பாடுகளின் பிரதிபலிப்புகள் பல வேளைகளில் நாம் எதிர்பார்ப்பவை போல் நிகழ்வதில்லை. மனித வாழ்வில் திருமணம் உயர்வானது. குடும்பம். பிள்ளைகள் என்று கூடிக் குதூகலிக்கும் தோறும் வாழ்க்கை இன்பமயமாகிறது. மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பார்கள். அன்பு, இரக்கம், அறிவு, ஆதரவு தரும் மனைவியை வரமாகப் பெறும் போது ஒருவன் மகிழ்ச்சி அடைகிறான். ஆனால் பல எதிர்பார்ப்புகளோடு திருமண பந்தத்தில் இணைந்த பின்னர் அவை அனைத்துமே இல்லை என்றாகுதல் மாத்திரமல்ல, மனைவியே கணவனைத் தவிக்க விட்டுப் பிரிந்து செல்லும் துயர நிகழ்வுகளும் எம் சமூகத்தில் ஏற்படுவதுண்டு.அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் கவிஞர் ஊமையாய் அழுவதை இக் கவிதை மூலம் பார்க்கிறோம்.

**கற்சிலை ஒன்றை மணந்திருந்தால் பனிக்**
**காலத்தில் ஆவது குளிர்ந்திருக்கும்**
**விற்பனை மகளினை விரும்பி இருந்தால் அவள்**
**விலையினுக்காவது சிரித்திருப்பாள்**
**நிர்க்கதியில் எனை நடுத்தெருவில் தீ**
**முன்னெனைத் தொட்டவள் விட்டுவிட்டாள்.**
**கற்பனைக் கதை ஒன்று நடக்கிறதா? இனி**
**கண்ணீர் தான் எனது தொடர்கதையா?**

திருமணத்தில் கைப்பிடித்து மனைவி என ஆனவள். இப்பொழுது நிர்க்கதியாய் கணவனைத் தவிக்க விட்டுப் பிரிந்து சென்றுவிட்டாள். கற்சிலையை மணந்திருந்தால், அது குளிரும் காலத்தில் குளிர்ச்சியைத் தந்திருக்கும். விபச்சாரியை மணந்திருந்தால், அவள் தான் பெறும் பணத்திற்காகவாவது சிரித்திருப்பாள். மணப்பந்தலில் இணைந்தவள் கணவனைக் கலங்க விட்டுப் பிரிந்து சென்றுவிட்டாள்.

**மதுக்கடை தான் இனிச் சீதனமா? - இந்த**
**மனச்சுமை தான் இனி என் உணவா?**
**விதி இது என்று நான் ஆறிடவா - இல்லை**
**விலைமகள் வாசலைத் தேடிடவா**
**மதி தளர்ந்து அலைந்திடும் விசர்க்குணத்தில் - தெரு**
**மதில்களின் ஓரத்தில் கிடந்திடவா.**
**எதுவரை ஓடுவேன் திரும்பிடுவேன் - இதை**
**என்னிடம் கேட்டால் பதில் வருமா.**

மனைவியின் மீது அவர் கொண்ட அன்பின் ஆழம், அவள் தானாகவே விலகிச் சென்ற நிலையை நோக்கி அழுகின்றது. உணர்வுகளின் கோலம், மதுவையும் பிறமாதர்களையும் தேடி அலைய முனைகிறது. ஒரு விசரனாக உரு மாற்றுகிறது. திருமணத்தின் பின்னரான மனைவியின் செயல்களால் சிந்தை கலங்கி மௌனமாக அழுகிறார்.

**கருணையிலாதவள் பெண் இனமா - சொல்லைக்**
**கல்லால் எறிபவள் தாய்க்குலமா**
**எருமைகள் போல முரண்பிடித்து - என்**
**இதயத்தின் முதுகெலும்பை உடைத்து விட்டாள்**
**வரும்படி மட்டும் தான் வாழ்க்கை என்றால் கோர்ட்டு**
**வாசலில் திருமணப் பந்தலையும் இங்கு**
**மறுபுறம் பிரசவ இல்லத்தையும் - சட்டம்**
**தந்திடலாம் அன்பைப் பழித்திடலாம்**

சொல்லால் அடிக்கும் பெண்ணிடமிருந்து அது கல்லாய் வந்து வீழ்கிறது. முரண்டு பிடிக்கும் பெண் இங்கு எருமையாய்த் தோன்றுகிறாள். கணவனின் வரும்படியான பணம், பொருள் இவைகளையே விரும்பும் பெண் நீதி மன்ற வாசலிலேயே நிறுத்தி விட்டாள் என அலறுகிறார். தனது அன்பைப் பழித்து, தன்னைப் பிரிந்திருந்து தன்னிடத்தில் பணம் கேட்டுத் தன்னை வருத்துகிறாளே என்கின்ற கவிஞர் சுபத்திரன் அவர்களை இங்கு பார்க்கிறோம்.

கிழக்கு மாகாணத்தில் பிறந்தவர். இடது சாரிச் சிந்தனைகளால் நூற்றுக்கணக்கான கவிதைகளை எழுதி வெளியிட்டவர். குடும்பவாழ்க்கையில் அநேகர் மத்தியில் நிகழும் சம்பவத்தை ஊமை எனும் கவிதையாக தந்துள்ளார். 1935 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி பிறந்தவர். க.தங்கவடிவேல் எனும் இயற்பெயரைக் கொண்டவர். சுபத்திரா எனும் மனைவியின் பெயரைச் சுபத்திரன் எனப் புனைந்து எழுதி வந்தார். ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவர் 1979 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 இல் காலமானார். 1997 இல் வெளிவந்த சுபத்திரன் கவிதைகள் எனும் நூலில் இக்கவிதை இடம் பெற்றுள்ளது. ✱

மைதிலி. தேவராஜா



# இனப்பிரச்சினைத் தீர்வில் அந்நியத் தலையீடுகள்



அண்மைக்காலமாக இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு, போரின் இறுதி நாட்களில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் என்பன தொடர்பாக சர்வதேசம் சற்று அதிகமாகவே கவனம் செலுத்துவது போன்ற ஒரு தோற்றப்பாடு மேலெழுந்து வருவதாகக் கருதப்படுகிறது.

**இலங்கை அரசின் இரட்டை வேடம்**

இப்பிரச்சினைகள் தொடர்பாக இலங்கையில் அரச தரப்பு சர்வ தேசத்திற்கு ஒரு முகமும், இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு இன்னொரு முகமும் காட்டி வருகிறது. இதை மேற்குலக நாடுகள் புரிந்து கொள்ளாமல் இல்லை. அதேவேளையில் மேற்குலகமோ இந்தியாவோ இலங்கையின் ஏமாற்றுதலைப் புரிந்து கொண்டுள்ளன என்பதை இலங்கையும் தெரிந்தே வைத்துள்ளது.

எனினும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் என்ற ஜனநாயக அந்தஸ்தை வைத்துக் கொண்டு, இறைமை, வெளியார் அழுத்தங்களுக்குப் பணிந்து போகாமை என்பன போன்ற வார்த்தைகளை உச்சாடனம் செய்து இடையிடையே தோன்றும் நெருக்கடிகளிலிருந்து இலங்கை தப்பி வருகின்றது. அப்படியும் முடியாத சந்தர்ப்பங்களில் உரிய தரப்புடன் இரகசியப் பேச்சுகளை நடத்தி தற்காலிகமாக நிலைமைகளைச் சமாளித்து வருகிறது.

> **போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், இனப்பிரச்சனை தொடர்பாகவும் அந்நிய நாடுகளின் தலையீடு என்பது ஒரு புதிய விஷயமல்ல. ஏற்கனவே இலங்கை அரசின் வேண்டுகோளின் பேரில் மேற்கொள்ளப்பட்ட தலையீடு இப்போதும் தொடர்கிறது என்பது தான் உண்மை.**

எப்படியிருந்த போதிலும் இலங்கை அரசின் போலித்தனங்கள் வெளிப்படுவதையும் சர்வதேச அபிப்பிராயங்கள் இலங்கைக்கு எதிராக வளர்ச்சி பெற்று வருவதையும் அவதானிக்க முடிகிறது.

**அரசுக்கு எதிராக உருவான புறச்சூழல்**

சில மாதங்களுக்கு முன்பு இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் லண்டன் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் உரையாற்றச் சென்றமையும், அங்கு வசிக்கும் தமிழ் மக்கள் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக அங்கு உரையாற்ற முடியாமல் திருப்பி வந்ததும் இடம் பெற்றதிலிருந்து இலங்கை அரசுக்கு எதிரான ஒரு புறச்சூழல் முனைப்படைய ஆரம்பித்தது. இச் சம்பவம் தொடர்பாக பிரிட்டிஷ் அரசு போதிய பாதுகாப்பு வழங்கவில்லை என இலங்கை தரப்பில் வெளியிடப்பட்ட குற்றச்சாட்டுகள் பிரிட்டிஷ் வெளிவிவகாரத்துறையால் நிராகரிக்கப்பட்டன. அது மட்டுமன்றி பிரிட்டிஷ் வெளிவிவகாரத்துறையைச் சேர்ந்த லியோன் பொக்ஸூம் தனது இலங்கை விஜயத்தை இரத்துச் செய்திருந்தார்.

இச்சம்பவங்கள் இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பிரிட்டனால் வெளியிடப்பட்ட ராஜதந்திர ரீதியான ஒரு கண்டனம் எனவே பலராலும் கருதப்பட்டது.

இதையடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அமெரிக்க விஜயம் மிக இரகசியமாகவே மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அவர் அங்கு வெளிப்படையாக எவ்வித அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. அதே வேளையில் அவரின் பயணம் ஓய்வெடுக்கும் நோக்குடனோ அல்லது மருத்துவ தேவைகளுக்காகவோ மேற்கொள்ளப்பட்டதாகத் தகவல்கள் வெளிவந்தன. அதனையடுத்து இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தலைமையிலான குழுவினர் அமெரிக்கா சென்று ஐ.நா. செயலரைச் சந்தித்தனர். அவர்கள் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை தாமதப்படுத்தவும் பகிரங்கமாக வெளியிடப்படாமல் தடுக்கவும் முயற்சிகள் மேற்கொண்டதாகத் தகவல்கள் வெளியாகின.

ஆனால் தற்சமயம் இவ்வறிக்கை ஐ.நா.செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அது இலங்கைக்குப் பாதகமான அம்சங்களைக் கொண்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. மேலும் தெற்கு மத்திய ஆசிய நாடுகளுக்குப் பொறுப்பான றொபேட் ஓ பிளாக் அண்மையில் இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பாக சர்வதேச அங்கீகாரம் பெற்ற விசாரணை இடம்பெற வேண்டும் என அழுத்தம் கொடுத்திருந்தார். இறுதியில் அமெரிக்க வெளிவிவகாரத்துறை வெளியிட்ட அறிக்கை இலங்கை அரசு தொடர்பாகப் பலமான கண்டனங்களை வெளிப்படுத்தியிருந்தது. அதில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர் பாக முறையான நடவடிக்கை எடுக்கப்படாமை பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டது.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக அண்மையில் லண்டனில் உலகத் தமிழர் பேரவையுடன் கலந்துரையாடிய போது திருமதி.சோனியா காந்தி வெளியிட்ட கருத்துக்களும், தமிழகத் தேர்தல் பிரசாரத்தின் போது இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வு காண்பதற்கான அழுத்தத்தை இந்தியா கொடுக்கும் எனத் தெரிவித்தமையும், இலங்கை அரச தரப்பைத் தடுமாறவைத்துள்ளது. மொத்தத்தில் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மேற்குலக நாடுகளும் அண்டை நாடான இந்தியாவும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக முன் எப்பொழுதையும் விட அண்மைய நாட்களில் கூடுதல் அக்கறை செலுத்தி வருகின்றன.

**நிலைமையைச் சமாளிக்க முயலும் இலங்கை அரசின் போக்கு**

இப்படியான சூழ்நிலைகள் ஏற்படும் போதெல்லாம் இலங்கை தனது இறைமை பற்றி உரத்துக் கூவுவதும் இலங்கையின் உள்விவகாரங்களில் வெளியார் தலையிடுகிறார்கள் எனக் குற்றம் சாட்டுவதும் வழமையான செயற்பாடுகளாகும். அரசில் அங்கம் வகிக்கும் விமல் வீரவன்சவின் ஜனநாயக தேசிய முன்னணி, ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் தம்மைச் சிங்கள தேசபக்தர்களாகக் காட்டி அறிக்கைகள் விட்டோ, போராட்டங்கள் நடத்தியோ சிங்கள மக்களை இனவெறி மாயையிலிருந்து வெளிவராமல் பார்த்துக் கொள்வார்கள். அதேவேளையில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், மனித உரிமைகள் சார்பான பேச்சாளரான அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஆகியோர் மாறி மாறி வெளிநாடுகளுக்கு ஓடி நிலைமைகளைத் திசை திருப்பவோ, சமாளிக்கவோ முயற்சி செய்வர்.

**சந்திரசேகர ஆசாத்**

போர் முடிந்த 22 மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஆக்கபூர்வமான முயற்சிகள் எதுவும் இடம்பெறவில்லை. பெயரளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி சர்வதேசத்தை ஏமாற்றிக் கொண்டு பிரபாகரன் கேட்டதைக் கொடுக்க மாட்டோம் என அரசதரப்பினர் பேச்சுக்களைக் குழப்பும் விதத்தில் அறிவித்தல்களை விடுக்கின்றனர். அது மட்டுமன்றி, இருக்கும் சில உரிமைகளும் படிப்படியாகப் பறிக்கப்படுகின்றன. சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழ் நிலங்கள் பறிக்கப்படுகின்றன. வடக்கு கிழக்கில் ஒரு இராணுவ ஆட்சியே இடம்பெறுகிறது. தமிழ் மக்கள் அச்சமின்றி வாழும் நிலை இன்று வரை உருவாக்கப்படவில்லை.

அதாவது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சாசனத்தில் வகுக்கப்பட்ட அத்தனை உரிமைகளும் இலங்கையில் தமிழ் மக்களுக்கு மறுக்கப்படுகின்றன.

இப்படியான ஒரு நிலையில் சர்வதேச நாடுகள் கேள்வி எழுப்பினால், அது உள்நாட்டு விவகாரங்களில் மேற்கொள்ளப்படும் தலையீடு என இலங்கையால் குற்றம் சுமத்தப்படுகிறது.

**வெளியார் தலையீடு இப்போது தான் ஏற்பட்ட ஒன்றல்ல**

ஆனால் இலங்கை இனப்பிரச்சனையில் எந்த ஒரு நாடும் தலையீடு செய்வது உள்நாட்டுப் பிரச்சனையில் தலையீடு செய்வது என்ற கட்டம் தாண்டப்பட்டு விட்டது.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் முனைப்படைந்த போது, அமெரிக்கா உட்பட பல மேற்கு நாடுகள் அப்போராட்டத்தைத் தலையேற்று நடத்திய விடுதலைப்புலிகளைப் பயங்கரவாத இயக்கம் எனப் பிரகடனப்படுத்தின. அப்பிரகடனத்துடனேயே அது உள்நாட்டு விவகாரம் என்ற தன்மையை இழந்து விட்டது.

பின்பு நோர்வேயின் அனுசரணையுடன் இடம்பெற்ற விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையேயான பேச்சுகள், அதில் இணைத் தலைமை நாடுகளின் பங்களிப்பு என்பன மேலும் இப் பிரச்சினையைச் சர்வதேச மயப்படுத்தின.

எல்லாவற்றிலும் மேலாக, 2000 ஆம் ஆண்டின் பின் ஆரம்பமாகிய இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேயான போரில் சர்வதேசம் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க இலங்கை அரசுக்குச் சகல விதமான உதவிகளையும் வழங்கின.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு தலைமையேற்று நடத்திய விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதில் முனைப்பான பங்களிப்பை வழங்கிய சர்வதேசத்திற்கு, விடுதலைப் புலிகள் களத்திலிருந்து அகற்றப்பட்ட பின்பு தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தார்மீகக் கடப்பாடு உண்டு.

எனவே போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், இனப்பிரச்சனை தொடர்பாகவும் அந்நிய நாடுகளின் தலையீடு என்பது ஒரு புதிய விஷயமல்ல. ஏற்கனவே இலங்கை அரசின் வேண்டுகோளின் பேரில் மேற்கொள்ளப்பட்ட தலையீடு இப்போதும் தொடர்கிறது என்பது தான் உண்மை.

ஆனால் இன்றைய அந்நியத் தலையீடு இலங்கை அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளைக் கேள்விக்குள்ளாக்கும்போது அது இலங்கையின் இறைமையை மீறுவதாகச் சித்தரிக்கப்படுகிறது.

ஒரு இனத்தின் இறைமை, மனித உரிமை என்பன பறிக்கப்படும் போது அவை பற்றி கேள்விகள் எழுவது உலகின் பொது விதியாகும்.

எனினும் சில தேசிய, சர்வதேசிய நலன்களின் அடிப்படையில் இவை உரத்தோ நலிந்தோ ஒலிப்பதுண்டு. இப்போது இலங்கை விவகாரத்தில் இது உரத்து ஒலிப்பதற்கு சர்வதேச அளவில் எழுச்சி பெற்ற ஜனநாயகப் போராட்டங்களும், அவற்றுக்கு ஆதரவு கொடுக்க வேண்டி மேற்குலகுக்கு எழுந்த நிர்ப்பந்தங்களுமே காரணமாகும்.

இந்நிலைமையை உலகத் தமிழர் பேரவை, கடல் கடந்த தமிழீழ அரசு என்பன நன்றாகவே விளங்கி அதற்கேற்ற வகையில் செயற்பாடுகளை முடுக்கி விட்டுள்ளன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இந்நிலையைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாகும்.

சுடர் ஒளி

17, ஏப்ரல் - 23, ஏப்ரல், 2011

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14, டெலிபோன்: 0115738005
பாக்ஸ்: 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com

## தமிழர் தரப்புக்கு நல்ல சந்தர்ப்பம்

வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரின் போது மனித உரிமை மீறல்களும் அனைத்துலகச் சட்ட மீறல்களும் இடம்பெற்றன என்பது பக்கச் சார்பற்ற சுயாதீன அமைப்பு ஒன்றின் மூலம் இப்போது அனேகமாக உறுதியாகிவிட்டது.

போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுதல் தொடர்பாக, ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் பான் கீ மூன், தனக்கு ஆலோசனை வழங்கவென நியமித்த மூவர் குழு தனது அறிக்கையை அவரிடம் சமர்ப்பித்து விட்டது.

இந்த அறிக்கை பொதுமக்களுக்கு உடனடியாகப் பகிரங்கப்படுத்தப்படவில்லை. ஆனால் அதில் இலங்கை அரசுக்குப் பாதகமான விடயங்களே அதிகம் இருக்கின்றன என்பது அனேகமாக உறுதியாகிவிட்டது.

வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட சுருக்கமான செய்திக் குறிப்பு ''அடிப்படையில் முழுமையற்ற தொன்று'' என்று எடுத்த எடுப்பிலேயே அறிக்கையை நிராகரித்துவிட்டது.

''எந்தவிதமான உறுதிப்படுத்தல்களும் இன்றி, தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற உண்மைக்குப் புறம்பான ஆதாரங்களைக் கொண்டு, இடம்பெற்றிருக்கக் கூடும் எனக் கருதப்படும் போர்க் குற்றங்கள் குறித்து ஆராய்ந்துள்ளது ஐ.நா. அறிக்கை'' என்று வெளிவிவகார அமைச்சின் செய்திக் குறிப்புக் கூறுகிறது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை கடந்த செவ்வாய்க் கிழமையே பான் கீ மூனிடம் வழங்கப்பட்டது. ''மரியாதை நிமித்தம்'' அது இலங்கை அரசுடனும் உடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது. மறுநாள் புதன்கிழமை பகல் ஆதாரமற்ற அடிப்படையற்ற அறிக்கை என்று அதனை வெளிவிவகார அமைச்சு அறிவித்துவிட்டது.

அவசர அவசரமாக வெளிவிவகார அமைச்சு ஐ.நா. அறிக்கையை நிராகரிக்கிறது எனில், அதில் என்ன இருக்கும் என்பதை ஊகித்து அறிவது ஒன்றும் சிரமமானதல்ல. மனித உரிமை மீறல்களும் போர்க் குற்றங்களும் இடம்பெற்றிருக்கின்றன என்பதை அந்த அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது என்று எதிர்பார்க்கலாம். அதனாலேயே அது உண்மையற்ற ஆதாரங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்று அரசு கூறுகிறது.

''எங்கப்பன் குதிருக்குள்ள இல்லை'' என்கிற கதைதான் இது. அறிக்கை பகிரங்கப்படுத்தப்படாவிட்டாலும் அதற்குள் என்ன இருக்கின்றது என்பதை வெளிவிவகார அமைச்சின் அறிக்கை முன்கூட்டியே அறிவித்துவிட்டது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் இந்த அறிக்கை எந்தளவு தூரம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கப் போகின்றது என்பது கவனத்துக்குரியது.

ஐ.நா. அறிக்கையின் அடிப்படையில், போர்க் குற்றங்கள் குறித்து விசாரிக்க சர்வதேச நீதி விசாரணைக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று மனித உரிமைக் குழுக்கள் தொடர்ந்து வலியுறுத்துகின்றன. எதிர்கால நல்லிணக்கத்துக்கும், இலங்கையில் மனித உரிமைகள் மதிக்கப்படுவதற்கும் அது மிகவும் அவசியம் என்று அவை கூறுகின்றன. ஆனால் அப்படிப்பட்ட சர்வதேச விசாரணைக் குழு அமைக்கப்படுவதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவே.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் 'வீற்றோ' அதிகாரத்தைக் கொண்டுள்ள சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள், இலங்கையின் மனித உரிமை மீறல்கள் அதன் உள்நாட்டு விவகாரம் என்று கருதுவதால், கொழும்புக்கு எதிரான சர்வதேச விசாரணையை அவை ஆதரிக்க மாட்டா. இதனால் அத்தகைய ஒரு விசாரணைக்கு சாத்தியங்கள் மிகக் குறைவு

எனினும் இந்த அறிக்கையானது, இலங்கையின் இனப் பிரச்சினைக்கு கொழும்பு அரசு விரைந்து ஓர் அரசியல் தீர்வை வழங்க வேண்டும் என்று அதனை நிர்ப்பந்திப்பதற்கான வாய்ப்பை அனைத்துலக நாடுகளுக்கு வழங்கும்.

மேற்குலக நாடுகளும் சரி, இந்தியாவும் சரி, நடந்தவற்றைக் கடந்து நடக்கப் போகின்றவைகள் நல்லதாக அமையட்டும் என்ற மனப்போக்கிலேயே இலங்கை இனப்பிரச்சினையைக் கையாள்கின்றன. அவ்வாறு நடக்க இருப்பவற்றை நல்லவையாக்குவதற்கான அழுத்தத்தை வழங்குவதற்கு ஐ.நாவின் அறிக்கை உதவக் கூடும்.

அது தவிர இந்த அறிக்கை உடனடியாக, அதிரடியாக மாற்றங்களைக் கொண்டு வரும் என்று எதிர்பார்க்க முடியாது.

எனவே இந்தச் சந்தர்ப்பத்தை அரசுடன் பேச்சுக்களை நடத்திவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். போர்க் குற்ற விசாரணைக்கான வெளி அழுத்தங்கள் மற்றும் அரசியல் தீர்வைக் காண்பதற்கான அழுத்தங்களுக்குள் அரசு சிக்கிக் கொண்டுள்ள தருணத்தைப் பயன்படுத்தி, தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களைப் பெறுவதற்கான காய்களை கூட்டமைப்பினர் சரிவர நகர்த்த வேண்டும். அதுவே இன்றைய தேவை.



# மாந்த நேயத்துக்கு என்னாச்சு?

பூமுகன்

எல்லாரும் பஸ் ஓடுற பக்கம் திரும்புங்க, இப்பிடி நிண்டால் ஆக்களை ஏத்திறதில்லையா? அம்மா உங்களுக்கு புறம்பா சொல்லோணுமா? போங்கோவன் பின்னுக்கு, சரி சரி அக்கா அப்பிடியே கொஞ்சம் உள்ளுக்குப் போங்க. ஆஆ நைற் யாழ்ப்பாணத்து மினி பஸ்களில் கேட்கும் சத்தம் இது. உள்ளூர் பஸ் சேவை என்பதால் தூரக்குறைவு, நேரம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, தம்பி, தங்கச்சி, கள்ளன், காவாலி, எதிரி, துரோகி, என்று எந்தப்பாகுபாடும் இல்லாமல் எல்லாரும் ஒன்று சேர்ந்து மிக நெருக்கமாகப் பயணிக்கும் கலாசாரம் இது.

எல்லோரும் சேரும் இந்த இடத்தில் எல்லோரது மனசும் சகோதரத்துவத்துடன் ஒன்றாக மாறினால் நன்றாகத் தான் இருக்கும். ஆனால் சிலர் பொழுது போக்குவதற்கும் மற்றவர்களைச் சீண்டி சிற்றின்பம் அனுபவிப்பதற்கும் ஒன்று கூடுவதுதான் வேடிக்கையாக, மனிதத்துவத்தின் துரோகமாக இருக்கின்றது.

பாடசாலைகளுக்கு, கல்வி நிறுவனங்களுக்கு, வேலைக்கு என்று பெண் பிள்ளைகள் பஸ்ஸில் ஏறினால் அவர்களைப் பின்தொடர்ந்து செல்லும் சிலர் கெட்ட வார்த்தைகளைப் பிரயோகிப்பது, அவர்களை மெல்லச் சீண்டுவது. தொடுவது... போன்ற அநாகரிக செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இப்படியான மனோபாவம் உள்ளவர்களுக்கு, கூடப்பிறந்த தனது சகோதரிக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் அவர் அதற்காக என்ன செய்து கொள்வார் என்பதுதான் பொதுவான கேள்வி? அவருக்கு ஏற்படும் கோபமும், சினமும்தான் மற்றவர்களுக்கும் ஏற்படும். அப்படி இருக்க ஏன் அந்த கெட்ட மனதை மாற்ற முடியாது? சிற்றின்ப உணர்வை ஏன் சகோதரத்துவ உணர்வாக்க இயலாது? என்ற கேள்விகளுக்கு விடைகாணமுடியாமலே எங்கள் சமூகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

சிற்றூர்தி சேவைகளில் எல்லா வசதிகளையும் எதிர் பார்க்கமுடியாது. எப்படியாவது விரைவாகப் போய் சேர்ந்தால் அதுவே போதும் என்ற மனதுடன் தான் பயணிகள் பயணிக்கின்றனர். ஆனால் தூரப் பிரயாணங்களின்போது வசதி, வாய்ப்புக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. போக்குவரத்து சேவையின் சில விதிகளின்படியும் இவை கட்டாயம் அமையவேண்டும் என்பது நியமமாக இருக்கின்றன.

ஆனால் இந்த நியமங்கள் நிர்வாகத்தினராலோ, நடத்துபவர்களாலோ சரிவரப் பின்பற்றப்படுவதில்லை. பதிலாக காற்று நுழையும் இடமிருக்கும்வரை சனங்களை ஏற்றும் விருப்பம் இருக்கிறது. இதில் தனியார் பேருந்து சேவையாளர்களுக்கு அதிக பங்கு உண்டு.

சில நடைமுறைகளை பயணிகளே மாற்றிவிடுவதால் பஸ் உரிமையாளர்கள் அல்லது நடத்துநரும் அதைக் கண்டும் காணாமலும் விட்டுவிடுகின்றனர். பஸ்ஸின் முன்பக்கமாக விசேடமாக ஒதுக்கப்பட்ட இருக்கைகளை சாதாரண பயணிகள் அபகரித்துக் கொள்கின்றனர். வயோதிபர்களுக்கு, கர்ப்பிணிபெண்களுக்கு, அங்கவீனர்களுக்கு, மதகுருமார்களுக்கு என ஒதுக்கப்பட்ட இருக்கைகள் உண்மையில் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. அவர்கள் வேறு இருக்கைகளிலோ அல்லது நின்றோ பயணிப்பதைக் காணமுடிகின்றது.

இதில் சில நல்லுள்ளங்கள் தவிர பலர் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்வதே இல்லை. குறிப்பாக பிரத்தியேகமா இருக்கையில் இருந்துகொண்டே நாங்கள் தூர இடம் போகவேணும். வேற சீற் தராவிட்டால் எழும்பி இடம் கொடுக்க முடியாது என்று நடத்துநரிடம் பேரம் பேசும் மாந்தர்களையும் பஸ்ஸில் காணக் கூடியதாக இருக்கின்றது. அதைவிட கைக் குழந்தையுடன் ஏறும் தாய்மாரைப் பார்த்து ஏன் இதுகளையெல்லாம் தூக்கிக்கொண்டு வருவான் என்று சினப்போரையும் பார்க்கலாம்.

உண்மையில் விசேட தேவையுடையவர்களைப் பொறுத்தவரை எமது நாட்டில் எல்லோருக்குமே பூரணமாகத் தெரியும். நடந்த முடிந்த போர் நம்மிடம் விட்டுச்சென்ற பலவற்றுள் நம் கண்முன்னே தினமும் கண்டுகொள்ளும் இந்த விசேட தேவை உடையவர்கள் பற்றி நாம் எவ்வளவு கரிசனை காட்டுகின்றோம்? அவர்களுக்கு ஏன் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்? என்பது பற்றி யாரும் விளக்கம் தரத் தேவையில்லை. அப்படி இருக்கையில் ஏன்தான் பொது இடங்களில் சுயநலப்போக்கை சிலர் கடைப்பிடிக்கின்றார்கள் என்பது அறியாத புதிராகவே இருக்கின்றது.

இப்போதெல்லாம் பஸ்களில் ஒதுக்கப்பட்ட இருக்கைகள் இருப்பதேஇல்லை. இதனால் பயணிகளை குறைசொல்லவும் முடியாது.

அண்மையில் யாழ்ப்பாணம் நோக்கி வருவதற்காக கிளிநொச்சி பஸ் தரிப்பிடத்தில் பயணிகளை ஏற்றிக்கொண்டிருந்த சிறு வயதான நடத்துநர் ஒருவர் பிள்ளையை மடியில்வைத்திருக்காது சீற்றில் அமர்த்தியமைக்காக ஒரு தாயையும் வயது மதிக்கத்தக்க அவரது பிள்ளையையும் அரை டிக்கற்றுக்கு சீற் இல்லை என்று கூறி பஸ்ஸை விட்டு இறங்குமாறு கடுமையாக நடந்தகொண்டார். ஆனால் அந்தத்தாய் விடவில்லை. பிள்ளையை மடியில் வைத்திருப்பதில் தனக்கு பிரச்சினை இருப்பதாக அவர் கூறினார். கடைசியில் அவர் யுத்தத்தின் போது காலை இழந்த மாற்றுக் கால் பொருத்தியிருந்த விடயம் தெரியவந்தது.

வருமான நோக்கத்துக்காக இப்படி சில பஸ் உரிமையாளர்களும், நடத்துநர்களும் நடந்து நடந்தகொள்வதால் உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள் அவமதிக்கப்படும் சம்பவங்களும் நடைபெறுகின்றன.

சில நடத்துநர்கள் சாதுரியமாக குழந்தையோட வாற அம்மாக்கு யாராவது சீற் கொடுங்கோ என்று பயணிகளுக்கு வேலை கொடுத்துவிடுவர். இனி அந்த அம்மாவுக்கு பயணிகளில் யாரோ ஒருவர் கருணை காட்ட வேண்டும். இதில் தான் இடர்பாடுகள். சிலருக்கு அப்போதுதான் காய்ச்சல், தலையிடி வரும். அவர்கள் இயலாதவர்கள் போல சீற்றில் படுத்துகொள்வார்கள். இனி வேறு யாராவது... எப்படியாவது ஓர் நல்ல மனசுள்ளவர் யாராவது இரக்கமாட்டார்களா என்ன?

மறுக்கப்படும் இருக்கை, அதனால் மறந்துபோகும் மாண்புகள், அப்போதே மரணிக்கும் மனிதாபிமானம் என்பவற்றுடன் எமது சமூகம் படிப்படியாக இணைந்து கொண்டிருக்கின்றது. முதியவர்களுக்கு உதவுதல் என்ற வார்த்தை காலஓட்டத்தால் தேய்ந்து கொண்டே போகின்றது.

இந்த நெருக்கடியான சூழலில் மீண்டும் மனிதாபிமான முயற்சிகளை நாம் முன்னெடுக்க வேண்டும். பஸ்களில் ஒதுக்கப்பட்ட இருக்கைகளை மீளமைப்பது, அவர்களுக்கு இடமளிப்பது போன்ற செயற்பாடுகள் மட்டும்தான் மாணிக்கும் மனிதாபிமானமல்ல. இன்னும் எங்கள் சமூகத்தில் சகல பொது விடையங்களிலும், பொதுத் துறைகளிலும், பொதுச் சேவை நிலையங்களிலும் மாந்தநேயம் மலர வேண்டும். அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். இதற்காக நாம் புத்தகங்களைப் புரட்ட முடியாது.

நான் என்ற ஆணவத்தை விடுத்து நாம் என்ற மனதுடன் தான் மாந்தநேயத்தைப் பகிரமுடியும். ஆதற்காக நல்வழியில் மறந்துபோனவற்றை மீட்போமே *

# இந்தியாவின் இரட்டைவேட இராஜதந்திரம்



அனைத்துலக இராசதந்திரத்தில் குறிப்பிட்ட தருணத்தில் தங்களுக்கு அதிக பலனைத் தருவது எதுவோ, அதற்கமைவாகவே ஒவ்வொரு நாடும் பேசும். ஆனால் செயல்முறையில் பேச்சு ஒன்றாகவும் செயல் வேறு மாதிரியாகவும் இருக்கும்.

லிபியா மீதான கூட்டுப் படைகளின் தாக்குதலுக்கு இந்தியாவின் எதிர்வினை என்ற வடிவத்தில் மேற் குறித்த இந்த அனைத்துலக உண்மை மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது.

லிபியா மீதான படை நடவடிக்கை தொடர்பான கேள்வி ஐ.நா பாதுகாப்புச் சபையில் எழுந்தபோது, இந்தியா வாக்களிப்பில் பங்கெடுக்காமல் விலகியிருந்தது. அதேநேரம் லிபியா மீதான தாக்குதல் ஆரம்பித்த வேளையில் அது தனது கண்டனத்தை வெளியிட்டிருந்தது.

''குறிப்பிட்டதொரு நாட்டினுள் என்ன நடக்கிறதோ அது அந்த நாட்டின் உள்நாட்டு விவகாரமே. இதுபோன்ற நிலைமையில் வெளிச் சக்திகள் தலையிடுவதிலிருந்து விலகியிருக்க வேண்டும்'' என இந்தியாவின் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி குறிப்பிட்டிருந்தார்.

நல்லதொரு ஆலோசனை. இதே போன்ற ஆலோசனையை 1971 ஆம் ஆண்டு முகர்ஜியின் அரசியல் வாழ்க் கையில் முதலாவது பொறுப்பாளர் இந்திரா காந்திக்கு எவரும் வழங்க வில்லையே. இந்திராகாந்தியின் ஆட்சிக்காலத்தின் போது இந்தியா பாகிஸ் தானுடன் போரில் ஈடுபட்டதுடன் அதனை இரண்டாகவும் பிளவுபடுத்தி இருந்தது.

அடுத்த உதாரணம் இலங்கை. 1983ஆம் ஆண்டு நாட்டிலுள்ள சிறுபான்மை இனத் தமிழர்களுக்கு எதிராக கொழும்பு அரசாங்கம் இனக்கலவரத்தை நடத்தியபின்னர், தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு இந்திய மண்ணில் வைத்துப் பயிற்சிகளை வழங்கிய இந்தியா இலங்கையில் இனப்போர் கொழுந்துவிட்டு எரியும் வகையில் அவர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்பிவைத்தது.



இந்தியா இவ்வாறு நடந்துகொண்டதற்கு இலங்கையிலுள்ள தமிழர்கள் தொடர்பான கரிசனைதான் முழுமுதற் காரணம் எனக் கூறுவது முறையற்றது. திருகோணமலையில் தனது கடற்படைத் தளமொன்றை அமைப்பதற்கு ஐக்கிய அமெரிக்கா எடுத்த முயற்சிகளைத் தடுப்பதற்கான ஒரு உத்தியாகவும் இந்தியா இவ்வாறு தமிழ் ஆயுதக் குழுக்களுக்குப் பயிற்சிகளை வழங்கி அவர்களூடாக இலங்கை அரசுக்கு அழுத்தத்தினைக் கொடுத்தது.

1987ம் ஆண்டு இந்திய இலங்கை உடன்பாடு என்ற ஒன்றைக் கொண்டுவந்த இந்தியா, இந்த உடன்படிக்கை முறையாக நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காகத் தனது படைகளையும் இலங்கைக்கு அனுப்பிவைத்தது. 1990ம் ஆண்டின் இறுதிப்பகுதி வரை மூன்று ஆண்டுகள் இந்தியப் படையினர் இலங்கையின் வடக்குக் கிழக்கில் நிலைகொண்டிருந்தனர்.

திருகோணமலையில் தனது கடற்படைத் தளமொன்றை அமைப்பதற்கு ஐக்கிய அமெரிக்கா எடுத்த முயற்சிகளைத் தடுப்பதற்கான ஒரு உத்தியாகவும் இந்தியா இவ்வாறு தமிழ் ஆயுதக் குழுக்களுக்குப் பயிற்சிகளை வழங்கி அவர்களூடாக இலங்கை அரசுக்கு அழுத்தத்தினைக் கொடுத்தது.

நவம்பர் 1988ல் மாலைதீவின் மமூன் அப்துல் கயூமின் அரசாங்கதிற்கு எதிரான சதிப்புரட்சியை முறியடிப்பதற்காக இந்தியா படை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தது. அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி 1600 இந்தியப் படையினரையும் குறிப்பிட்ட சில கடற்படைக் கலங்களையும் அனுப்பியிருந்தார். இந்தியப் படையினரின் பிரசன்னத்தினைத் தொடர்ந்து இந்தச் சதிப்புரட்சி செயலிழந்தது.

இதுபோல வரலாற்றினை மீட்டுப் பார்க்கையில் தன்னுடைய அயல் நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா பலமுறை தலையிட்டிருப்பதை நாம் காணலாம்.

1950 ஆம் ஆண்டு திபெத்துக்குள் நுழைந்த சீனா, திபெத்தினது இறையாண்மையினைத் தனதாக்க முனைந்தபோது, இந்தச் சம்பவமானது தென்னாசியாவின் உறுதிப்பாட்டுக்குப் பாதகமாக அமைகிறது எனக்கூறி இந்தியா தனது 'கவனயீர்ப்பினை' வெளியிட்டிருந்தது.

இந்தியாவின் இந்தக் கருத்து மாவோ சேதுங் அரசாங்கத்திற்குக் கடும் எரிச்சலை ஏற்படுத்தியிருந்ததாம். அந்த நாள்வரை சிறப்பாக இருந்த இந்திய சீன உறவு சீர்குலைவதற்குக் காரணமாக அமைந்த முதலாவது சம்பவம் இது என அரசியல் ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டுருக்கிறார்.



''திபெத் மீதான தனது இறையாண்மையைச் சீனா செலுத்துவதென்பது சீன அரசாங்கத்தின் ஓர் உள்நாட்டுப் பிரச்சினை. இன்று அனைத்துலக ரீதியில் நிலவுகின்ற பதற்றத்தினை அதிகரிக்கும் வகையிலேயே இந்தியா இதனையொரு அனைத்துலகப் பிரச்சினையாகக் கருதிக் கருத்து வெளியிடுகிறது'' என அப்போது மாவோவினது செயலாளர்கள் இந்தியாவிற்குக் கூறியிருந்தனராம்.

1950ஆம் ஆண்டு இந்தியா நேபாளத்துடன் அமைதி உடன்பாடொன்றைச் செய்திருந்தது. இந்தியாவுடன் தரைவழித் தொடர்பினைக் கொண்டதொரு தேசமான நேபாளத்தின் இறையாண்மையை மீறுகின்றதொரு செயலாகவே அப்போது இந்த உடன்படிக்கை பார்க்கப்பட்டது.

இது நடந்து இரண்டு ஆண்டுகளின் பின்னர், சீனாவின் ஆதரவுடன் நேபாளத்தின் பொதுவுடமைக் கட்சி ஆட்சியைக் கைப்பற்ற முனைந்தபோது, ஏற்கனவே இந்தியா கையெழுத்திட்ட அமைதி உடன்பாட்டின் பிரகாரம் இந்தியா நேபாளத்தில் நேரடித் தலையீட்டை மேற்கொண்டது. இந்தியா நேபாளத்திற்குப் படைத்துறை அணிகளை அனுப்பியிருந்தது. இந்தியாவின் இந்த நடவடிக்கையை அப்போது பெரும்பாலான நேபாளிகள் எதிர்த்தனர்.

இதுபோல தன்னுடைய அண்டை நாடுகளில் அடிக்கடி நேரடித் தலையீட்டை மேற்கொண்ட வரலாற்றினைக் கொண்ட இந்தியா, ஏனைய நாடுகளின் விவகாரத்தில் தலையிட வேண்டாம் என ஐக்கிய அமெரிக்காவுக்கும் பிரித்தானியாவுக்கும் ஏன் ஆலோசனை வழங்குகிறது என்ற ஆச்சரியம் உங்களின் மனங்களில் தோன்றலாம். இது போல தனது அயல்நாடுகளில் தலையிடமுனைந்து, தான் சூடு கண்ட பூனையாகிய அனுபவம் ஏற்பட்டதால் தான் புதுடில்லி இவ்வாறு நடந்துகொள்கிறதோ?

இலங்கையில் இந்தியா நேரடித் தலையீட்டை மேற்கொண்டபோது விடுதலைப் புலிகள் இந்திய இராணுவத்திற்கு எதிராகத் திரும்பியிருந்தனர். எல்லை தாண்டிய பயங்கரவாதத்தினைச் சகித்துக்கொள்ளும் ஒரு தேசமாக பங்களாதேஸ் விளங்குகிறது. நேபாளம் பாகிஸ்தானுடன் இணைந்து செயலாற்றும் அதேநேரம் சீனாவோ இந்தியா தொடர்பில் தொடர்ந்தும் பகைமையுணர்வுடன் செயற்படுகிறது.

எவருமே வரலாற்றிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் அனைத்துலக இராசதந்திரத்தில் இன்னொரு வெளிப்படையான உண்மை.

*

# பெண்கள் தோல்வி உலகின் அனர்த்தமே

உலகத்தின் சகல பரிணாம வளர்ச்சிக்கும் சக்தியே அடிப்படையாகும். அருவமான சக்தி யும், உருவமான பெண்ணும் இவ்வுலகினை உயிரோட்டமாக வைத்துள்ள பேற்றினை நாம் பெற்றுள்ளோம். இறைவனின் ஐந்தொழில்கள் போலப் பெண்ணானவளும் படைக்கிறாள், காக்கிறாள், அழிக்கிறாள், அருளுகின்றாள், மறைத்தலில் பஞ்ச கிருத்திய வடிவினளாக மாட்சி தருகின்றாள். குழந்தைக்கு தாய்மையை வழங்கிப் படைக்கின்றாள். அம்மாவின் அர வணைப்பால் குழந்தையை தகுதியாக்கி, நேர்த்தியாக்கி, அறிவூட்டி,அழகூட்டி, அக் கறை யோடு உணவூட்டி பாதுகாக்கின்றாள். குழந் தைக்கு 'எது எவை' நல்லதோ அவற்றை உள் வாங்கி, எது எவை அல்லாத வையோ அவற்றை யெல்லாம் அழித்து, எப்படியெல்லாம் படித்து ஆளுமையுள்ளவளாக மிளிரக் கற்க வேண்டுமோ அவற்றையெல்லாம் அருளி, இறைவனுக்கும், சட்டத்திற்கும் ஒவ்வாத விடயங்களை எடுத் தியம்பி, தீமைகள் தீண்டாத வண்ணம் நியம, யதார்த்த வாழ்வினைத் தெளிவித்து, தகுதியுள் ளவளாக இலட் சியப்படுத்தும் மேதாவியா கப் பெண்குலம் விளங்கு கின்றது. மேற்சொன்ன அத்தனை விடயங்களையும் ஓர் ஆண் செய்வதா யின் கதைவேறு. அவர்களுக்கு ஐம்பதாயிரம் சம் பளம் கொடுக்க வேண்டியிருக் கும். இங்கு பெண் உழைத்தாலும் சரி, உழைக்கா விட்டாலும் சரி அவள் ஒவ்வொரு நாளும் ஆயுளைக் குறைத்துக் கொண்டே வாழ்கின்றாள். இருபத்திநான்கு மணித்தியாலமும் வேலைக்காகவே அவள் படைக் கப்பட்டிருக்கிறாள். இந்த உலகில் பெண்கள் மிகக் குறைவாக இருப்பார்கள் ஆனால் இலங்கையில் ஒரு பெண்ணின் சீதனம் ஒரு கோடியாகவும் அதனை - ''பெண்கள்- ஆண்களுக்கு'' கொடுக்க வேண்டிய தாகவும் இருக்கும்.

இறைவன் இருப்பது உண்மை எனில், சீதனக் கொடுமையை இயற்கை மாற்றியே தீரும். மேலும் எமது மதம், சட்டம் கடுமையான தண்டனைகளை முறையாக அமுல்படுத்தும் பட்சத்தில் தமிழர் பிரதேசங்கள் யப்பானாக உலக அரங்கில் மாறும். ஒரு வீட்டு வேலியையே அடைக்க முடியாத சம்பளத்தை வைத்துக் கொண்டு, தனது சொந்த உழைப்பில் ஒரு பெண்ணைக் காப்பாற்ற முடியாத ஒருவனுக்கு எத்தனை ராஜ மரியாதை? சொகுசாக இருந்து, எளி மையற்ற உல்லாச வாழ்வுக்கு ஊக்கமளிக்கும் எமது சமுதாயமானது தூர நோக்கோடு சிந்திக்க முடியாததாகி விட்டதோ என எண்ணத் தோன்றுகின்றது.

ஆதலால் பண்பாடுகளை வாழ வைக்கும் பணி வான, அறிவு சார்ந்த ஒரு பெண் ஒவ்வொருவரது இல்லற வாழ்விற்கும் கிடைப்பாளாக இருந்தால் ஆணுக்கு அதுவே சீதனமும், அழகும், வீரமுள்ள படைப்பும் ஆகும். ஆணின் - அந்த வீரம், ஒரு பெண் ணின் சீதனத்தில் விலைபோவதை, இறைவனும் இயற்கையும் ஒரு போதும் நியாயப்படுத்தமாட்டா!




**கே.எஸ். சிவஞானராஜா, கொக்குவில்.**

உலக அரங்கிலும் சரி,உள் வீட்டிலும் சரி, எந்த வொரு அரச நிறுவனங்களிலும் சரி, விண்வெளி விஞ்ஞானத்திலும் சரி, கல்வியிலும் சரி, பெண் என்ற பதம் தோற்றுப் போனதில்லை. தோற்றுப் போகவும் மாட்டாது. தோற்றுப் போக விடவும் கூடாது. காரணம் பெண் தோற்றுப் போனால் இயற்கையும் தோற்றுப் போய்விடும். இயற்கை தோற்குமானால் அனர்த்தங் களே மிஞ்சி நிற்கும்.

கண்ணகியை எண்ணிப்பார்க் கின்றோம். கண்ணனே இரங்கிய திரௌபதியை எண்ணி ஆலயம் தொழுகின்றோம். சீதையை எண்ணி வரலாறு படைக்கின்றோம். ஒவ்வொரு பெண்ணும் உரிய காலத்தில் தாயாகின்றாள். அவ்வாறு தாயாகும் ஒரு பெண்ணிடமிருந்து சீதனமாகப் பணத்தினைப் பெற்றுக்கொண்டு, பின்னர் அவளைத் தெய்வமாக சிருட்டிக்கின்றோம். பின்னர் மாதா, பிதா, குரு, தெய் வமெனப் போற்றுகின்றோம். சக்தியின்றி சிவமில்லை. பெண்ணின்றி பூமியுமில்லை, வெற்றியுமில்லை. எதையுமே சாதிக்கத் தூண்டுவதும் வேண்டுவதும் பெண்ணினமே. அத்தகைய பெண்குலம் உடை நடை பாவனை எளிமையில் புனிதம் பெறுவதாக. ✱

# பழமொழிகளின் அர்த்தத்தைப் புரியாமல் கண்ணெனப் போற்ற வேண்டியவர்களை இகழாதீர்கள்



எமது வாழ்க்கையில் ஏற்படும் எந்தவொரு பிரச்சினையின் போதும் எமது பெரியோர்களால் அதிகமாகக் கூறப்படும் ஒரேயொரு பழமொழி ''ஆவதும் பெண்ணாலே... அழிவதும் பெண்ணாலே'' என்பதாகும்.

ஒரு பெண் பிள்ளை யை பெற்றெடுத்து உணவூட்டி, தாலாட்டி வளர்ப்பதிலி ருந்து கல்வி கற்பித்து சமூகத்தில் நற்பிரஜை யாக வளர்க்கும் வரை அவள் செய்யும் தியாகம் சொல்லில் அடங்காதவை. அவ்வாறு தன் பிள்ளை கள், கணவன், பெற்றோர் சகோதரர்கள் என ஒவ் வொருவருக்காகவும் தன்னையே தியாகம் செய்யும் பெண்களைப் போற்றி மதிக்க வேண்டிய நம் நாட்டில் ''ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே'' என்று கூறுவது சரியானது தானா?

இந்தப் பழமொழிக்கு அர்த்தம் என்ன என்பது பல பேருக்குப் புரியாத ஒன்றாகவே இருக்கின்றது.

''ஆவதும் பெண்ணாலே...'' என்ற தொடர்மூலம் ஒருவன் பெண்களின் அறிவுரையினாலும், நற்செயல்களினாலும் வாழ்க்கையில் முன்னேறுகிறான் என்பதனையே இவ்வாறு கூறுவார்கள்.

அது போலத்தான் ''அழிவதும் பெண்ணாலே....'' என்பதற்கு அர்த்தம், ஒரு குடும்பத்துக்கு வரப்போகும் தீங்கை முன்கூட்டியே தெரிந்து அதைத் தடுத்து தன் குடும்பத்தைக் காப்பாற்றுவார்கள். இதைத்தான் அழிவதும் பெண்ணாலே என்பார்கள்.

இதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள் தமக்கென ஒவ்வொரு அர்த் தத்தை உருவாக்கிப் பலதையும் கூறிவருகின்றனர்.

எனவே இனியாவது இதன் அர்த்தத்தைப் புரிந்து கதைப்பது சிறந்தது. இவ்வாறு தவறான அர்த்தத்தை வைத்துக் கொண்டு கண்ணெனப் போற்ற வேண்டியவர்களை இகழ்ந்து விடாதீர்கள்.

**-சா. ஜிந்துஜா, கோண்டாவில்**

# வாசகர் நெஞ்சங்கள் பேசுகின்றன...

## ஆச்சரியம்

வீதிகளை நிரவும் புனிதங் கள். எம்மைக் கடந்தவை களை ஞாப கம் ஊட்டியது. அவரது கட்டு ரைகள் புது நடையில் உள்ளத்தை நிறைத்து உணர்வுகளைத் தொட்டு நிற்கின்றன. ஜெகன் எழுதும் உண் மைக் கதைகளும் எமக்கு ஆச்ச ரியம் ஊட்டுகின்றன.

**க.சிவபாலன்,**
**கிளிநொச்சி.**

## கஞ்சத்தனம் ஏன்?

உலகக் கிரிக்கெட் போட்டி ஓய்ந்தது. அதற்கு முன்பாகவே கலர்ப்படங்கள் நிறைந்த உள் பக்கங்கள் எங்கே தொலைந்தன. கறுப்பு வெள்ளைப் பக்கங்கள் கண்களை உறுத்துகின்றன. அனைத் துப் பக்கங்களையும் வர்ணத்தில் தருவீர்கள் என எதிர்பார்த்தோம். இப்பொழுது வேறு பத்திரிகை களில் கறுப்பு வெள்ளைப் படங் களைக் காணமுடியவில்லையே. உங்களுக்கு கஞ்சத்தனம்.

**தி.சியாமளன்,**
**கொட்டாஞ்சேனை.**

## பதில் இல்லையே

மங்கையர்க்கென ஒரு பக்கத்தை ஒதுக்குங்கள். நாங்கள் எங்கள் பிரச் சினைகளை எழுதுகிறோம். மருத் துவம் நன்று. சிறுவர் சுடரை நிறத் திலேயே நிரப்புங்கள். பித்தன் கேள்வி பதிலுக்கு நான் அனுப் பிய கேள்விக்குப் பதில் இல் லையே. ஏன்?

**க.மனோரஞ்சினி,**
**ஊர்காவற்றுறை.**

## கலருக்கு மாற்றுங்கள்

வண்ணப் படங்கள் நிறைய வடிவாக வந்த சிறுவர் சுடரைக் கறுப்பிலே கவர்ச்சியின்றி வெளி யிடுகிறீர்களே. உடனே அதனைக் கலருக்கு மாற்றுவீர்களா?.

**க.தர்சினி,**
**தரம்-4,**
**புனித ஜோண்ஸ் பொஸ்கோ.**

## நியாயமாகத் தெரிகிறதா?

வெள்ளைரோஜா முள் மிக வும் விறுவிறுப்பான தொடராக உள்ளது. கொலை, கொள்ளை செய்திகளை உள்ளடக்காத ஜன ரஞ்சகமான குடும்பக் கதை ஒன் றைத் தொடராகத் தாருங்கள். வாச கர்களைப் பயங்கரத்துக்குள்ளே யும் பயங்கர எண்ணங்களுக்குள் ளேயும் வைத்திருப்பது உங்க ளுக்கே நியாயமாகத் தெரிகிறதா?.

**வி.சுந்தரராஜன்,**
**மல்லாகம்.**

# மாற்று வழியை நாடும் நிலை வருமா?



இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்வதற்கான அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குழு ஆராய்ந்து வரும் விடயங்கள் பகிரங்கப்படுத்தப்படாத நிலையில்-

அந்தப் பேச்சுக் குறித்து பல்வேறு ஊகங்களைச் சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது. 46 கோரிக்கைகளைக் கூட்டமைப்பு முன்வைத்துள்ளது என்றும் - விடுதலைப்புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையையும் கூட்டமைப்பு முன்வைத்துள்ளது என்றும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

அந்த ஊடகம் வெளியிட்ட தகவல்களை மறுத்துரைத்துள்ள கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தனிநாடு கோரப்போவதில்லை. வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணத்தில் தமிழ் மக்கள் சகல உரிமைகளுடனும் வாழும் அதிகாரங்களையே கூட்டமைப்பு கோரி நிற்கின்றது என்று கூறியுள்ளார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ள அரசு - கூட்டமைப்புப் பேச்சில், அதிகாரப் பகிர்வு குறித்து முக்கியமாகப் பேசப்படவிருக்கின்றது.

கடந்த பேச்சுக்களில் கூட்டமைப்பு, அதிகாரப் பகிர்வு குறித்து எழுத்து வடிவில் சமர்ப்பித்த யோசனைகள் குறித்து அரசின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து அரசுத் தரப்பு கூட்டமைப்பிடம் தெரிவிக்கவிருக்கிறது.

இந்த நிலையில், பேச்சுக்களைக் குழப்பும் விதத்தில் தெற்கில் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

பேச்சு மூலம் தீர்வு ஒன்று எட்டுவதற்குத் தெற்குத் தலைவர்களுக்கு விருப்பமில்லாத காரணத்தால், தேவையற்ற விடயங்களைப் பத்திரிகைகளுக்கு வழங்குகின்றனர் என்று குற்றச்சாட்டு எழுகிறது.

தீர்வு விடயத்தில் கிளப்பப்படும் எதிர்ப்புக்களைச் சமாளித்து, தீர்வு ஒன்றை எட்டப் பிரதான கட்சிகளான சுதந்திரக் கட்சியினதும் ஐ.தே.கட்சியினதும் தலைவர்கள் முன்வரவேண்டும். அவ்வாறு அந்தத் தலைமைகள் முன் வராவிட்டால் தீர்வு எட்டப்படவே மாட்டாது. தொடர்ந்தும் நாட்டின் தேசிய பிரச்சினையான இனப் பிரச்சினைக்கான தீர்வு இழுபட்டுக் கொண்டு போகுமாயிருந்தால், நாட்டில் அமைதியும் இராது. பொருளாதார வளர்ச்சியையும் காண முடியாது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இன்றுள்ள நிலையில் முக்கிய செய்தி ஒன்றை அரசுக்கு விடுத்துள்ளார்.

சாத்வீக வழியிலான எமது முயற்சிகள் தோல்வியடையுமானால், நாமும் மாற்று வழியைத்தான் கடைப்பிடிக்க நேரிடும். இதனை எவராலும் தடுக்க முடியாது என்று சம்பந்தர் கூறியுள்ளார்.

சம்பந்தரின் இந்தச் செய்தியை அரசுத் தரப்பு சரியாகப் புரிந்து, விரைந்து தீர்வைக்காண முன் வரவேண்டும். இல்லையேல் ஏற்படப்போகும் விளைவுகளை அரசுதான் ஏற்கவேண்டிவரும்.

பேச்சை இழுத்தடித்துக் கொண்டு போகாமல் விரைந்து தீர்வை முன்வைக்க அரசுத் தரப்பு முன்வர வேண்டும் என்பதே சகலரதும் எதிர்பார்ப்பாகும். ✱

யாழவன்

# இலங்கையைக் கூண்டில் நிறுத்துகிறது அமெரிக்கா



வல்லரசு நாடுகளில் ஒன்றான அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் முறுகல் நிலை உச்சத்துக்கு வந்துள்ளது.

இலங்கைக்கு எதிராக அண்மைக் காலத்தில் கடும் தொனியிலான கருத்துக்கள் அமெரிக்க பக்கத்தில் இருந்து வந்த வண்ணம் உள்ளன.

அந்த நாட்டின் முக்கிய பதவியில் அமர்ந்துள்ள, இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதரான றொபேட் ஓ பிளேக்கே கடும் தொனியில் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார். நீண்டகாலம் இலங்கையில் அமெரிக்காவின் தூதராகப் பணியாற்றி, இலங்கையின் உள்ளும் புறமும் குறித்து நன்கு கற்றுத் தேர்ந்தவர் றொபேட் ஓ.பிளேக். இதன் காரணமாக அவரை இலங்கை விவகாரத்தைக் கையாள்வதற்காக அமெரிக்க அதிபர் ஒபாமா நியமித்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்களுடன் நல்ல உறவைப் பேணி வரும் அவர் அடிக்கடி இலங்கைக்குத் தலையிடி கொடுக்கும் கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

ஒபாமாவின் கடுந்தொனியிலான செய்தி ஒன்றுடன் கடந்த 8 ஆம் திகதி அவர் இலங்கை வரத் திட்டமிட்டிருந்தார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் வெளிநாட்டில் இருப்பதால் பிளேக்கின் விஜயத்தைப் பிற்போடுமாறு இலங்கைத் தரப்பு அமெரிக்காவிடம் கேட்டிருந்தது. அதன் காரணமாக அவரின் விஜயம் பிற்போடப்பட்டிருந்தது.

கடும் தொனியிலான அறிக்கையுடன் அவர் இலங்கை வந்து ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களைச் சந்தித்துவிட்டு, செய்தியாளர் மாநாடு நடத்தி இலங் கைக்கு எதிராகக் காட்டமான கருத்துக்களை வெளியிட்டால் அது புதுவருடக் கொண்டாட்டங்களைப் பாதித்துவிடும் என்பதால் பிளேக்கின் வருகையை இலங்கை பிற்போட்டது என்று செய்திகள் கசிந்துள்ளன.

அண்மையில் பிளேக் செனட் சபையில் ஆற்றிய உரையில் -

''..... இலங்கை அரசின் மனித உரிமைகள் தொடர்பான கவலை தரும் பதிவுகள், ஜனநாயக நிறுவனங்களின் பலவீனத் தன்மை மற்றும் செயற்பாடுகள், மேலும் தமிழ்ப் புலிகளுடனான போரின் இறுதிக் கட்டத்தை அது நடத்தியிருந்த விதம் ஆகியவை அதனை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் எமது நோக்கத்தைத் தடுத்துக் கொண்டிருக்கிறது.

அடிப்படை மனித உரிமைகள், ஜனநாயகம், ஆட்சி நிர்வாகப் பிரச்சினைகள் மற்றும் ஓர் உண்மையாக நிலைத்து நிற்கும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான உறுதியான செயற்பாடுகள் ஆகியவற்றில் முன்னேற்றம் ஏற்படும் வரையில் எமது பாதுகாப்பு ஒத்துழைப்பு பல்வேறு வகைகளிலும் வரையறுக்கப்பட்ட நிலையிலேயே இருக்க முடியும்'' என்று அவர் கூறியிருந்தார்.

பொறுப்புக் கூறும் தன்மை தொடர்பாக நம்பகமான அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எடுக்கத் தவறும் பட்சத்தில், சர்வதேச ஆணைக்குழு நியமிக்கும்படியாக அழுத்தங்கள் உருவாகும் என்றும் பிளேக் தெரிவித்துள்ளார். பிளேக்கின் இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் அமெரிக்க அரசின் செய்தி இலங்கைக்கு வரவிருந்தது.

அமெரிக்கா, இலங்கை தொடர்பாக எடுத்துள்ள கடும் போக்கான நிலைப்பாடு இலங்கைக்குப் பெரும் அச்சுறுத்தலாகவே இருக்கப்போகின்றது என அரசியல் விமர்சகர்கள் கருத்துக் கூறுகின்றனர்.

ஒத்திவைக்கப்பட்ட பிளேக்கின் இலங்கை விஜயம் மீண்டும் இடம் பெறும்போது, அமெரிக்காவின் கடும் தொனியிலான செய்தி வரத்தான் போகிறது. அதற்குப் பதில் கூறவேண்டிய இக் கட்டு நிலை இலங்கைக்குத் தோற்றுவிக்கப்படப் போகின்றது.

பிளேக்கின் கருத்துக்குப் புறம்பாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சு கடந்த 8 ஆம் திகதி வெளியிட்டுள்ள 40 பக்கங்கள் கொண்ட வருடாந்த அறிக்கையில் இலங்கையைக் கடுமையாகச் சாடியுள்ளது.

''இலங்கையில் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன. கொள்வனவுகள் மற்றும் அரச ஒப்பந்தங்களில் வெளிப்படைத் தன்மை இல்லை என்று சாடியுள்ள அந்த அறிக்கையில், ஜனாதிபதியின் குடும்பம் அரசியலில் ஆதிக்கம் செலுத்துகின்றது என்றும் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் சகோதரர்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகவும், பாதுகாப்புச் செயலாளராகவும், சபாநாயகராகவும் முக்கிய நிறைவேற்று அதிகாரப் பதவிகளை வகிக்கின்றனர் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதித்துறை நிறைவேற்று அதிகாரத்துக்கு உட்பட்டதாகவுள்ளது. பிரஜைகளின் அந்தரங்க உரிமைகளில் அரசு அத்துமீறி தலையிடுகின்றது என்றும் அந்த அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.


அமெரிக்க ராஜாங்க அமைச்சு ஒருபுறமும் வெளிவிவகார அமைச்சு மறுபுறமும் இலங்கையைக் காட்டமாகத் தாக்கி வருகின்றன.

அமெரிக்காவின் இந்த நிலைப்பாடு, இலங்கைக்குப் பெரும் நெருக்கடியாகத் தலையெடுத்துள்ளது.

அமெரிக்காவின் இந்தத் தலையீட்டில் இருந்து இலங்கை தப்பிப் பிழைக்குமா என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாகும். போருக்கு முடிவு கட்டிய நிலையில் இலங்கை மீது திணிக்கப்பட்டுள்ள ராஜதந்திரப் போரில் இருந்து இலங்கை எப்படி வெளியில் வரப் போகிறதோ தெரியவில்லை.

போருக்கு முடிவு கட்டிய நிலையில் இலங்கை மீது திணிக்கப்பட்டுள்ள ராஜ தந்திரப் போரில் இருந்து இலங்கை எப்படி வெளியில் வரப்போகிறதோ தெரியவில்லை.

போர் வெற்றியை வைத்து தேர்தல்களில், அரசமைப்புத் திருத்தத்தில் எல்லாம் வெற்றிவாகை சூடிய அரசு, அமெரிக்காவின் அச்சுறுத்தலில் இருந்து தப்பிப்பிழைக்குமா என்பதற்குக் காலம்தான் பதில் சொல்லவேண்டும். ✱



# தன்னினச் சேர்க்கையின் ஆதாரம்

உலகின் மிகவும் பழமையான தன்னினச் சேர்க்கையாளர் பற்றிய தகவல் இப்போது வெளிவந்துள்ளது. அவர் இறந்து 5000 வருடங்களின் பின் அவர் பற்றிய தகவல் தெரியவந்துள்ளது. பழம்பொருள் ஆய்வாளர்களால் பட்டப்பகலில் தோண்டி கண்டெடுக்கப்பட்ட ஒரு புதைகுழி மூலமே இந்தத் தகவல் கிட்டியுள்ளது. மீட்கப்பட்ட எலும்புக் கூட்டை அடிப்படையாக வைத்து அவர் புதைக்கப்பட்டுள்ள விதத்திலிருந்து அவர் ஒரு தன்னினச் சேர்க்கையாளர் என்ற முடிவுக்கு ஆய்வாளர்கள் வந்துள்ளனர். இந்த எலும்புக் கூடு கற்காலத்துக்குச் சொந்தமானது. செக் குடியரசில் ப்ராக் நகர சுற்றுப்புறத்திலேயே இந்த எலும்புக் கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது கி.மு.2900 த்துக்கும் 2500 க்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்கு உரியது. இந்தப் புதை குழிக்குள் காணப்பட்ட சில பாவனைப் பொருள்கள் இதற்கு முன் பெண்களின் புதைகுழிகளுக்குள் இருந்தே கண்டெடுக்கப்பட்டு உள்ளன. அந்தக் காலப்பகுதியில் ஆண்கள் பொதுவாக யுத்த ஆயுதங்களுடனும், தொழில் செய்யும் கருவிகளுடனுமே புதைக்கப்படுவது வழக்கமாகும். இது தவிர இந்த எலும்புக் கூடு புதைக்கப்பட்டுள்ள விதமும் வித்தியாசமாக உள்ளது. ஒரு பெண் புதைக்கப்படும்போது அந்தக் காலத்தில் பின்பற்றப்படும் அம்சங்களும், மரபுகளும் இதில் நிறைய காணப்படுகின்றன. ஆனால் இது ஒரு ஆணின் எலும்புக்கூடு. எனவே இவர் அந்தக் காலப்பகுதியில் வித்தியாசமான பாலியல் இயல்புடன் காணப்பட்ட ஒருவர் என்ற முடிவுக்கு ஆய்வாளர்கள் வந்துள்ளனர். ★



# வித்தியாசமான சிகிச்சைகள்

உலகம் பூராவும் மிகவும் வித்தியாசமான சிகிச்சை முறைகள் நடைமுறையில் இருந்து வருகின்றன.

இவற்றுள் அதிகமானவை பாரம்பரியம் பாரம்பரியமாக நீடித்து நிலைத்து வருபவை.

நம்பிக்கைதான் இச்சிகிச்சை முறைகளின் உயிர் நாடியாக இருந்து வருகின்றது. தோல் வியாதிகளைத் தீர்த்துக் கொள்ளவும் மனித உடலில் ஏற்படுகின்ற மரபு ரீதியான நோய்களைக் கட்டுப்படுத்தவும் இவ்வாறான மருத்துவ முறைகளை மேற்கொள்கின்றன. அவுஸ்ரேலில் வாழ்கின்ற கர்ப்பிணிப் பெண்கள் தமது வயிற்றுப்பகுதியை டொல்பின்கள் முத்தமிட்டால், பிறக்கும் குழந்தை புத்தி சாதூரியம் மிக்கதாக இருக்கும் என நம்புகின்றனர். ★



## ஜோக்ஸ்

இரண்டு நண்பர்கள் இரத்தப் பரிசோதனைக் கூடத்திற்கு சென்றிருந்தனர். முதலாம் நண்பர் தமக்கு இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டும் என்று சொன்னார். பரிசோதகர் படாரென்று கையில் ஓங்கி அடித்து விட்டு நன்றாக தேய்த்து விட்டு இரத்தம் எடுத்தார். இதைப் பார்த்துக்கொண்டிருந்த மற்ற நண்பன் வேகமாக ஓட ஆரம்பித்தான். அதைப் பார்த்த பரிசோதகர் கேட்டார். 'உன் நண்பர் ஏன் பரிசோதனை செய்யாமல் ஓடுகிறார்' என்று.

அதற்கு அவன் "சேர் அவன் பிளட் டெஸ்ட் எடுக்க வரவில்லை. யூரின் டெஸ்ட் எடுக்கத்தான் வந்தான்".





# பிரமாண்ட நாய்த் திருமணம்!

பிரிட்டனின் எஸக்ஸ் பிராந்தியத்தில் 20 ஆயிரம் பவுண்கள் செலவில் இரண்டு நாய்களுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. பெண் நாயின் சொந்தக் காரியான 32 வயதான லூயிஸ் ஹரிஸ் தான் தனது செல்லப்பிராணிக்கு இந்தத் திருமணத்தை திட்டமிட்டு முன்னின்று நடத்தியுள்ளார். இவரின் நாய்க்கு ஆறு வயதாகின்றது. பெயர் லோலா. பேஸ்புக் மூலம் நடத்தப்பட்ட போட்டியில் இந்த நாய்க்கான ஜோடி தெரிவு செய்யப்பட்டது. இந்தப் பெண்மணி நாய்களுக்கான அலங்கார நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றார்.

80 விருந்தாளிகள் இதில் கலந்து கொண்டனர். இந்தநாயின் எஜமானி பேஸ்புக் மூலம் தேர்வு நடத்தி தக்க துணையைத் தெரிவு செய்து பிரமாதமாக திருமணத்தையும் நடத்தி முடித்துள்ளார். ★


# ஏலத்தில் சாதனை படைத்த ஓவியம்

ஹாங்காங்கில் சோத்ப நிறுவனம் சார்பில் நடைபெற்ற ஏலத்தில், சீன கலைஞர் ஜாங் ஜியோகேங் வரைந்த ஓவியம், 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவிற்கு விற்பனையாகிப் புதிய உலக சாதனை படைத்துள்ளது. இதுகுறித்து சோத்ப நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அறிவியல் முன்னேற்றங்கள் தொடர்ந்து நிகழ்ந்த வண்ணம் இருந்தாலும், மக்களிடையே கலை நயம் மிக்க பொருட்களுக்கு எப்போதும் வரவேற்பு இருந்தவண்ணமே உள்ளது. அதற்குத் தாங்கள் நிறுவனம் மிகச்சிறப்பாக நடத்தி வருவதே சான்று எனக் கூறலாம்.

ஹாங்காங்கில் நடைபெற்ற ஏலத்தில், சீன ஓவியம் 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிற்கு ஏலம் ஆகி, புதிய சாதனை படைத்துள்ளது. பாலைவனம் போன்ற பரவலான இடத்தில் அடையாள உருவச்சிலைகளுடன் மூன்று அரை நிர்வாண உருவங்கள் இடம்பெற்றுள்ள அந்த ஓவியம், பார்வையாளர்களிடையே பெரும் பரபரப்பையும், மிகுந்த ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த ஓவியத்தை வாங்கிய பெல்ஜியத்தைச் சேர்ந்த கலைநுட்ப பொருட்கள் ஆர்வலர் பாரோன் கய் உல்லென்ஸ் கூறியதாவது, தான், கலைநயம் மிகுந்த பொருட்களை வாங்குவதில் மிகுந்த ஆர்வமுள்ளவன் என்றும், தான் இதுவரை 100க்கும் மேற்பட்ட இதுபோன்ற கலைநயம் மிக்க பொருட்களை வாங்கி உள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார். தான், தற்போது வாங்கியுள்ள இந்த சீன ஓவியம், தான் வைத்துள்ள 105 அரிய பொருட்களில் இதை மிகச்சிறந்ததாகக் கருதுவதாக அவர் தெரிவித்தார். ★



# வெள்ளை ரோஜா முள்

மு.சிவநேசன்
sivanesan@usa.com

**விறுவிறுப்பூட்டும் மர்மத்தொடர் – 9**

**சுழியன்ஸ்ஸிடம் அகப்படாமல் சாதுரியமாகத் தப்பித்துக் கொண்ட கரோல் சுழியன்ஸ்ஸால் தமது காருக்குள் கட்டிப் போடப்பட்டிருந்த டானியலுடன் சுழியன்ஸின் காரை எடுத்துக்கொண்டு போய் விடுகிறாள். துப்பாக்கிச் சூட்டுக் காயங்களால் அவதிப்படும் டானியலை காட்டின் ஒதுக்குப்புறமொன்றில் கிடத்திவிட்டு டாக்டரொருவரைத் தேடிச் செல்கிறாள்.**

பிரிய மனமின்றிப் புறப்பட்டாள். காட்டில் அவனைக் கைவிட்டுச்செல்ல வேண்டிய நிலைமைக்குக் கலங்கினாள்.இருண்டால் அவனைத் தனித்துக் காட்டில் விடலாமா?

பட்டப்பகலில் வீதிக்கு வர அவள் மனது கூசிற்று. எனினும் டானியலின் இக்கட்டான நிலைமை துணிவைத் தந்தது. மலைக்காட்டுப் பாதையைப் பிரித்தபடி கார் பறந்தது.

ஒருவாறு டாக்டர் ஜேம்ஸின் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். வழியில் எவரும் சிக்கவில்லை. டாக்டரின் மனைவிதான் கதவைத் திறந்தாள். அவளுக்கு ஐம்பது வயது இருக்கலாம்.

இவள் டானியலின் ஆபத்து நிலைமையைச் சொன்னதும் அவள் அவனை அங்கு கொண்டு வரும்படியும் டாக்டர் வெளியே வரமாட்டார் எனவும் வற்புறுத்தினாள். கரோல் தான் நேரடியாக டாக்டருடன் பேசப்போவதாக அடம் பிடித்தாள், துடித்தாள்.. எல்லா விவரங்களையும் வாய்விட்டுச் சொல்ல முடியாத நிலைமை.

இவள் டாக்டரின் அறைக்குள் செல்ல அனுமதிக்கப்பட்ட போது டொக்ரருடன் பத்திரிகையாளர் ஜோர்ஜ் கதைத்துக் கொண்டிருந்தார். அவர்கள் அப்போதைய பத்திரிகைச் செய்திகள் பற்றியே பேசியது இவளுக்குச் சற்று அச்சத்தைத் தந்தது. டானியல் தெரிவித்த அரைகுறையான தகவல்களை வைத்து மீதியை அவள் ஊகித்திருந்தாள்.

யாருக்கு என்னதான் தலைபோகிற காரியமென்றாலும் தான் வெளியில் வரத் தயாரில்லையென டாக்டர் தெளிவாக மறுத்துவிட்டார். துப்பாக்கிச்சூடு என்றதும் கேஸைத் துளைக்கத்தொடங்கி விட்டார் ஜோர்ஜ். அவள் அவசரத்தில் துடித்தாள். இதற்கிடையில் டொக்டரின் மனைவி டாக்டரை சைகை காட்டி அழைத்தாள். இருவரும் முணுமுணுத் தபடி இருக்க, ஜோர்ஜ் இரங்கிய இளகிய மனதுடன் அவளோடு பேசி டானிய லின் இடத்தையும் தேவையையும் அறிந்துகொண்டார். இனிச்செய்தி வரைய வேண்டும்.

டாக்டர் ஜேம்ஸின் மனைவி கரோலை அடையாளம் கண்டுகொண்டாள். பத்திரிகையில் தரப்படும் விவரங்கள் அவளுக்குப் பொருந்துவதாக உணர்ந்து விவரத்தை டாக்டரிடம் கூப்பிட்டுச் சொல்லிக்கொண்டிருந்த வேளை - பாவம் பத்திரிகைக்கார ஜோர்ஜ் அவசரமாகப் புறப்பட்டு விட்டார்.

அவர் தேடித்திரிந்த இருபத்தையாயிரம் டொலர் தமக்குக் கிடைத்துவிட்டதாகத் துள்ளினர் டாக்டரும் மனைவியும். பிளாற் போடப்பட்டு கொங்கிரீட் சுவரினால் சூழப்பட்ட டாக் டரின் கிளினிக் றூமின் வாசல் இரும்புக் கிறில் கதவு இறுக்கிப் பூட்டப்பட்டது. உள்ளே அகப்பட்டாள் கரோல். நிலைமை உணர்ந்து துடித்தாள்.

அவளின் நோய் நிலைமை தெரியும். எனவே அறைக்குள் போகத் துணிவு வரவில்லை. உள்ளே இருக்கும் தொலைபேசியை பாவிக்க டொக்டரால் இயலா மற்போய்விட்டது. யாராவது வரும்வரை காத்திருக்க வேண்டும். சிலவேளை அடுத்த பேஷன்ட் வர ஒருவாரம் கூட ஆகலாம்.

தடாலென டிஷ்ஷை தட்டிவிட்டு டாக் டரின் கையைப் பிடித்து இழுத் தாள் கரோல். இழுத்த இழுப்பில் அவர் உடம்பும் முகமும் கிறிலில் வந்து அடித் துக் கொண்டன. நெற்றி வெடித்து இரத் தம் பெருகியது. அவள் கையை விடவே இல்லை.

உற்சாகம் மேலிட தனது மனைவியைக் கட்டித் தழுவினார் டொக்டர். தேடித்திரியும் ஜோர்ச்சால் கூட அடையாளம் காணமுடியாத கரோலை அவர் மனைவி அடையாளம் கண்டுவிட்டாளே என்ற புழுகம்.

''கரோல். நீ தான் கரோல் ஒளிக்காதே. கலங்காதே. உனக்கு ஆபத்து ஒன்றும் வர விடமாட்டோம். வேண்டியதைக் கேள் தருகிறோம். அருகே பாத்ரூம் - வசதியா எல்லாம் இருக்கு. நிம்மதியாக இரு.

பிளீஸ் என்றார் டாக்டர்.

அவளோ எதுவும் பேசாமல் ''டானியல் டானியல்'' என்று மட்டும் கத்திக் கொண்டிருந்தாள். அவள் மூளையில் அந்தப்பொறி தட்டியது. வேகம் பிறந்தது. டாக்டரின் கிளினிக் அறையில் அகப்பட்டது எல்லாம் அடித்து நொறுக்கினாள். தொலைபேசி கூட தூள் தூள். நட்டம் இருபத்தையா யிரத்தைவிடக் கூட வரும் என்றார் ஜேம்ஸ் மனைவியிடம்.

பத்திரிகையாளர் ஜோர்ஜின் கார் விரைந்து கொண்டிருந்தது. கரோல் சொல்லிய இடக்குறிப்பைத் தேடிக் கண்டுபிடிக்க அதிக நேரம் பிடிக்கவில்லை. அங்கே அவள் கிடத்திய சீற் படுக்கையிலிருந்து உருண்டு விழுந்திருந்தான் டானியல். அவனது காயத்தைக் காட்டு எறும்புகள் மொய்த்துக் கடித்துக்கொண்டிருந்தன.

மயங்கிக் கிடந்த டானியலை உருட்டி நிமிர்த்தினான் ஜோர்ஜ். ஆளை அடையாளங் கண்டு கொண்டான் பண்ணைக்கார டானியல் - அவனது நண்பன்.

டானியல் மிகவும் நல்லவன். சோலி சுறட்டுக்குப் போகமாட்டான். இவனுக்கு என்ன நடந்ததோ? சிந்தித்தவாறே அவனைத் தூக்கிக் காரில் போட்டுக்கொண்டு புறப்பட்டான் ஜோர்ஜ்.

டானியலின் நிலைமையில் டாக்டர் ஜேம்ஸ் ஏதும் செய்வதற்கில்லை என உணர்ந்தான் ஜோர்ஜ். இது சிக்கலான கேஸ். காட்டுக் காய்ச்சலுக்கு குளிசை கொடுக்கும் ஜேம்ஸுக்கு டானியலைச் சமாளிக்க முடியாது.

கார் நகரத்தை நோக்கிய நெடுந்தொலைவுப் பாதையில் புறப்பட்டது. வழியில் சரணாலயம் சந்திக்கும் தேவைப்படின் அங்கே அவசர வைத்தியம் பார்க்கலாம். ஏன் டானியல் சுடப்பட்டான் எனச் சிந்தித்தவாறே காரைச் செலுத்தினான் ஜோர்ஜ். ஒருவேளை இதில் சுழியன்ஸ் தொடர்பு இருக்குமோ? யார் அந்தப் பெண்? அவளும் சுழியன்ஸ் குழுவில் இருப்பாளோ?

எதற்கும் டானியலை மறைத்து வைப்பது நல்லது. கொலை செய்ய முயன்றவர்கள் மீண்டும் தேடி வரக்கூடும். பத்திரிகைக்குச் செய்தி தருவதா? விடுவதா?

ஜேம்ஸின் கிளினிக் அறையில் கோர தாண்டவம் ஆடிய கரோல் அடங்க ஆறு மணி நேரம் பிடித்தது. அவள் ஓய்ந்த போது நேரம் இரவு எட்டு மணி.

என்றாலும் கதவைத் திறக்க மனம் இடம்தர வில்லை. விடிந்ததும் ஏதா வது செய்யலாம். அதுவரை அவள் அடைபட்டுக் கிடக்கட்டும் என நினைத்தார் ஜேம்ஸ்.

கரோல் அமைதியாக வெறித்தபடி வாசல் கிறிலைப் படித்தபடி நின்றாள். டானியலைப் பற்றியே அவளின் கவலை முழுவதும் இருந்தது. இவர்களிடம் கெஞ்சிப் பயன் இல்லை என நினைத்துக் கொண்டாள்.

ஒருவேளை புறப்பட்டுப்போன ஜோர்ஜ் டானியலுக்கு உதவி செய்திருக்கக்கூடும் என்ற நினைவு ஆறுதலைத் தந்தது. அறையில் இனி அடித்து நொறுக்க ஏதும் இல்லை. மின்சாரம் கூட நின்றுபோய் விட்டது. பொலிஸ் வருவதற்குள் தப்பிவிட வேண்டும். வழி இல்லையே என்ற ஏக்கம்.

நேரம் நள்ளிரவு 12.00க் கடந்து கொண்டிருந்தது. ஜேம்ஸ் உறக்கம் இல்லாமல் புரண்டு கொண்டு இருந்தான். அருகில் மனைவி குறட்டை விட்டபடி உறங்கிக் கொண்டிருந்தாள்.

பசிக்கிறது என்று முனகினாள் கரோல். ஜேம்ஸ் எழும்பி வந்து பிரிஜ்ஜை திறந்தார். ஒரு டிஷ்ஷில் அகப்பட்டதை அள்ளிவந்து கிறில் ஊடாக அவளிடம் நீட்டினார். உள்ளே இருள் கௌவி இருந்தது.

அப்போது அசுரபலம் புகுந்து கொண்டது அவளிடம். தடாலென டிஷ்ஷை தட்டி விட்டு டாக்டரின் கையைப் பிடித்து இழுத்தாள் கரோல். இழுத்த இழுப்பில் அவர் உடம்பும் முகமும் கிறிலில் வந்து அடித் துக் கொண்டன. நெற்றி வெடித்து இரத்தம் பெருகியது. அவள் கையை விடவே இல்லை.

பிசாசிடம் பிடிபட்டது போன்று ஜேம்ஸ் அலறிய அலறல் கேட்டு மனைவி ஓடி வந்தாள். ஆப்பிழுத்த குரங்கு போல கணவன் நிற்பது புரிந்தது.

'கதவைத் திறந்தால் கையை விடுகிறேன்' என்றாள் கரோல். அவள் இலேசில் இணங்கவில்லை. காலம் கடத்தவே நினைத்தாள். மீண்டும் இரண்டு முறை இழுத்து இழுத்து இரும்போடு அவரை மோத முயன்றாள் கரோல். இடது கையால் கிறிலைப் பிடித்தபடி தன்னை மோத விடாமல் காத்துக்கொண்டார் டாக்டர்.

நிலத்தில் கிடந்த பிளேட் கத்தியை காலால் எடுத்தாள். ஒரு கையால் இறுகப்பிடித்தபடி மறுகையால் டாக்டரின் கையில் கீறிக் கிழித்துக் கோலம் போட்டாள்.

*(இனியும் முள்ளுக் குத்தும்)*



# டயானாவின் மகனுக்கு கலியாணம்



டயானா என்ற இளவரசி 1997 ஆகஸ்ட் 31 ம் திகதி பாரிஸில் இறந்த பொழுது நான் அக்குறணையில் இருந்தேன்.

என்னுடைய சின்ன றேடியோவில் பி.பி.ஸியை பண்பலையில் விட இலங்கை வானொலி மறுத்தநேரம் மத்திய அலை வரிசையூடாக அந்தத் துக்ககரமான நிகழ்வை விக்கி விக்கி வந்த ஒலியினூடாகக் கேட்டேன்.

டயானா செத்தது எனக்கு பேரதிர்ச்சியாக இருந்தது. லண்டனுக்கும் எனக்கும் இப்பிடி ஒரு தொடர்போ, அல்லது லண்டனில் நான் வந்து இருப்பேனோ என்றெல்லாம் கனவில் கூட எண்ணியிருக்காத ஒரு காலத்தில் லண்டன் வாசியான டயானா மீது ஆழ்ந்த அனுதாபம் ஏற்பட்டது.

அதுதான் டயானாவின் கவர்ச்சி. உலகப்புகழ் பெற்ற இளவரசியாக டயானாவை ஊடகங்கள் சுற்றிச் சுற்றி காட்டி ஒன்றுமே தெரியாத கிராம மக்களிடம் கூட டயானாவைப் பற்றிய ஒரு மதிப்பு மிக்க அழகான விம்பம் பதிந்திருந்தது. உலகத்தின் செய்தியாகவே டயானா வாழ்ந் தார்; செத்தார்.

20 ஆம் நூற்றாண்டின் ஒரு உன்னத பெண்ணாகவே அவர் இருந்தார். வெறுமனே, 1981- ஜீலை 29 ஆம் திகதியன்று இளவரசர் சார்ள்ஸை கலியாணம் முடித்ததனால் ஏற்பட்ட பெயரும் புகழுமல்ல இது.

அதற்கு அப்பாலும் தன்னை உலகத்தின் கமெராக்களுக்கு முன்னால் நிலை நிறுத்திக் கொள்ள முயற்சி செய்த வண்ணமே அவர் இருந்தார்.

லண்டனில் தினமும் பத்திரிகைக்கு செய்தியை அள்ளி வழங்குகின்ற அமுதசுரபியாக டயானா இருந்திருக்கிறார்.

டயானா உலகத்தின் செய்தி நாயகியாகவே இருந்தார். இறக்கும் வரை, ஏன் இப்பொழுது அவர் செத்து 14 வருடங்கள் கழிந்த பிறகும் ஏதாவது ஒரு பத்திரிகை டயானா எப்படிச் செத்தார்? அதன் மர்மம் என்ன என்பது தொடர்பாக எழுதிக் கொண்டே இருக்கின்றது.

இங்கு லண்டனில் உள்ள பத்திரிகைகள் விற்பனையாக வேண்டுமானால் பிரபலங்களின் திருமண வாழ்வு மற்றும் அதற்குப் பிந்திய வாழ்வு தொடர்பான அவர்களின் மறைமுக தொடர்புகள் இன்னும் அவர்களின் செக்ஸ் வாழ்க்கை தொடர்பான செய்திகள் வந்தேதயாக வேண்டும்.

எப்படி முதலில் இலங்கையில் யுத்தம், குண்டு வெடிப்புத் தொடர்பான செய்திகளைச் சேகரிக்க பத்திரிகையாளர்கள் அலைவார்களோ, அதே போல இங்கு பிரபலங்களின் செக்ஸ் வாழ்க்கை தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்கு அலைந்து ஓடுவார்கள்.

அப்படியான செய்தி சேகரிப்பாளர்களுக்கு லட்சக்கணக்கான பவுண் பணமும் கொடுத்து பத்திரிகைகள் செய்திகளை வாங்கிப் பிரசுரிக்கும். அதனால் லண்டனில் மட்டுமல்ல, மேற்குலக நாடுகளில் Freelance Journalist கள் அதிகம். நல்ல செய்திக்கு, பரபரப்பான செய்திக்கு கொடுப்பனவும் அதிகம்.

சுயாதீன செய்தியாளர்கள், சுயாதீன படப்பிடிப்பாளர்கள் லட்சக்கணக்கான பவுண்களைச் செலவழித்து ஒரு செய்தியைப் பெற்றுக் கொள்வார்கள். ஏனெனில் அதனைப் பல மடங்கு விலைக்கு விற்கலாம். இங்குள்ள சுயாதீன புகைப்படப்பிடிப்பாளர்களின் கமெராக்களை இலங்கையிலுள்ள பத்திரிகை கமெராமென்கள் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது? அவ்வளவு விலை. தொழில் நுட்பம் கூடியது.

தூரத்தில் இருந்து பிரபலங்களின் கள்ளத் தொடர்புகளைப் புகைப்படத்தில் கபளீகரம் செய்து விற்பார்கள். இலங்கையில் அப்படி ஒரு செய்தியாளர் செய்தால் அடுத்த நாளே அவர் கொலை செய்யப்பட்டு வீதியில் போடப்படுவார்.

1981- ஜூலை 29 இல் உலகமே கண்டுவியந்த சார்ள்ஸ் டயானாதிருமணத்துக்குப் பிறகு அவர்களது வாழ்க்கை சுமுகமாகத்தான் போய்க் கொண்டிருந்தது.

ஆனால் அப்பொழுதே சார்ள்ஸ்- கமீலா உறவும் தொடர்ந்து கொண்டே வந்தது. உலகத்துக்கு கலியாணம், உறவுக்கு கமீலா; என்று வாழ்ந்த சார்ள்ஸ் 2005- ஏப்ரல்- 9ஆம் திகதி கமீலாவைத் திருமணம் முடித்தபோதுதான் உலகத்துக்கு இரகசியம் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது.

**உலகத்தைச் சுற்றிப் புரட்சிகளும் விடுதலையும் வேண்டி மக்கள் போராடும் பொழுது, இங்கு பிரிட்டனிலும் அரச குடும்பங்கள் இனிமேலும் தண்டச் செலவு செய்ய வேண்டாம் என்ற போராட்டங்கள் வெடிக்கும் அறிகுறி தென்படுகிறது.**

டயானாவுக்கும் சார்ள்ஸுக்குமிடையிலான மனக்கசப்பு குடும்பஒற்றுமையின்மைக்குப் பிறகு டயானாவுக்கு வெளியில் தெரிய ஐந்து பிரபல ஆண்களுடன் காலத்துக்குக் காலம் தொடர்பு இருந்து வந்தது.

அதில் சிலர் டயானாவின் அன்புக்குத் துரோகம் இழைத்து விட்டு டயானாவுடனான தங்கள் தொடர்புகளைப் பத்திரிகைகளுக்குப் பல மில்லியன் பவுண்களுக்கு புகைப்படங்களோடு விற்றுவிட்டார்கள். டயானா சார்ள்ஸிடமிருந்து விவாகரத்துப் பெற்ற 1996 ஆகஸ்ட் 28 ஆம் திகதிக்குப் பிறகு மிக மும்முரமாக டோடி அல்பயட்டை திருமணம் செய்வதற்கு ஏற்பாடு செய்தார். ஆனால் எல்லாம் அவர்கள் இருவரின் மரணத்தோடு முடிந்துவிட்டது.

பிரின்ஸ் வில்லியம் டயானாவின் பெரும் புகழின் தொடர்ச்சியாகவே இப்பொழுது இருக்கிறார். அவரோடு இணைந்ததால் கேற்றுக்கும் புகழ். இளவரசர் வில்லியத்துக்கும் அவரது காதலி கேற் மில்ட்டனுக்கும் இம் மாதம் 29 ஆம் திகதி கலியாணம்.

இங்கு பிரித்தானியாவில் வில்லியத்தின் திருமணத்திற்காக விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. பாடசாலைப் பிள்ளைகளுக்கு வெயிலெறிக்கும் இந்தக் காலத்தில் நீண்ட விடுமுறை கிடைத்தது பெரும் சந்தோஷம். அவர்கள் வழமை போல கிரிக்கெட் விளையாடவும், கால்பந்து விளையாடவும் மைதானங்களுக்குப் போய்விடுவார்கள். கடும் குளிர் அகன்று இப்பொழுது தான் நாங்கள் அரைக்கைச் சட்டை போடத் தொடங்கியிருக்கிறோம்.

இந்த இளவேனில் காலம் பிரின்ஸ் வில்லியத்துக்கும் அவரது காதலிக்கும் மறக்க முடியாத தருணமாக இருக்கும்.

ஆனால் இனித்தான் கேற் மில்ட்டனை புகைப்படப்பிடிப்பாளர்களும் செய்தியாளர்களும் சுற்றத் தொடங்குவார்கள். இப்பொழுதே கேற் மில்டனை பத்திரிகைகள் இன்னுமொரு டயானா என்று வர்ணிக்கத் தொடங்கி விட்டன. இனி கேற் மில்டன் நிம்மதியாக இருக்க முடியாது. பத்திரிகைகளுக்குத் தீனி போட்டுக் கொண்டிருக்க ஒருவர் கிடைத்து விட்டார். அவர் அழகாக வேறு இருக்கிறார்.

டயானா சார்ள்ஸ் திருமணம் போல இல்லாமல் கேற்றும் வில்லியமும் நீண்ட காலம் அன்பாக வாழ்வார்கள் என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

இளம் ஜோடி 10 வருடமாகக் காதலித்தார்கள். ஆனால் வலு மரியாதையாக இவ் வளவு காலமும் இருந்தார்கள். எனவே நன்றாகக் குடும்பம் நடத்துவார்கள் என்று ஆய்ந்து எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுதே வில்லியமும் கேற்றும் இணைந்து இருக்கும் படம் போட்ட தேனீர்க் கோப்பைகள், ரீ ஷேட்டுகள், நாணயம், தொப்பி, மோதிரம் என்பன இளைஞர்கள் மத்தியில் பிரபல்யமாக விற்றுத் தள்ளுகின்றன.

1000 வருட அரச ஆட்சியின் முக்கிய மற்றுமொரு தருணமாக வில்லியத்தின் கலியாணம் இருக்கும் என்று இங்குள்ள பிஷப் சொல்கிறார்.

**இளைய அப்துல்லாஹ்**

மாணவர்களின் கட்டண உயர்வு குறித்த கொந்தளிப்பு, வேலைவாய்ப்பின்மை, வரி அதிகரிப்பு, வீட்டுப்பிரச்சினை, அகதிகள் பிரச்சினை, பொருளாதாரச் சரிவு, ஆப்கானிஸ்தான், லிபியா யுத்தம், பொருட்களின் விலையேற்றம் என்று பெரும் சிக்கல்களில் பிரிட்டன் திணறிக் கொண்டிருக்கிறது.

2010 டிசெம்பர் 9 ஆம் திகதி மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தின் பொழுது இளவரசர் சார்ள்ஸும் அவரது இரண்டாவது மனைவி கமீலாவும் சென்ற கார் மீது மாணவர்கள் போத்தலால் தாக்கினார்கள். இதை மாணவர்களும் மற்றவர்களும் தமது வரிப்பணத்தை ஏப்பமிடும் அரச குடும்பத்தினர் மீது கொண்ட பெரும் கோபத்தின் குறியீடாகவே பார்க்கிறார்கள். ஆனால் பிரிட்டன் காலம் காலமாக விரும்பியோ விரும்பாமலோ பாதுகாக்கும் றோயல் மரியாதையை இன்னும் விடாமல் பிடித்துக் கொண்டிருக்கிறது.

அரச ஆட்சி தேவையா இல்லையா என்று ஒரு கருத்துக் கணிப்பு வைத்தால் அனேகமாக எங்களது வரிப்பணத்தைக் கொட்டி அரச குடும்பத்தினரை ஏன் வாழ வைக்க வேண்டும் என்று கருதி வேண்டாம்' என்று தான் வெள்ளைக்காரர் வாக்களிப்பார்கள். இளவரசர் சார்ள்ஸின் முதல் கலியாணத்துக்கு 48 மில்லியன் பவுண் செலவு.

வில்லியத்தின் திருமணச் செலவு பூக்கள் மற்றும் வெஸ்ட்மினிஸ்டர் அபேயை அழகுபடுத்தல் 8,00000 டொலர், கலியாணச் சாப்பாடு 67000 டொலர், மணமகள் உடுப்பு 64000 டொலர், கலியாண கேக் 80000 டொலர் என்று இதுவரை திருமணத்துக்கான செலவு மதிப்பிடப்பட்டிருக்கிறது.

யார் இளவரசர் வில்லியம்- கேற் திருமணச் செலவை வழங்குவது என்று இங்கு பிரிட்டனில் வாதங்களே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பிரித்தானியாவின் மக்கள் வரி வழங்குகின்றவர்கள். கலியாணத்தின் போது ஏற்படுகின்ற பாதுகாப்பு செலவு; கலியாணத்துக்கு வந்து ஒன்று கூடும் மக்கள் பாதைகளில் போடும் குப்பைகளைக் கூட்டுவதற்கான மேலதிக செலவு, போன்ற செலவுகளும் தம் தலைமீது விழுமே என வரி கொடுப்பவர்கள் அழுது கொண்டிருக்கின்றனர்.

எங்களிடம் பிடுங்கி ஏன் இப்படி ஒரு செலவு என்று அவர்கள் கேட்கின்றனர். ஆனால் இதனை எல்லாம் அரச குடும்பம் காதில் வாங்கிக் கொள்ளாது. உலகத்தைச் சுற்றிப் புரட்சிகளும் விடுதலையும் வேண்டி மக்கள் போராடும் பொழுது, இங்கு பிரிட்டனிலும் அரச குடும்பம் இனி மேலும் தண்டச் செலவு செய்ய வேண்டாம் என்று போராட்டங்கள் வெடிக்கும் அறிகுறி தென்படுகிறது.

பிரித்தானிய அரசும் ரொணியுடன் ஒரு சமரச ஆட்சிதான் செய்து கொண்டிருக்கிறது. ரொணி பிளேயர், பிரித்தானிய மகாராணிக்கு அதிர்ச்சி வைத்தியம் ஒன்றை டயானாவின் மரணத்தின் போது கொடுத்திருந்தார். பக்கிங்ஹாம் மாளிகையில் அரைக்கம்பத்தில் பிரிட்டிஸ் கொடியை பறக்க விடுதலில் ஏற்பட்ட முரண்பாடு அது.

ஆனால் அதற்குப் பிறகு அரசுக்கும் பிரித்தானிய மகாராணிக்கும் அரசல் புரசலான அதிருப்தி இருந்தாலும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் சமாளித்துப் போகிறது அரசாங்கம்.

மக்களின் அதிருப்திக்கு விலை கொடுக்க நேர்ந்தால் அது மிகப் பெரியதாக இருக்கும். அதைத்தானே உலகம் முழுக்க இன்று நாம் நிதர்சனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். * * *




# கவிதைப்புனல்

## தவிப்பு

என் ஒவ்வொரு இரவுகளும்
தேடுவது உன் கனவை
என் ஒவ்வொரு விடியலும்
கேட்பது போனில் உன் அழைப்பை
உன் ஓரப் பார்வை தனை
என் விழிகள் தேடும்
உதடு சொல்லத் துடிக்கும் போது
வார்த்தையின்றித் தவிக்கும்.

— கோபி.



## மிஞ்சியிருக்கும் கதை

உடல்களைக் காணவில்லை
குரல்கள் மட்டும் இன்னும்
மீதமிருக்கின்றன
தமிழ் நாட்டிலும்
ஹபறணக் காட்டிலும்
முல்லைத்தீவுக் கடலிலும்

— ஜெறி.

## தொலைய விடேன்



எதுவானாலும்
தொலைய விட்டது
கைக்குக் கிடைக்கும் போதும்,
உன்னைத்
தொலைக்க மனமில்லை எனக்கு!

— வளலாய் செல்வம்.

## சலிப்பின்றி இல்லை



அடை மழைக்குப் பிடித்தகுடை
அடிகழன்று உடைந்ததுபோல்.
ஆற்றில் குளிக்கையிலே
அணைக்கட் டுடைந்ததுபோல்.
சேற்றில் இறங்கையிலே
கழுத்துவரை புதைந்ததுபோல்.
பாட்டில் திளைக்கையிலே
சளிவந்தடைத்தது போல்.
கடித்துக் கொறிக்கையிலே
கடைவாய்ப்பல் லுடைந்ததுபோல்.
சோற்றில் கை வைக்கையிலே
சுவரிடிந்து விழுந்ததுபோல்.
எரிந்த விளக்கணைந்து
எங்குமிருள் சூழ்ந்ததுபோல்.
ஓய்வில் இருக்கையிலே
சாய்மனைக்கால் கழன்றது போல்.
எழுதிக் குவித்தவற்றை
எலி நறுக்கி விட்டதுபோல்...
எல்லாமே பாதியிலே!
எல்லாமே இடையினிலே!
எண்ணாத தடை இடரில்
தள்ளாடும் நிலையினிலே!
நம்பிக்கைப் படகேறி
நம்பிக்கைத் துடுப்படித்து
நம்பிக்கையுடன் படகை
நகர்த்தி வலித்து மன
வலுவேற்றிக் குறிக்கோளில்
முழுவெற்றிக் கொடியேற்று.
சலிப்பின்றி வாழ்வில்லை
செழிப்படையவைத்திடுவீர்!

-- ஏறாவூர் தாஹிர்.

## புது வருடங்கள்



புதுவருடங்கள்
வந்துபோகின்றன.
விலையேற்றம்
கொலையேற்றம்
கடல் சீற்றம்
களவு, குற்றம் என
மக்கள் ஏமாற்றங்களுடன்
புதுவருடம்
புதுப் புது வரலாறுகளைப்
படைத்துச் செல்கின்றன.

- அ.சி.

## ஒன்றுபடுக

நம் இறுமாப்பு, எமது பெருமிதம்
எங்கள் பூரிப்பு இவையாவும்
எம்மைப் பப்பாமரத்தின்
எட்டாத் தூரத்துக்கு உயர்த்தியது
எமக்குப் பப்பாமரத்தின் அருமை தெரிய...
இன்று தரையிலிருந்து மரத்தைப் பார்க்கிறோம்.

எம்மை ஆண்டவன் பலபேர்
எமக்கு ஆண்டவனும் பலபேர்
பாண்டியன் ஆண்டால் என்ன
வேண்டியவன் ஆண்டாலென்ன என
விவேகமற்று இருந்து விட்டோம்

எங்கே நாம் தவறிழைத்தோம்?
எமது பட்டறிவுதான் என்ன?
நீ தர, நான் கைநீட்டி வாங்க
சுதந்திரம் மற்றும் உரிமைகள் ஒன்றும்
பிள்ளையார் கோயில் சுண்டல் அல்ல!

மக்கள் நாம் ஒன்றுபட்டுப்
போராட வேண்டும்.... போராடினால்தான்
எதையும் பெறமுடியும்.
ஒரு சிறு விதை கூடப் போராடியே
பூமியைப் பிளந்து வெளிவந்து
பெரும் விருட்சமாகிது.
இதுவே எமக்கான பகுத்தறிவு!.

பு.க. பாக்கியா றிஸ்வியா.
பா/பலாலி ஆசிரிய கலாசாலை.



# நமீதா ஆவாரா ஹன்சிகா?



மாப்பிள்ளை என்ற திரைப்படத்தின் மூலமாக தமிழ் சினிமாவுக்கு வந்துள்ள புதுப் பொண்ணு ஹன்சிகா மோத்வானி, இன்னொரு நமீதாவாக கலக்குவார் என்று கொலிவூட்டில் ஏக மனதாகக் கூறுகிறார்கள்.

மாப்பிள்ளை திரைப்படம் வெளியாகி சில நாட்கள்தான் ஆகின்றன. ஆனால் அதற்கு முன்பாகவே கை நிறையப் படங்கள் ஹன்சிகாவைத் தேடி வந்து அவரைத் திக்குமுக்காட வைத்துவிட்டது.

விஜய்யுடன் வேலாயுதம், ஜெயம் ரவியுடன் எங்கேயும் காதல், உதயநிதி ஸ்டாலினுடன் ஒரு கல் ஒரு கண்ணாடி எனப் பல படங்களில் நடத்துக்கொண்டிருக்கிறார். தெலுங்கிலும் ஹன்சிகாவுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. இப்படி இவரைத் தேடி நிறையப் பட வாய்ப்புகள் வந்துள்ளதால், முன்னணி நடிகைகளான தமன்னா போன்றவர்களின் வாய்ப்புகள் குறைய ஆரம்பித்துவிட்டதாம்.

பார்ப்பதற்கு நெய்யினால் செய்யப்பட்ட பொம்மை போல கொளுக்மொளுக்கென்று இருக்கிறார் ஹன்சிகா. ஆனால் நடிப்புதான் அவ்வளவு சிறப்பாக அமையவில்லையாம். எனவே இவர் நமீதா போன்று கவர்ச்சியைப் பிரதானமாகக்கொண்டு கொலிவூட்டை ஒரு கலக்குக் கலக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஹன்சிகாவுக்கு முன்னணி ஹீரோக்களின் ஆசீர்வாதம் பூரணமாக இருப்பதால் அத்தனை ஹீரோக்களுடனும் ஒரு படத்திலாவது நடித்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# முடிவை மாற்றினார் வி

புதிய இயக்குநர்களின் படங்களில் நடிப்பதில்லை என்பதை ஒரு கொள் திருக்கிறார் விக்ரம். நீங்களும் ஒரு காலத்தில் புது நடிகர்தானே? உங்கள் கொள் வைத்திருந்தால் உங்கள் கதி என்னாகியிருக்கும் என்று நேரடியாகவே அவரிடம் கேட்டிருக்கிறார்கள்.

அதற்கு அவர் அப்போது சரியான பதிலளிக்கவில்லை. ஆனால் ஆச்சர்யப்படத் இயக்குநர் ஒருவரிடம் கதை கேட்டு நடிக்கவும் சம்மதம் சொல்லியிருக்கிறாராம்.

கண்ணன் என்ற அந்த இயக்குநர், சிங்கம் புலி படத்தைத் தயாரித்த திற சொன்னாராம். நல்ல கதை என்று பாராட்டிய தயாரிப்பாளர், தாணுவின் உதவ் விக்ரமிடம் கதை சொல்ல அனுப்பினாராம். விக்ரமுக்கும் கண்ணன் மேல் நம்பிக் விரைவில் அந்தப் படத்தில் நடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நீண்ட இடைவெளிக்குப் பின்னர்

சிறுத்தை வெற்றிக்குப் பின்னர் ரசிகர்கள் அடுத்து அடுத்ததாக கார் நடிக்க படத்தைப் பற்றி அறிய ஆவலாக இருக்கிறார்கள். அடுத்த படங்கள் பற்றி கார்த் தாவது, ''இயக்குநர் ஷங்கர் தயான் இயக்கும் 'சகுனி' படத்தில் நடிக்கிறேன். அடு சுராஜ் இயக்கும் படத்தில் நடிக்கத் திட்டமிட்டுள்ளேன். சிறுத்தை படத்துக்குப் நீண்ட இடைவெளி ஏன் என்று கேட்கிறார்கள். எனக்குப் பிடித்த வேடங்களைத் செய்து நடிப்பதற்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன். சிறுத்தை படத்துக்குப் நான் நடிக்க ஆர்வமாக உள்ள வேடம் எனது ரசிகர்களுக்குப் மிகவும் பிடித்த ஒ இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்தேன்'' - என்றார்.

இயக்குநர் ராஜேஷ் இயக்கும் 'காகித கப்பல்' படத்தில் நடிக்க உள்ள கார்த்தி, ஒ யில் மாதவன்-கங்கனா இணைந்து நடித்த 'தனு வெட்ஸ் மனு' படத்தின் தமிழ் ரீமேக்கில், மாதவன் நடித்த வேடத்தில் நடிக்கப் போவதாகக் கூறுகிறார்கள்.

# பரீட்சை எழுதினார் அமலா பால்

'வீரசேகரன்' என்ற திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமாகி, 'சிந்து சமவெளி' மூலம் பிரபலமாகி, மைனா மூலம் வெற்றி நாயகி ஆன நடிகை அமலா பால், நடித்துக் கொண்டே கேரளாவில் ஒரு கல்லூரியில் படித்து வந்தார். தமிழில் அடுத்தடுத்துப் பட வாய்ப்புகள் வந்ததால் படப்பிடிப்புக் காரணமாக கல்லூரிக்கு அதிக நாட்கள் போக முடியாமல் போய்விட்டதாம். இதனால் சமீபத்தில் நடந்த கல்லூரிப் பரீட்சை எழுதுவதில் அமலாவுக்கு சிக்கல் ஏற்பட்டது. இதையடுத்து கல்லூரி நிர்வாகத்திடம் பேசி அபராதத் தொகையைச் செலுத்தி, தேர்வு எழுதி முடித்திருக்கிறார்.



# தமிழுக்கு வந்தார் நித்தியா

மலையாளத்திலிருந்து இன்னொரு ஹீரோயின் தமிழுக்கு வந்துள்ளார். பெயர் நித்யா மேனன், அறிமுகமாகும் படம் 180. சத்யம் சினிமாஸ் தயாரிப்பில் உருவாகியுள்ள படம்180. சித்தார்த் நாயகனாக நடித்துள்ளார். நித்யா மேனன் நாயகியாக நடித்துள்ளார். மலையாளத்தில் திறையப் படங்களில் நடித்துள்ள நித்யா, கன்னடம், தெலுங்கிலும் நடித்துள்ளார். இப்போது தமிழுக்கு வந்து சேர்ந்துள்ளார். தனது அனுபவம் குறித்து அவர் கூறுகையில், தமிழ் சினிமாவுக்கு வந்துள்ளது எனக்கு பெரும் மகிழ்ச்சியாக உள்ளது. தமிழ் சினிமாவில் நடிப்பது என்பது பெருமைக்குரிய ஒன்று.

இப்படத்தில் நான் புகைப்பட பத்திரிகையாளராக நடித்துள்ளேன். உண்மையில் நான் ஒரு புகைப்பட பத்திரிகைக் கல்லூரி மாணவி. எனவே இந்த வேடத்தில் நடிப்பதில் எனக்குச் சிரமம் ஏற்படவில்லை. இப்படம் ஒருகாதல் கதை. இப்படத்தின் கதையைக் கேட்டதுமே பிடித்துவிட்டது. அழகாக நடித்துள்ளேன் என நினைக்கிறேன்.

தமிழ் ரசிகர்களுக்கு நான் புதுமுகமாக இருப்பதால், ரசிகர்களைத் திருப்திப்படுத்த வேண்டியது சவாலான காரியம். இருந்தாலும் தமிழ் ரசிகர்களின் விருப்ப நாயகியாக நான் மாறுவேன் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார் நித்யா மேனன்.



## ...ர் விக்ரம்

...ரு கொள்கையாகவே வைத்
...ள் கொள்கையைப் பாலாவும்
...அவரிடம் பத்திரிகையாளர்கள்

...ர்யப்படத் தக்க வகையில் புது
...கிறாராம் விக்ரம்.
...றிந்த நிறுவனத்திற்குக் கதை
...ின் உதவியோடு கண்ணனை
...ல் நம்பிக்கை வந்திருக்கிறது.

## ...னர் கார்த்தி

... நடிக்க... ருக்கும்
...ி கார்த்தி தெரிவித்
...றன். அடுத்து இயக்குநர்
...துக்குப் பின்னர்
...ங்களைத் தெரிவு
...த்துக்குப் பின்னர்
...டித்த ஒன்றாக


...ார்த்தி, ஹிந்தி
...் தமிழ்
...ர்கள்.

## தீபிகா படுகோனின் தங்கையா சஞ்சிதா படுகோனின்?

ஜித்தன் ரமேஷ் ஹீரோவாக நடித்துள்ள 'பிள்ளையார் தெரு கடைசி வீடு' படத்தில் நாயகியாக சஞ்சிதா படுகோன் நடித்துள்ளார். இயக்குநர் கே.எஸ்.ரவிகுமார் இயக்கத்தில் ரஜினியுடன் இணைந்து நடிக்கும் தீபிகா படுகோனின் சகோதரி தான் சஞ்சிதா என்று கோலிவுட்டில் தகவல் பரவியிருந்தது.

இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், ''என்னைப் பார்த்து, தீபிகா படுகோனும் நீங்களும் சகோதரிகளா என்று கேட்கிறார்கள். எனக்கும் தீபிகாவுக்கும் எந்தத் தொடர்புமில்லை. நான் வேறு அவர் வேறு. எங்கள் இரண்டு பேருடன் ஒட்டி இருக்கிற 'படுகோன்' என்று பேர்தான் பலரை இவ்வாறு யோசிக்க வைத்திருக்கலாம் - என்றார்.






## நாக்கு முக்காவை மறக்காத ஸ்ரேயா

ஐ.பி.எல். கிரிக்கெட் ஆரம்ப நிகழ்வில் ஷாருக்கான், ஸ்ரேயாவின் ஆட்டம்தான் ரசிகர்களை உற்சாகப்படுத்தியுள்ளது. விளையாட்டையும், தெருக்கூத்தையும் சேர்த்ததுதான் இந்த ஐ.பி.எல் ஆட்டமோ என்கின்ற அளவுக்கு எல்லா அணியிலும் நடிகர், நடிகைகளின் ஆதிக்கம் கொடி கட்டிப் பறக்கிறது.

இந்த முறை கோடம்பாக்கத்திலிருந்து யாரையும் அழைக்காத சென்னை சூப்பர் கிங்ஸ் அணியினர், கடைசி நேரத்தில்தான் ஸ்ரேயாவை அழைத்தார்களாம். இப்படி ஒரு அழைப்பு வரும் என்பதை அவரும் எதிர்பார்க்கவில்லை. உடனடியாக விமானம் மூலம் சென்னைக்குப் பறந்தோடி வந்தார் ஸ்ரேயா. அதனால்தான் ஒத்திகை ஏதும் பார்க்காமல் தனக்கு நன்கு பழக்கமான நாக்கு முக்காப் பாடலைப் பாடி ஆடினாராம்.

இந்தப் பாடலுக்கு பின்னர் ஏராளமான ஹிட் பாடல்கள் தமிழில் வந்திருந்தாலும், ஸ்ரேயா இன்னும் நாக்கு முக்காவை மறக்கவில்லையே என்று ரசிகர்கள் முணுமுணுத்தபடி கலைந்துசென்றார்களாம்.



# சிறுகதை

# பசி

ஸபீர் ஹாபிஸ்
ஏறாவூர்

வழமை போல் அன்றும் விடிந்தது. ஆனால் அவன் எழுந்திருக்கவில்லை. மீளவும் எழ முடியாத நிரந்தரத் தூக்கம் அவனது உயிரைத் தின்று உடலை எச்சமிட்டுச் சென்றுள்ள அதிர்ச்சியான செய்தி அவனைச் சூழ வாழும் எவரையும் இன்னும் சென்றடையவில்லை.

இரவு, தனது குடிசைக்குள் அவன் காலடி எடுத்து வைத்த போது நள்ளிரவு தாண்டியிருந்தது. இருளுக்குள் புதையுண்டு தெரிந்தது அமாவாசை இரவு. வறுமையும் வெறுமையுமாக வரவேற்ற குடிசைக்குள் எதற்கும் திராணியற்றுத் துவண்டிருந்த தனது உடலை நுழைத்தான். பின்னந்தலை விண்விண்ணென்று வலித்தது. அதன் பின் குவளையில் தண்ணீர் மொண்டு கடகடவென குடித்ததும் களிமண் தரையில் மல்லாந்து விழுந்ததும், காதினோரத்தில் ரீங்காரமிட்ட நுளம்பைச் சகித்துக் கொண்டே கண்களை மூடியதும் மட்டுமே அவனுக்குத் தெரியும். அவனது உடலின் மொத்த உறுப்புக்களையும் வாட்டி வதக்கிக் கொண்டிருந்த வழக்கமான பசியின் கொடூர வேதனைக்குள் அவனது உயிர் பிடுங்கப்படும் உச்சக்கட்ட வலி சுவடின்றி அமிழ்ந்து போயிற்று.

சில்லிட்ட தேகத்துக்குள், உறிஞ்ச முடியாதவாறு உறைந்து போன அவனது இரத்தத் துளிகளை சபித்துக் கொண்டே மேலெழுந்த நுளம்பு, அவனது மரணச் செய்தியை உறுதிப்படுத்திச் சென்றது.

அவன் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த வெகுமதி இது. பெற்றோரின் தேகங்களையும் வாழ்ந்த வீட்டையும் அவனது வலது கையையும் மூளைப்பகுதியின் சில நரம்புகளையும் சிதைத்தழித்த குண்டுத் தாக்குதலின் போது உதிர்ந்த முதலாவது கண்ணீர்த் துளியிலிருந்து அவன் இதனை எதிர்பார்க்கத் தொடங்கியிருந்தான். பெற்றோர், வீடு, கல்வி, புத்தி இப்படி எல்லாவற்றையும் இழந்த போதும் பசியை மட்டும் இழந்து விடாதிருந்தது அவனது வயிறு. காலப் போக்கில் எல்லோருக்கும் வெறுப்பான ஒருவனாக அவனை ஆக்கிற்று. பசியைப் போக்குவதொன்றே வாழ்க்கை இலட்சியமென வரித்துக் கொண்ட நாள் முதலாய் அவன் மிகவும் அதிகமாக அதனை எதிர்பார்க்கத் தொடங்கி விட்டான்.

மூன்று நாட்களாக தண்ணீரைத் தவிர வேறெதையும் கண்டிராத அவனது உணவுக் குழாய்களின் சுருக்கம், ரோமம் உதிர்ந்த அவனது வயிற்றை முதுகுடன் இழுத்துக் கட்டிவிட்டிருந்தது. ஆழமான பள்ளங்களுள் இமை மூடிய கண்களிருந்தன. நிம்மதிச் சுவாசத்தை எதிர்பார்த்து ஆயாசப்பட்டுக் கொண்டிருந்த அவனுக்கு இந்த சுவாசமற்ற நிம்மதியென்பது புதுமையானதுதான்.

நேற்றுக் காலை கண்விழித்த போது, எழுந்து செல்வதற்கு எந்த வலிமையும் அவனது உடலில் இருக்கவில்லை. இருந்தும் எதிர்பார்ப்புடன் நப்பாசையுடனும் எழுந்து நடந்தான். சிரமப்பட்டு இருமிக்கொண்டே முன்னால் தெரிந்த ஹோட்டலை அண்மித்த போது அவனது நாவு புறுபுறுத்தது இரைப்பைக்குள் எச்சிலூறிற்று.

கடைமுதலாளி, அவனை அடையாளங் கண்டு முகம் சுளித்தார். கோபக் கண்களுடன் தள்ளிப் போ என்று விரலால் சைகை காட்டியதோடு, பக்கத்தில் நின்றவர்களிடம் அவனைச் சுட்டிக் காட்டி எதையோ கூறிவிட்டு 'ஹாஹா' வென உடல் குலுங்கச் சிரித்தார்.

அவன் சற்று விலகி நின்று கொண்டான். சிறுவயதில், தந்தையின் விரல்களைப் பிடித்துக்கொண்டு, அவரது ஹோட்டலுக்கு வரும் போது, முதலாளியின் மகன் என்று பவ்யமாக ஒதுங்கி நிற்கும் ஒரு வேலைக்காரன், இன்று தன்னை விரட்டுவதைப் பார்க்கையில் முன்பெல்லாம் அவனுக்கு விசும்பல் வரும். இப்போது அவையெல்லாம் மனதுக்கு உறைக்காதவாறு நன்கு பழகிப் போயின.

ஒருவன், கத்தையாகப் பணம் கொடுத்துப் பெற்ற சிகரெட்டுகளில் ஒன்றையெடுத்து உதடுகளிடைகளிடையே பொருத்திப் புகைத்துக் கொண்டே அவனைத் தாண்டிச் சென்றான். மற்றொருவன், பாதி கடித்து மீதியிருந்த இனிப்புப் பண்டமொன்றை, அவனுக்கு முன்னாலிருந்த குப்பைத் தொட்டிக்குள் வீசி விட்டு அகன்றான்.

அவன் மட்டும் பசியோடு நின்றான். பசி! அகோரப் பசி! அள்ளி அள்ளித் தின்று வயிறு புடைத்தாலும் அடங்காத பசி. ஆனால் யாரும் அவனைக் கண்டு கொள்ளவில்லை. அவனை எல்லோரும் வெறுப்புடனும் அருவருப்புடனும் நோக்கினர். வெடித்துச் சீழ் வடிந்து கொண்டிருந்த அவனது ஒற்றைக் காலின் அகூசையான தோற்றமும் அவர்களுக்கு குடலைப் புரட்டும் குமட்டலை ஏற்படுத்திற்று.

முதலாளி, அவனை அடிப்பதற்காக கம்புடன் ஓடி வந்தார். அவன் அங்கிருந்து சரேலென அகன்று மெல்ல நடக்கவாரம்பித்தான். குப்பைத் தொட்டியைக் கிளறிக் கொண்டிருந்த நாயொன்று, தனது உணவைப் பகிர்ந்து கொள்ள வருவதாக நினைத்து அவனைப் பார்த்து முறைத்துக் குரைத்து விட்டு அவன் அப்பால் சென்றதும் தன் வேலையைத் தொடர்ந்தது.

அவன் நடந்தான். எவ்வித இலட்சியமுமற்ற அந்த நடைக்கு அவனது கால்கள் ஒத்துழைக்கவில்லை. சூரியனின் உஷ்ணம், அவனது முகத்தையும் உடலையும் மட்டுமன்றி, தரையினூடு புகுந்து அவனது பாதங்களையும் தாக்கிற்று. வலது காலில் காயங்களிலிருந்து இரத்தமும் சீழும் சமமாக கசிந்து கொண்டிருந்தன.

தொடர்ந்து கல்வி கற்க முடிந்திருந்தால், நான்காம் ஆண்டு வரை வகுப்பில் முதலாமவனாகவே வரவைத்த அவனது திறமை உயர்ந்த நிலைக்கு அவனைச் செலுத்தியிருக்கக் கூடும். ஆனால், வயிறு நிரம்பிய பசியும் உடல் நிரம்பிய வலியும் மட்டுமன்றி, மூளையில் அறுந்துபோன சில நரம்புகளும் சேர்ந்து பாடசாலைக்கான வழியைக் கூட அவனுக்கு மறக்கச் செய்து விட்டன.

மேலும் நடக்க முடியாமல், வீதியின் மருங்கில் செழித்திருந்த பூவரசை மரத்தின் கீழ் குந்திக் கொண்டான் அவன். உடலின் என்ன வலியாக இருந்தாலும் வயிற்றில் கனன்று கொண்டிருக்கும் பசியின் வலிக்கு முன்னால் அவையெல்லாம் அற்பமே. உயிரை வதைக்கும் இந்தக் கொடிய வலிக்கு மருந்து எங்குண்டு!

வீடுகளுக்குச் சென்றால், இவனது தோற்றத்தைக் கண்டு எச்சில் துப்பிக் கொண்டே பெண்கள் கதவடைத்து விடுகிறார்கள். கடைகளுக்குச் சென்றால் முதலாளிமார் கல்லாலடித்துத் துரத்துகிறார்கள். பிச்சையெடுப்பதாக இருந்தாலும் ஒரு கௌரவம் வேண்டுமே. உழைப் பதற்கு எவ்வித தெம்பும் இல்லாத இந்த உடலை அழுக்குத் துணி சுற்றி உலாவ விட்டிருக்கும் இயற்கையின் செய்கையில் எந்த நியாயத்தையும் அவனால் கண்டுகொள்ள முடியவில்லை.

அவன் இப்போது அழுவதில்லை. கண்களில் கண்ணீரோ, உடம்பில் தெம்போ இல்லை என்பது ஒரு புறமிருக்க, அதனால் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை என்ற அவனது முதிர்ந்த வாழ்வனுபவம் அவனை அழவிடாது தடுத்துவிடும்.

உயர்ந்து நிமிர்ந்து மகாகர்வமாய் நின்று கொண்டிருந்த அந்த மாடிவீடு, அவனது குழிவிழுந்நத கண்களூடு அழுத்தமாகத் தெரிந்தது. அது, அவனது மாமாவின் வீடுதான். அவனும் அவனது பெற்றோரும் வாழ்ந்த வீடு குண்டுத் தாக்குதலில் நொறுங்கிய போது மாமா கண்ணீர் வடிக்காமல் அழுதார். அந்த சோகத்தை மறக்க ஒரு பெரிய மாடி வீட்டை அந்த இடத்தில் உடனடியாகக் கட்டி முடித்து, மாமியுடனும் தனது அழகிய மகளுடனும் அங்கு இடம்பெயர்ந்தார். ஆனால், இதுவரை அவனை அந்த வீட்டினுள் ஏறவிடாது தடுக்கும் அவரது முரட்டுத்தனத்துக்கான காரணம் தான் அவனுக்கு இன்னும் புரியவில்லை.

இன்றைக்கும் போய்ப் பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் சிரமப்பட்டு எழுந்தான். உள்ளத்தை வலுப்படுத்திக் கொண்டே மெல்ல நடக்கலானான். இவனைத் தழுவி வரும் காற்று, தம்மில் பட்டுவிடாதவாறு அவ்வழியால் சென்றவர்கள் மிக அவதானமாக ஒதுங்கிச் சென்றனர். அவன் வீட்டை நெருங்கினான். வீடா அது மாளிகை. உயர்ந்து செழித்த சுவர்களும் பளபளக்கும் அலங்காரத் திமிர்ப்புடன் அவனது கண்களை விழுங்கின. சிறியதும் பெரியதுமான வாகனங்கள் உள்ளிருந்து வெளியே விடைபெற்றுக் கொண்டிருந்தன. 'அற்புதமான விருந்து..' காருக்குள்ளிருந்து யாரோ பேசிச் செல்வது இவனது காதுகளில் தேன் தடவிற்று.

தைரியமாக உள்ளே நுழைந்து விட்டான். இன்றைய விருந்தில் மிஞ்சிய எலும்புத் துண்டுகளாவது இந்த வயிற்றுக்குக் கிடைக்குமா! விருந்தாளிகளை வாசல் வரை வந்து வழியனுப்பி வைக்கும் மாமாவை அவன் கண்டான். தனது தந்தையிடம் அவ்வப்போது வந்து கடன் வாங்கிச் செல்கையில் கண்டிராத பணமிடுக்கு அவரது நடை உடை சிரிப்பு கையசைப்பு அனைத்திலும் இப்போது எப்படித் தொற்றிக் கொண்டது. அது பற்றியெல்லாம் இப்போது அவனுக்குக் கவலையோ சிந்தனையோ இல்லை. இப்போதைய அவனுடைய தேவையெல்லாம் மூன்று நாளாக கொடூரம் உமிழ்ந்து கொண்டிருக்கும் வயிற்றுப் பசிக்கு சாப்பாடு.

விருந்தாளிகளை வழியனுப்பி விட்டுத் திரும்பிய மாமா அவனைக் கண்டு கொண்டார். முகம் சுழித்துக் கொண்டே மறுபுறம் திரும்பி சத்தமில்லாமல் எச்சில் துப்பி விட்டு விறுவிறுவென்று உள்ளே சென்றுவிட்டார்.

சற்றைக்கெல்லாம் உணவுத் தட்டம் ஒன்று வரும் என்று காத்துக் கொண்டிருந்த அவன், உருண்டைக் கட்டையுடன் கோபாவேசமாக வந்து கொண்டிருந்த அந்தக் கறுப்பு முரடனைக் கண்டதும் அதிர்ந்து பின்வாங்கித் தடுமாறிக் கீழே விழுந்தான். நெஞ்சு படபடத்தது. ஒத்துழைக்க மறுத்த வலது காலை கட்டாயப்படுத்தி இழுத்துக் கொண்டே மூச்சிரைக்க வாயிற்கதவை நோக்கி ஓடத் தொடங்கினான்.

வாயிற்கதவை அண்மித்து விட்டான். அடுத்த எட்டு வைப்பதற்குள், அந்த முரடனின் கையிலிருந்து பறந்து வந்த உருண்டைக்கட்டை வந்த வேகத்தில் இவனது பிடரியில் ஓங்கியறைந்து பலமாகத் தாக்கியது. மண்டை பிளந்த வலியுடன் அவனை முன்னே தள்ளிக் குப்புற விழுத்தியது. தாங்க முடியாது பிடரியை அழுத்திப் பிடித்துக் கொண்டே பரிதாபமாக மயங்கிக் கீழே சரிந்தான் அவன்.

நினைவு தெளிந்து எழுந்த போது, சாக்கடையோரம் தான் அள்ளி வீசப்பட்டிருப்பதையும் இரவின் இருள் செறிவாகக் கவிந்திருப்பதையும் உணர்ந்தான். தொண்டையும் நாவும் வறண்டு உமிழ்நீர் ஈரமற்றுக் காய்ந்திருந்தன. பசியின் வேதனைக்கு நிகரான பின் மண்டையின் வலி கொதித்துக் கொண்டிருந்தது.

மூச்சிரைக்க உடல் நடுங்க வெகுநேரப் பிரயத்தனத்தினூடாக தன் குடிசையை வந்தடைந்தவன், கடகடவென தண்ணீர் மொண்டு குடித்துவிட்டு, களிமண் தரையில் மல்லாந்து விழுந்து, நுளம்புக் கடிகளிடையே உறங்கிப் போனான்.

அரசாங்க நிலத்தில் குடிசை வைத்திருக்கக் கூடாதென்று, இரண்டு நாட்களில் அங்கிருந்து எழுந்து விடவேண்டுமென்றும் நேற்று முன்தினம் அவனுக்குக் கட்டளையிட்டுச் சென்ற அதிகாரி, இன்று குடிசையைக் கொத்தியெறிவதற்காக வருவார். அவர் வந்தால் தான் , அவன் இறந்த செய்தி உலகுக்குத் தெரியவரும்.


*

> அவன் இப்போது அழுவதில்லை. கண்களில் கண்ணீரோ, உடம்பில் தெம்போ இல்லை என்பது ஒரு புறமிருக்க, அதனால் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை என்ற அவனது முதிர்ந்த வாழ்வனுபவம் அவனை அழவிடாது தடுத்துவிடும்.

# தோட்டத் தொழிலாளர் தலைவிதி இதுதானா?


ஆறுமுகம் தொண்டமான்


திகாம்பரம்


முத்து சிவலிங்கம்

இரா. புத்திரசிகாமணி

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இரண்டு லட்சத்து 70 ஆயிரம் பேரை நிர்வாகம் செய்யும் 22 தனியார் தோட்டக்கம்பெனிகளும், காணி அபிவிருத்திசபை, அரச பெருந்தோட்டயாக்கம், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகிய மூன்று அரச நிறுனங்கள் உட்பட 25 தோட்டக் கம்பனிகள் தோட்டத் துரைமார் சம்மேளனம் அல்லது தோட்ட முதலாளிமார் சம்மேளனம் என்ற பெயரில் ஒரே குடையின் கீழ் இயங்குகின்றன.

இரண்டு லட்சத்து 70 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்களுள் சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களின்மீது நம்பிக்கை இழந்தவர்களாக, தாம் உண்டு தம் தொழில் உண்டு என எந்த ஒரு தொழிற் சங்கத்திலும் அங்கத்துவம் பெறாமல் தொழில் செய்கின்றனர்.

மீதியாகவுள்ள சுமார் ஒரு லட்சத்து 70 ஆயிரம் தொழிலாளர்களை கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம் மற்றும் தொழிற்சங் கக்கூட்டுக் கமிட்டியில் அங்கம் வகிக்கும் மூன்று தொழிற்சங் கங்கள் என ஐந்து தொழிற்சங்கங் களும், ஒப்பந்தத்தில் ஒப்பமிடாத, அதாவது இணைத்துக் கொள்ளப்ப டாத மலையக மக்கள் முன்னணி உட் பட 13 தொழிற்சங் கங்களுமாக 18 தொழிற்சங் கங்கள் சேர்ந்து தோட்டத் தொழிலாளர்களை கூறுபோட்டு பிரித்து வைத்துள்ளன.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான முக்கூட்டுக் குழு முதலாவது பேச்சு வார்த்தையை ஆரம்பித்து விட்டது. இரண்டாவது சுற்றுப் பேச்சு இம்மாதம் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

முதலாவது சுற்றில் ரணிலும் மஹிந்த ராஜபக்ஷவும் சந்தித்து கோப்பி குடித்து விட்டுத் திரும்புவது போல், துரைமார் சம்மேளனத்துடன் சம்பிரதாயப் பேச்சை ஆரம்பித்து விட்டு கம்பெனிக்காரர்களின் ஒப்பாரியை கேட்ட பின் கேக் சாப்பிட்டு டீயும் குடித்து விட்டுத் திருப்பிவிட்டனர். இரண் டாம் கட்டப் பேச்சு வார்த்தையில் எத்தகைய கோரிக்கைகள் முன்வைக்கப் போகின்றோம் என்ற எந்தத் திட்டமும் தீட்டப்படவில்லை.

இம்மாதம் 29 ஆம் திகதிக்கு முன் கூட்டு ஒப்பந்தத்தில் கை ஒப்பம் இடாத ஏனைய தொழிற்சங்கங்களையும் அழைத்து சம்பள உயர்வு தொடர்பாக உங்களுடைய அபிப்பிராயம் என்ன? ஆலோசனைகள் என்ன? எல்லோரும் சம்பள உயர்வு என்ற ஒரே நோக்கத்துடன் செயல்படுகின்றோம் என் பதில் மாற்றுக் கருத்துக்கு இட மில்லை. இப்படியான ஒரு நிலையில் நாம் எல்லோரும் ஒரே குரலில் அடிப் படைச் சம்பளம் இவ்வளவு வேண்டும் என ஒரு பொதுவான தொகையை முன்வைப்போம் என்று தீர்மானித்துக் கொண்டு இரண்டாவது சுற்றுப்பேச்சு வார்த்தையை ஆரம்பித்தால் ஏதாவது நன்மை ஏற்படும்.

இவ்விடயம் தொடர்பாக இக்கட்சிப் பிரதானிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, நாங்கள் எந்தச் சங்கத் தலைவர்களையும் அமைத்துப் பேச வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் மூன்று பேரும் எடுப்பது தான் தீர்மானம். அதனை ஏற்றுக் கொள்ள வேண்டியது தொழிலாளர்களின் தலைவிதி என்று திமிர்த்தனமாகவே பதில் அளிக்கின்றனர். அங்கேயும் கூட நான் என்ற ஆணவமும் அகந்தையும் தான் வெளிப்படுகின்றது. மாறாக தொழிலாளர் நலனில் அக்கறை காணப்படவில்லை.

அதேவேளை கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பம் இடாத ஏனைய கட்சிப் பிரமுகர்களுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது. அவர்கள் அப்படித்தான் பேசுவார்கள். காரணம் தொழிலாளர்களை தோட்டக் கம்பனிகளிடம் அடகு வைத்தவர்கள் அவர்கள். ஒருநாள் சம்பளத்தில் ஒரு ரூபாவை குறைக்க உடன்பட்டாலும் முதலாளிமார் சம்மேளனத்திற்கு ஒரு நாளைக்கு, சுமார் மூன்று லட்சம் ரூபா இலாபம் கிட்டுகிறது. இதன்படி பார்த்தால் ஒப்பந்த காலமான இரண்டு வருடங்களுக்கு கிட்டத்தட்ட 18 கோடி ரூபா இதில் லாபமாகக் கிடைக்கிறது.

இவர்கள் ஒரு ரூபாவை மட்டுமா விட்டுக் கொடுக்கின்றார்கள்? பல கோடி ரூபாவை விட்டுக் கொடுத்து காட்டிக் கொடுக்கின்றனர். இதற்கு சந்தோஷமாக சில கோடிகளை வாங்கிக் கொள்கின்றார்கள். பங்காளிகள் மூவராக இருப்பதால் பங்குத் தொகையும் கணிசமாக இருக்கும். எல்லோரையும் இணைத்துக் கொண்டு பேசினால் குட்டு வெளிப்பட்டு விடும் என்பதாலேயே ஏனைய தொழிற் சங்கங்களை இணைத்துக் கொண்டு பேச மறுக்கின்றனர் என்று அப்பட்டமாகக் கூறுகின்றனர்.

**19 ஆம் திகதி கூடிப் பேசுகிறோம்**

மூன்றாவது பெரிய தொழிற் சங்கமான மலையக மக்கள் முன்னணி செயலாளர்நாயகம் லொரன்ஸ் உடன் இவ் விடயம் தொடர்பாக கேட்டபோது "கூட்டு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படாத மலையக தொழிற்சங்கங்கள் அனைத்தையும் ஒன்று கூட்டி பொது வான கோரிக்கையை முன் வைக்க உத் தேசித்துள்ளோம். இதற்கான ஒன்றுகூடலை இம்மாதம் 19 ஆம் திகதி நடத்த ஏனைய தொழிற்சங்கங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளோம்" என்று கூறுகின்றார்.

**இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் தேசிய தோட்ட தொழிலாளர் சங்கமும் தடை**

கூட்டு ஒப்பந்தம் தொடர்பாக தோட்ட முதலாளிமார் சம்மேளனம் எங்களுடன் பேசத் தயாராக இருக்கின்றனர். ஆனால் எங்களுடன் பேசினால் இ.தொ.காவும், இ.தே.தோ. தொ.சங்கமும் தாங்கள் பேச்சு வார்த் தையில் கலந்து கொள்ளாமல் விலகிக் கொள்வதாக அச்சுறுத்துகின்றனர் என துரைமார் சம்மேளனம் கூறுகின்றது.

மலையக மக்கள் முன்னணியின ரான நாம் 40 ஆயிரம் அங்கத்தினருடன் மூன்றாவது இடத்தில் இருக்கின்றோம். திகாம்பரத் தின் தொழிலாளர் தேசிய சங்கம் நான்காவது இடத்தில் இருக்கிறது.

அதேவேளை தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி என்ற பெயரில் இயங்கும் மூன்று சங்கங்களின் ஒட்டுமொத்த அங்கத் தவர்கள் ஐயாயிரம் பேர் கூட இல்லை. இவர்களைக் கூட்டாளிகளாகச் சேர்த்துக் கொண்டும் இலங்கை தொழிலாளர் காங்கிரசும், இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் 4[illegible] ஆயிரம் அங்கத்தவர்களைக் கொண்ட எங்களையும் தோழமைச் சங்கங்களையும் சேர்த்துக் கொண்டு பேசத்தடை போடுவதன் உள்நோக்கம் என்ன என்று கேள்வி எழுப்பும் லோரன்ஸ் ஏனைய கட்சிகளை இணைத்துக் கொண்டால் இவர்களின் மோசடிகள் அம்பலத்திற்கு வந்துவிடுமே என்ற அச்சமே அதற்குக் காரணம் என்கின்றான்.

**அடிப்படை சம்பளம் 500/= ரூபா கொடுப்பனவுகள் 250/= ரூபா**

தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் நாள் ஒன்றுக்கு 500 ரூபா எவ்வித நிபந்தனையும் இன்றி வழங்கப்படவேண்டும். வரவு போனஸ், விலைவாசி உயர்வுக்கேற்ற கொடுப் பனவு என்பன உட்பட 250 ரூபா என்ற அடிப்படையில் மொத்தமாக நாளொன் றுக்கு 750 ரூபா வழங்கப்பட வேண்டும். இவை அனைத்திற்கும் ஊழியர் சேமலாபநிதி, நம்பிக்கை நிதியம் என்பன வழங்கப்பட வேண்டும் வரவு நாள்களுடன் தொடர்புபடுத் தாமல் ஒரு நாள் வேலை செய்தாலும் அடிப்படைச் சம்பளம் 500 ரூபா கட்டாயமாக வழங்கப்பட வேண்டும். வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும்போது கூட்டு ஒப்பந்தம் மீளாய்வு செய்யப் பட வேண்டும் என கூட்டு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படாத தொழிற்சங்கங்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளன.

**தீபாவளி பட்டாசு வெடிக்கப் போகின்றனர்**

பேசுகிறோம், பேசுகிறோம் என்று இந்த மூன்று கட்சிகளும் பேச்சுக்களை இழுத்தடிப்பார்கள். உடனடியாகப் பேசி முடிக்க வரமாட்டார்கள். நாங்கள் ஏதாவது பேசினால் நாங்கள் விலகிக் கொள்கிறோம். நீங்கள் பேசுங்கள் என்று பம்மாத்துக் காட்டுவார்கள். இப்படியே பூச்சாண்டி காட்டிவிட்டு தீபாவளியை அண்டி ஒருசிறு தொகைக்கு ஒப்பம் போட்டு விடுவார்கள்.

அப்போது ஏப்ரல் மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரையிலான ஏழு மாதங்களுக்கான பாக்கிச் சம்பளம், வருடா வருடம் கிடைக்கும் தீபாவளி பண்டி கைக்கான முற்பணம், ஆதாய போனஸ் என எல்லாவற்றையும் கூட்டி இப்பொழுது ஐயாயிரம் ரூபாவும் வந்து விட்டதால் இரண் டொரு ஐயாயிரம் ரூபா நோட் டுக்களை தொழிலாளர்களின் கைக ளில் திணித்து விட ஏற்பாடு செய்வார்கள்.


பசியாலும் பட்டினியாலும் வாடிப்போய் இருக்கும் தொழிலாளர் கள் தீபாவளி சமயத்தில் சில ஆயிரம் ரூபா நோட்டுக்களைக் கண்ட வுடன் தமக்கு சம்பள உயர்வாகக் கிடைத்தது சதமா இல்லை ரூபாயா என்று கூடப் பார்க்காமல் கை நாட்டுப் போட்டு விட்டுப் பெற்றுக் கொள்வார் கள். அப்பாவித் தொழிலாளர்களை எப்படி ஏமாற்றுவது என்பது இவர்களுக்கு கைவந்த கலை. இம் முறையும் அப்படித்தான் நடக்கும் என அடித்துக் கூறும் திகாம்பரம் தமது போராட்டத்தைத் தாங்கள் தொடர்வோம் என்றும் கூறுகின்றார்.

பாவம் தொழிலாளர்களின் தலைவிதி இப்படியா எழுதப்பட வேண்டும்? ✱

> **பசியாலும் பட்டினியாலும் வாடிப்போய் இருக்கும் தொழிலாளர்கள் தீபாவளி சமயத்தில் சில ஆயிரம் ரூபா நோட்டுக்களைக் கண்டவுடன் தமக்கு சம்பள உயர்வாகக் கிடைத்தது சதமா இல்லை ரூபாயா என்று கூடப் பார்க்காமல் கை நாட்டுப் போட்டுவிட்டு பெற்றுக் கொள்வார்கள். அப்பாவித் தொழிலாளர்களை எப்படி ஏமாற்றுவது என்பது இவர்களுக்கு கை வந்த கலை.**

# ஊக்கமும் உழைப்பும்

ஆங்கிலேயர்களுக்கும், சுவிற்சலாந்து நாட்டவர்களுக்கும் கடுமையாகப் போர் நடந்தது. இராபர்ட் புரூஸ் என்பவர் ஸ்கொட்லாந்தின் படைத்தளபதி. இவர் பல முறை ஆங்கிலேயருடன் போரிட்டார். ஒவ்வொரு தடவையும் தோல்வியுற்றார். மனம் வருந்தினார். தப்பி ஓடினார். ஒரு மலைக்குகையில் ஒளிந்துகொண்டார். அவ்வாறு மலைக் குகையில் ஒளிந்து கொண்டிருந்தபோது அங்குள்ளவைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். ஒரு சிலந்தி அங்கே கூடு கட்ட முயன்றது. ஆனால் ஒவ்வொரு முயற்சியிலும் ஏதாவது ஓர் இடைஞ்சலால் அதன் வேலை தடைப்பட்டது. இருப்பினும் அது மனம் தளரவில்லை. தொடர்ந்து விடாமல் முயன்று கூடுகட்டி முடித்த பின்தான் ஓய்வுபெற்றது. இந்தச் சிறிய நிகழ்ச்சி அவர் மனத்தை ஈர்த்தது. அவரைச் சிந்திக்க வைத்தது. சிந்தித்தார். ''நானும் இந்தச் சிலந்திபோல முயற்சி செய்தால் வெற்றி பெறுவேன்'' என்று மனத்தில் சொல்லிக் கொண்டார். மறுகணமே அங்கிருந்து புறப்பட்டார். படையைத் திரட்டினார். மன ஊக்கம் கொண்டார். நம்பிக்கை அடைந்தார். சுறுசுறுப்புடன் முயன்று போரிட்டார். வென்றார். வெற்றிக்குச் செல்லும் வழி எளிதானது. ஆம்! மிகவும் எளிதானது. சிறிது நேரம் உழைக்க வேண்டும். சிறிது பொறுமையாக இருக்க வேண்டும். ''முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை'' என்ற நம்பிக்கை வேண்டும். ''முன்வைத்த காலை பின் வைக்கமாட்டேன்'' என்ற உறுதி வேண்டும். இவ்வகைக் குணங்களையே இராபர்ட் புரூஸின் வரலாறு கற்பிக்கிறது.






## துலங்கும் புள்ளிகள்



# யூரி ககாரின்

விண்வெளியில் பறந்த முதல்
வீரர் யூரி ககாரின்
விளங்கு சம தர்ம ரஷ்யா
வெற்றி மகிழ் மைந்தன்
எண்ணிறந்த ஆய்வுகளின்
பின் விளைந்த 'வாஸ்டொக்'
ஏவுகணை கொண்டெழ வான்
எழில் வண்ணம் கண்டார்

மண் வியந்த செயல் புரிந்த
மாவீரன் இலங்கை
மண்வந்து யாழ் நகர
மக்கள் மனம் தொட்டான்
வண்ணமிகு வான்வெளியில்
வாழ்ந்தேழு நாள்கள்
வடிவுநிலா கால்பதிக்கும்
வகை துணிவு தந்தான்.

★ ரஸ்ய நாட்டைச் சேர்ந்தவர். 1934 மார்ச் மாதம் ஒன்பதில் பிறந்தவர்.

★ விமான ஓட்டியான இவர் விண்வெளி வீரர் ஆனார்.

★ முதன்முதல் விண் ஓடத்தில் இருந்து வெளிவந்து விண் வெளியில் நீந்திய விண்வெளி வீரர் இவர்.

★ இவர் வாஸ்டொக் விண்வெளி ஓடத்தில் 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 நாள் விண்வெளிக்குச் சென்றார்.

★ விண்வெளிக்குச் சென்று பூமி திரும்பிய பின்னர் பல நாடுகளுக்குப் பயணம் செய்தார். இவர் இலங்கைக்கு விஜயம் செய்தபோது யாழ்ப்பாணத்துக்கும் வந்து சென்றார்.


★ 1968 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் தனது 34 வயதில் ஜெட் விமான விபத்தொன்றில் காலமானார்.

- உமாபாரதி.




சந்திரன், கிரகம் ஒன்றைச் சுற்றிவருகின்ற சிறிய கிரகமாகும். பூமியையும் ஒரு சந்திரன் சுற்றி வருகின்றது. செவ்வாய்க் கிரகத்துக்கு இரண்டும் வியாழனுக்குப் பன்னிரண்டும் சனிக்குப் பத்தும் யூரேனசுக்கு நான்கும் நெப்ரியூனுக்கு ஒன்றுமாகச் சந்திரர்கள் உள்ளன. புதன், வெள்ளி ஆகிய கிரகங்களுக்குச் சந்திரர்கள் இல்லை. பூமியைச் சுற்றும் சந்திரன் 240 ஆயிரம் மைல்கள் தொலைவில் உள்ளது. அங்கு உயிர்கள் எவையும் இல்லை.

**A தொடக்கம் H வரை பெயரிடப்பட்ட எட்டுப் பென்சில்கள் உள்ளன. மேல் இருந்து ஒழுங்கு குலையாமல் கீழ்நோக்கி சரியான ஒழுங்கில் எடுக்கும் பென்சில்களின் பெயரை எழுதுங்கள்.**




## மூளைக்கு வேலை தரும்

### மாயச் சதுரம்

**கணிதப் புதிர் - 12**

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | 24 | 31 | 8 | 15 |
| 16 | 18 | 25 | 27 | 9 |
| 10 | 12 | 11 | 26 | 28 |
| 29 | 19 | 13 | 21 | 22 |
| 23 | 30 | 7 | 14 | 20 |

இடம் மாறியுள்ள நான்கு எண்களை மாத்திரம் உரிய கட்டிற்குள் மாற்றியிடுவதன் மூலம் நிரை, நிரல், மூலைக்கு மூலை கூட்டுத்தொகை 95 ஆகும் வண்ணம் எண்களை ஒழுங்கமையுங்கள். உங்கள் முயற்சி வெற்றியளித்ததா? என்பதை அறிய அடுத்த வாரம் இளஞ்சுடரைப் பாருங்கள்.

**கணிதப்புதிர் -11 இன் சரியான விடை**

| | | | | |
|---|---|---|---|---|
| 51 | 69 | 12 | 30 | 33 |
| 72 | 15 | 18 | 36 | 54 |
| 3 | 21 | 39 | 57 | 75 |
| 24 | 42 | 60 | 63 | 6 |
| 45 | 48 | 66 | 9 | 27 |

## இளஞ்சுடர் அங்கத்தவராகுங்கள்

மாணவர்களே இது உங்கள் பக்கம். இதில் உங்கள் ஆக்கங்களை வெளியிடுவதன் மூலம் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துங்கள். பக்கத்தில் உள்ள படிவங்கள் மூன்றை நிரப்பி உங்கள் பாஸ்போட் அளவான புகைப்படத்துடன் இளஞ்சுடருக்கு அனுப்பி வையுங்கள். பதிவு செய்யப்படும் அங்கத்தவரின் ஆக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## இளஞ்சுடர் விண்ணப்பப் படிவம்

பெயர்:- ..........................................................

பிறந்த திகதி:- ..........................................

வகுப்பு:- ..................................................

பாடசாலை: - ..............................................

சொந்த முகவரி: - ......................................

கையொப்பம்: - ............................................

மேற்படி மாணவர் எங்கள் பாடசாலையில் கல்வி கற்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

அதிபர்/ ஆசிரியர்

..............................

கையொப்பம்

**அனுப்பவேண்டிய முகவரி**

'இளஞ்சுடர்', சுடர் ஒளி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# த்ரிஷா ஆச்சரியம்

ஒரு பெஷன் ஷோவில் வென்றபோது, பார்த்த த்ரிஷா இல்லை இந்தப் பெண். 'வாழ்க்கை வாழ்வதற்கே', அவரில் பக்குவம் நிரம்பி வழிகிறது உடல் மொழியிலும், இதழ் மொழியிலும்!

*கேள்வி:-* த்ரிஷாவுக்குக் கல்யாணம் முடிந்துவிட்டது. ஆந்திர மாப்பிள்ளை என்று கோடம்பாக்கத்தில் வதந்தி பலமா இருக்கே?

பதில்:- காதல் கிசுகிசுக்கள் தாண்டி, இப்போது கல்யாண கலாட்டாவா? சினிமாவில் வாய்ப்புக்கள் கிடைக்குதோ இல்லையோ, வதந்திகளில் அது தவறுவதே இல்லை. என் திறமையை இல்லாமல் செய்வதில் யாருக்கு இவ்வளவு ஆசை என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு வெளிப்படையாக எவரும் எதிரி கிடையாது. மூன்று மாதத்துக்கு ஒரு தடவை இப்படிப் புதுசு புதுசா ஏதாவது வதந்தி கிளம்பி விடும். கல்யாணம் செய்துகொள்ள முடிவு செய்துவிட்டால், எல்லோருக்கும் சொல்லிவிட்டுத்தான் செய்வேன். நான் வெளிப்படையான பெண். என்னுடைய எந்த முடிவுக்கும் என் குடும்ப ஆதரவும் இருக்கும். அடுத்தடுத்து தமிழ், தெலுங்கு என்று படங்களுக்கு ஒப்பந்தம் செய்திருக்கிறேன். இப்போது கல்யாணம் பற்றி யோசிக்க நேரம் இல்லை.

கே:- சாகச விரும்பி த்ரிஷா, சமீபத்தில் என்ன சாகசம் செய்தீர்கள்?

ப:- ஜெய்ப்பூர் ரந்தம்பூர் புலிகள் சரணாலயத்துக்கு ஒரு சுற்றுலாச் சென்று வந்தேன். எப்போதும் வெளிநாட்டுச் சுற்றுலாதான் போவோம். இந்தத் தடவை இந்தியாவிலேயே எங்கேயாவது சுற்றிப் பார்க்கலாம் என்று நினைத்தேன். செல்போன், லப்டொப், பேப்பர், டி.வி, சினிமா என்று எல்லாவற்றுக்கும் விடுமுறை அளித்துவிட்டு, ஒரு வாரம் காட்டுக்குள்ளேயே இருந்தோம். உள்ளே போய்விட்டு இரண்டு, மூன்று நாள்கள் கழிந்துதான் புலிகளைப் பார்க்க முடிந்தது. இரண்டு அடி எடுத்து வைத்தால்... தொட்டுவிடலாம் என்ற தூரத்தில் புலிகள். வாவ்... அந்த இரவில் நெருப்புத் துளி மாதிரிப் புலிகளோட கண் மினுமினுங்கியது. கம்பீரமான அழகு!

நாங்கள் தங்கியிருந்த அறை ஜன்னலில் வந்து மயில்கள் உள்ளே எட்டிப் பார்க்கும். ஏதேதோ பறவைகள் தலையை நீட்டி நீட்டி ஆட்டிவிட்டு எங்களை முறைத்துப் பார்க்கும். என்னோடு என் தோழிகள் சபீனா, ஹேமா வந்திருந்திருந்தார்கள். சேட்டையும் அரட்டையுமாக கிட்டத்தட்ட 'த்ரீ இடியட்ஸ்' மாதிரி காட்டுக்குள்ளேயே இருந்தோம். இனிமேல், இடைக்கால விடுமுறைகளை இந்தியாவில்தான் கொண்டாட வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறேன். நான் இதுவரை போன வெளிநாடுகளைவிட ரந்தம்பூர்தான் மிகத் தரமான சுற்றுலா மையம்.





கே:- ஹிந்தியில் நீங்கள் விண்ணைத்தாண்டி வருவாயா படத்தில் நடிப்பதாகச் செய்தி வந்தது. ஆனால், இப்போது வேறு யாரோ நடிக்கிறார்கள். ஹிந்தியில் வேறு எந்தப் படத்திலும் நடிப்பதாகத் தெரியவில்லை?

ப:- ஹிந்தி விண்ணைத்தாண்டி வருவாயா படத்துக்கு நான் 25 நாள் ஒப்பந்தம் கொடுத்திருந்தேன். ஆனால், கௌதம் அந்த நாட்களை பயன்படுத்திக் கொள்ளவில்லை. அதனால், என்னால் அந்தப் படத்தில் நடிக்க முடியவில்லை. ஆனால், பிரச்சினை எதுவும் இல்லை. இப்பவும் எங்கள் நட்பு அப்படியேதான் இருக்கின்றது. ஹிந்தியில் இதுவரை வேறு எந்தப் படத்திலும் தெரிவாகவில்லை. தெரிவானால் வெளிப்படையாகச் சொல்கின்றேன்.

கே:- தேர்தல் சமயம்... எந்தக் கட்சிக்கு உங்க வாக்கு?

ப:- அது... அது ரகசியம்! ஆனால், நிச்சயம் நான் இந்தத் தேர்தலில் வாக்களிப்பேன். எப்பவும் ஜனநாயகக் கடமையைச் செய்யத் தவற மாட்டாள் இந்த த்ரிஷா... த்ரிஷா... த்ரிஷா.



# மறைந்தும் மறையாத சுஜாதா

தன் தனித்த நடிப்பால் தமிழ் சினிமாவில் தனி இடம்பிடித்தவர் சுஜாதா. அவரின் திடீர் மறைவு ரசிகர்களை அதிர்ச்சியடைய வைத்துவிட்டது. அவருடன் பல படங்களில் பணியாற்றிய நினைவுகளை நம்மிடம் பேசினார் சிவகுமார்.

சுஜாதாவை ஒப்பந்தம் செய்தாலே தனியாக ஒரு வியாபாரம் அந்தப் படத்துக்கு இருக்கும். அந்த அளவுக்கு புகழோடு இருந்தவர் சுஜாதா. நாங்கள் இரண்டு பேரும் 12 படங்கள்ல நடித்தோம்.

உணர்ச்சிக் கொந்தளிப்பாக நடிக்கக் கூடியவர் சுஜாதா. கண்ணாம்பா கூட வசன உச்சரிப்பில் தான் பெயர் பெற்றார். சுஜாதா நடித்தால் கண், கை என்று எண் சாண் உடம்புமே நடிக்கும். அன்னக்கிளி படத்தின் டப்பிங் வாஹினி ஸ்டுடியோவில் நடந்தது. உணர்ச்சிமயமான காட்சியில் கதறி கண்ணீர் விட்டபடியேதான் டப்பிங் பேசி முடித்தார்.

அவருடைய சொந்த வாழ்க்கையில் ஏகப்பட்ட பிரச்சினைகள். ஷூட்டிங் வரும்போதெல்லாம் ஏதாவது ஒரு பிரச்சினையை மனதில் போட்டுக்கொண்டுதான் வருவார். அவருடைய இளமைக் காலமே போராட்டமான வாழ்க்கைதான். தொடர்ந்து குடும்பப் பிரச்சினை இருந்து கொண்டேயிருந்தது. பெரிய போராட்டத்திற்குப் பிறகுதான் சுஜாதாவிற்குத் திருமணமே நடந்தது.

திரைப்படக் கலைஞர்களுக்கு சமூகத்தில் பெரிய மரியாதை இருப்பதாகச் சொல்கிறார்கள். நடிகை நாடாண்டார் என்றெல்லாம் பெருமையாக பேசுகிறார்கள். ஆனால், இந்த சமூகம் நடிகைகளை எப்போதுமே மரியாதைக் குறைவாகத்தான் பார்க்கிறது. என்னதான் நடிகைகளை ரசிகர்கள் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினாலும் அவர்களை குடும்பப் பெண்களாக யாரும் பார்ப்பதில்லை. பல படங்களில் கதாநாயகியாக நடித்தவர்கள் ஒரு கணவனோடு வாழமாட்டார்கள் என்றுதான் இந்த சமூகம் நினைக்கிறது. ஆனால் நான் என் உயிர் உள்ளவரை ஜெயஹரின் மனைவியாகத்தான் வாழ்ந்து முடிப்பேன் என்று ஒருமுறை சுஜாதா கூறினார். அதை நிரூபித்துக் காட்டிவிட்டார் என்று கலங்கிய குரலில் பேசினார் சிவக்குமார்..





# சுத்தம் பேணுவதன் மூலம் நோய்த் தொற்றைத் தடுக்க இயலும்

கேள்வி:-எனக்கு வயது 45. மூன்று வருடங்களுக்கு முன்னர் ஒரு தடவை ஒரு வார காலமாக காதுக்குத்தினால் அவதிப்பட்டேன். அதற்குப் பிறகு காது கேட்பது குறைந்து விட்டது. தற்போது அடிக்கடி காதுக்குள் சொறிவு ஏற்படுகிறது. அத்தோடு காதில் இருந்து தடித்த களி போன்ற திரவமும் வெளிவருகிறது. இதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என ஆலோசனை கூறுங்கள்?

பதில்:-இன்று அனேகம் பேரைப் பாதிக்கின்ற ஒரு விடயமாக காது தொற்றடைதல் அல்லது காதுக்குத்து என்பதைக் கொள்ளலாம். உடல் அமைப்பில் நடுக் காதுக்கும் தொண்டைக்கும் இடையில் ஒரு கால்வாய் அல்லது தொகுப்பு உண்டு. இது ஊத்தேக்கியோவின் கால்வாய் (Eustachian tube) என அழைக்கப்படும். நடுக்காதில் உண்டாகும் மேலதிக சுரப்புக்கள் இக் கால்வாயினூடாகவே வடிந்து வெளியேறுகின்றன. மேலும் செவிப்பறை அதிர்வதற்கு அதன் இரு பக்கங்களிலும் உள்ள அமுக்கம் சீராக இருக்க வேண்டும். இதற்கும் இக்கால்வாய் உதவி புரிகிறது. தொண்டையில் ஏற்படும் கிருமித் தொற்றினால் இக்கால்வாய் பாதிப்படையும் போது கால்வாயின் அளவு வீங்கி குறைவடைந்து விடு கிறது. சில சமயங்களில் அடைப்புக் கூட ஏற்படுகிறது. இதனால் சுரப்புகளில் கிருமிகள் தொற்றி காதுக்குத்தை ஏற்படுத்துகின்றன. இது ACUTE OTITIS MEDIA எனப்படும். இத்தகைய தொற்று கவனிக்கப்படாமல் விடப் பட்டால் அல்லது அடிக்கடி ஏற்படுமானால் அது நீண்டகாலத் தொற்றாக (CHRONIC OTITIS MEDIA) மாற்றமடையும். இதனால் பல பாதிப்புகள் ஏற்படும். முக்கியமாக காது கேட்காமல் போவதற்கும் சந்தர்ப்பம் உண்டு.

மேலும் காதுக்குக் பின்னுள்ள என்பில் தொற்று ஏற்படல் ( MASTOIDITIS), செவிப்பறையில் துவாரம் ஏற்பட்டு அதனூடாக சீழ் வெளியேறல், நடுக்காதில் கட்டி ஏற்படல், ( CHOLESTEATOMA) என்பனவும் ஏற்பட இடமுண்டு.

இத்தகைய காதுத் தொற்று (EAR INFECTIONS) சிறுவர்களிலேயே அதிகம் ஏற்படுகிறது. ஏனெனில் சிறுவர்களில் ஊத்தேக்கியோவின் கால்வாயானது சிறியதாகவும், ஒடுக்கமானதாகவும் பெரியவர்களைவிட கிடையானதாகவும் (MORE HORIZONTAL) இருப்பதனால் ஆகும்.

காதுக்குத்து வந்தால் சரியான சிகிச்சை பெறுங்கள். சிகிச்சைக்கு உரிய பயன் கிடைக்காதுவிட்டால் அல்லது சிகிச்சையின் போதோ அன்றி மீண்டும் காது தொற்று ஏற்படும் போதோ புதிய குணங்குறிகள் ஏதும் தோன்றுமாயின், உடனடியாக ஒரு காது, மூக்கு, தொண்டை சத்திர சிகிச்சை நிபுணரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் ஜோன் பொன்னையா. நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரிகள்.
>
> **இலவச மருந்துவ ஆலோசனை**
>
> I.) சுடர்ஒளி, யாழ்.அலுவலகம்,
> 361,கஸ்தூரியார் வீதி,
> யாழ்ப்பாணம்.
>
> II.) சுடர்ஒளி,
> 85,ஐயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
> கொழும்பு 14.

கேள்வி:-எனக்கு வயது 25. கடந்த ஒரு வருட காலமாக எனது உடலில் தேமல், படர்ந்து வருகிறது. ஆரம்பத்தில் ஓர் இடத்தில் வட்டமாக இருந்த தேமல், தற்போது உடம்பின் ஏனைய பகுதிகளுக்கும் பரவி வருகிறது. இதிலிருந்து விடுபட ஆலோசனை தருவீர்களா?

பதில்:-பொதுவாக இதனை வட்டக்கடி என பேச்சு வழக்கிலும், Ring worm என ஆங்கிலத்திலும் அழைப்போம். தோலில் ஏற்படும் patches வட்டமாக அல்லது மோதிர வடிவில் இருப்பதே இத்தகைய பெயர் வரக் காரணமாகும். உண்மையில் இந்நோய் worm அல்லது புழுவால் ஏற்படுவது அல்ல. ஒருவகை Fungus (பூஞ்சணம்) இனாலேயே இது ஏற்படுகிறது. இது உடலின் எந்தப் பாகத்திலும் ஏற்படலாம். ஏற்படும் இடங்களைப் பொறுத்து வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டாலும், நோய்க் காரணமும் சிகிச்சை முறையும் ஒன்றே. உடற்பகுதியில் ஏற்படும் போது Tinea Corporis எனவும் தலையில் ஏற்படும்போது Tinea Capitis எனவும் கால்பகுதியில் ஏற்படும் போது Tinea Cruris எனவும் அழைக்கப்படுகிறது. இதனை நாம் Ring worm என பொதுவாக குறிப்பிடுவோம். ஒரே நேரத்தில் பல Patches ஏற்படும்.



Ring worm ஒரு பொதுவான தோல் நோய். இலகுவில் சிறுவர்களை பீடிக்குமாயினும், எந்த வயதில் உள்ளவர்களும் இந்நோயால் தாக்கப்படலாம். Ring worm மிக இலகுவில் தொற்றக் கூடிய ஒரு தோல் நோயாகும். நேரடியான தொடுகையின் மூலமோ அன்றேல் நோயுள்ளவர் பாவித்த துவாய் மற்றும் துணிகள், சீப்பு, ஈரமான தரை என்பவற்றின் மூலமோ தொற்றலாம். எமது செல்லப் பிராணிகள் குறிப்பாகப் பூனை இந்த நோயை பரப்பவல்லன.

Ring worm ஐ உண்டாக்கும் Fungus ஆனது வெதுவெதுப்பான ஈரலிப்பான பகுதிகளில் பெருகி வாழக் கூடியது. வியர்வை இத்தகைய Ring worm ன் வளர்ச்சியை ஊக்குவிக்கும். மேலும் சிறுதோற் காயங்களைத் தொடர்ந்தும் Ring worm தொற்றலாம்.

Ring worm தொற்று ஏற்பட்டால் கடியுடன் கூடிய படை (Patch) தோன்றும். வட்டவடிவமாக, சிவந்த ஆனால் நடுவில் நிறம் குறைந்த Patch தோன்றும். கடிக்காகத் தேய்க்கப்படுவதால் தோல் காயமுற்று கொப்புளங்கள் அல்லது நீர்க் கசிவும் காணப்படும். இக்காயங்களில் பக்ரீறியாக்கள் தொற்றிக் கொள்ளவும் சந்தர்ப்பங்கள் உண்டு.

தாடி அல்லது தலை போன்ற மயிர் உள்ள இடங்களில் தொற்று ஏற்படும் போது மயிர் திட்டுத் திட்டாக கொட்டிவிடவும் வாய்ப்புண்டு.

நகங்களில் ஏற்படும் போது கறுத்து, நிறம், உருவம் மாறி பெரும் தொல்லை தரும்.

வைத்தியர்கள் பொதுவாக Patch ன் தன்மையை கொண்டே இதனை அடையாளம் கண்டுகொள்வர். தேவை ஏற்படின் தோற்பகுதியை இருட்டு அறையில் நீல ஒளியில் பார்வையிடுவதன் மூலமும் (Wood's lamp) கண்டு கொள்ளலாம். மேலும் தேவையேற்பட்டால் தோற் பகுதி சுரண்டப்பட்டு நுணுக்குக் காட்டியில் ஆராயப்படும்.

Ring worm ஏற்பட்டால் எம்மை நாமே சுகாதாரமாக பராமரிப்பதன் மூலம் சுமார் நான்கு வாரங்களுக்குள்ளாக குணமாக்க முடியும். இக்காலப் பகுதியில் எம்மிடமிருந்து இன்னொருவர் இந்நோயைப் பெற்றுக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது எமது கடமையாகும். நோய் ஏற்பட்ட பகுதியைச் சுத்தமாகவும் உலர்வாகவும் பேண வேண்டும். Fungus ற்கு எதிரான Cream, Lotion அன்றேல் Powder ஐ Patch ன் மேல் பூசிவிடலாம்.

நீங்கள் பாவிக்கும் Sheets, இரவு ஆடைகள், துவாய் என்பவற்றை தொற்றுள்ள வேளையில் தினமும் தோய்த்து வெயிலில் காயவிடுங்கள். ஆனால் நான்கு வாரங்களுக்கு மேல் குணமாகாமல் இருந்தால், அல்லது இரண்டாம் நிலைத் தொற்றாகப் பக்ரீறியா தொற்று ஏற்பட்டு கசிவு, கொப்புளங்கள் ஏற்பட்டால், அல்லது காய்ச்சல் இருந்தால் வைத்தியரை நாடவேண்டியது அவசியம்.

Ring worm வந்தபின் சிகிச்சை பெறுவதை விட, வராமல் தடுப்பது மிகச் சிறப்பானது. எப்போதும் உடலைச் சுத்தமாகவும் உலர்வாகவும் வைத்திருங்கள். பாதங்களிலும் கூடிய கவனம் எடுக்க வேண்டும். தலைமுடி வெட்டிய பின் குறிப்பாக ஏனைய நாட்களிலும் கிரமமாக தலையை நன்கு சுத்தமாக கழுவி உலர்த்துங்கள். ஒருபோதும் துவாய், தலை தூரிகை (Hair brush) என்பவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளாதீர்கள். மேலும் இவற்றை அடிக்கடி சுத்தம் செய்து உலர்த்திப் பாவியுங்கள். ஈரமான நிலங்களுக்குரிய பிரத்தியேக காலணிகளை உபயோகியுங்கள். வளர்ப்புப் பிராணிகளின் மயிர்கொட்டிய உடற்பகுதிகளைத் தொடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இத்தகைய தடுப்பு முறைகளைச் சரியாகப் பின்பற்றினால் வந்தபின் வருந்துவதை விட வருமுன்பே தடுத்து சுகமாக வாழலாம். ✱

# உடலுறவு இதயத்தைப் பாதிக்குமா?

எந்த ஆரோக்கியமான இதயத்தையும் உடலுறவு பாதிக்காது என்கின்றனர் வைத்திய ஆராய்ச்சியாளர்கள். இதனை நான்கு நிலைகளாகப் பிரிக்கின்றனர்.

*எழுச்சி நிலை (Excitement Phase)*
*கிளர்ச்சி நிலை (Plaeau Stage)*
*உச்ச நிலை (Orgamic Phase)*
*மீள் நிலை (Resolution Phase)*

மேற்கூறிய நான்கு நிலைகளிலும், இதயமானது பலவகையான ஆரோக்கியமான மாற்றங்களை அடைகிறது.

மாரடைப்புக்கான காரணங்களை ஆராய்ந்த இதய மருத்துவர்கள் அவற்றை மூன்று வகையாகப் பிரித்துள்ளனர். அதாவது இதயத்துக்குப் போதுமான உடற்பயிற்சி இல்லாதது, உடலின் எடை அதிகமாதல், மன இறுக்கம் ஆகியவைதான் அடிப்படையான காரணங்கள். இந்த மூன்று காரணங்களையும் வெல்லக் கூடிய ஆற்றல், உடலுறவுக்கு உண்டு என ஆணித்தரமாகக் கூறுகிறார்கள்.

உடலுறவானது இதயத்திலும் இதயம் தொடர்பான ரத்தக் குழாய்களிலும் ஏற்படுத்தும் மாற்றங்களானது மூன்று வகையான காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. அதாவது உடலுறவில் ஈடுபடுபவர்களின் வயது, திருமணத்தின் போது வயது, உறவில் ஈடுபடுபவர்கள் திருமணம் செய்து கொண்டவர்களா அல்லது திருமண பந்தத்துக்கு அப்பாற்பட்டு உடலுறவில் ஈடுபடுபவர்களா ஆகிய மூன்று அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

உடலுறவில் ஈடுபடும் தம்பதிகளின் வயதுக்கும், அவர்களின் உடலில் ஏற்படும் உடலியல் மாற்றங்களுக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

உடலுறவு கொள்ளும் தம்பதியர்களின் வயது இருபதாக இருந்தால் அவர்களின் உடலில் ஏற்படும் உடலியல் மாற்றங்கள் மற்றத் தம்பதியர்களைவிட அதிகமாக இருக்கும். இளமையின் விளிம்பில் இருப்பதால் உடலில் உள்ள பரிவு நரம்பு அமைப்பு அளவுக்கு அதிகமாகச் செயற்பட்டு ரத்த அழுத்தத்தின் அளவு உயர்வதோடு அல்லாமல் இதயத்துடிப்பின் அளவும் பன்மடங்கு அதிகமாகிறது.

உடலுறவின்உச்சக்கட்டத்தின்போது ரத்த அழுத்தத்தின் அளவானது 220/110 என்ற அளவுக்கு உயரும். இவ்வாறு உச்ச நிலைக்குச் சென்ற ஓரிரு நிமிடங்களில் மறுபடியும் சாதாரண ரத்த அழுத்த நிலைக்கு மீள்கிறது. இதுபோல் உடலுறவின் உச்சநிலையில் ஒரு நிமிடத்துக்கு இதயம் சுமார் 180 என்ற அளவுக்கு மிகவும் வேகமாகத்துடிக்கும். ஆனால் உச்ச நிலையில் இருந்து மீண்டு ஒரு நிமிடத்துக்குள் இதயத் துடிப்பானது பழைய நிலைக்குத் திரும்பி விடும்.

ஒவ்வொரு முறை உடலுறவு கொள்ளும்போது செலவாகும் கலோரிகளின் எண்ணிக்கை, உடலுறவில் ஈடுபடுபவர்களின் வயது, அவர்களின் உடல் நிலை, அவர்களின் திருமண வயது ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மாறுபடும். பொதுவாக சாதாரண உடலுறவின் போது 150 கலோரிகள் செலவழிக்கப்படுகிறது. இந்த ஆற்றலானது சாதாரண மனிதன் இரண்டு அடுக்குகள் கொண்ட ஒரு கட்டடத்தின் மாடிப் படிகளில் ஏறும்போது செலவிடும் ஆற்றலுக்கு இணையானது.

பல்வேறு ஆய்வுகளின் முடிவுகள், உடலுறவு என்பது உடலுக்குப் பல நன்மைகளைத் தரக்கூடிய மிகச் சிறந்த உடற்பயிற்சி என்றே கூறுகின்றன. உடலுறவு அசைவுகளின் போது அந்தப் பகுதியில் உள்ள தசைகள் மட்டுமல்லாமல் முதுகுத்தண்டுவடப் பகுதியில் உள்ள தசைகள் வலுப் பெறுகின்றன. அதோடு முதுகுத் தண்டுவடப் பகுதியில் உள்ள சிறிய முள்கள்போன்ற எலும்பு அமைப்புகளும் சிதைவு மாற்றங்களுக்கு ஆளாகாமல் தடுக்கப்படுகின்றன.

ஒரு மனிதன் 30 நிமிட நேரம் மெல்லோட்டத்தில் ஈடுபடும்போது ஏற்படும் பலன்கள், ஒருமுறை உடலுறவு கொள்ளும்போது ஏற்படும் பலன்களுக்கு இணையானது என்று சொல்லப்படுகிறது.

# பொய்வதந்தி என்றுமே நிலைப்பதில்லை



டைரக்டர் மார் மடியூக்

மனிதன் தோன்றிய நாளிலிருந்து இன்றுவரை அவன் பார்த்துப் பயப்படாத விஷயங்களே இல்லை. ஆதி காலத்தில் கடல், இடி, மின்னல், மழை, சூரியன், கிரகணம், நோய்கள் என்று தன்னால் புரிந்துகொள்ள முடியாததை எல்லாம் பார்த்துப் பார்த்து வந்த மனிதன்... அவற்றையெல்லாம் கடவுள்களாகவே ஆக்கினான்.

கண்ணுக்குத் தெரியாத விஷயங்களை மட்டும் அல்ல.. கற்பனையில் தோன்றிய விஷயங்களுக்குக் கூட மனிதன் பயந்து நடுங்கினான். இந்தியர்களுக்கு ஐந்து தலை நாகம், சீனர்களுக்கு டிராகன் என்று இதற்கு உதாரணங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால், இது போன்ற விஷயங்கள் எல்லாமே புராணங்கள் காட்டிய பூச்சாண்டிகள்.

மேலே சொன்ன எந்தப் பட்டியலிலும் சேராமல் ஒரு மிருகம் மனிதனைப் பயமுறுத்தியது. அந்த மிருகத்தின் பெயர் நீசே.

1934ஆம் ஆண்டு லண்டனில் புகழ்பெற்ற அறுவைச் சிகிச்சை நிபுணரான ராபர்ட் வில்சன் என்பவர் ஸ்காட்லாண்டின் மிகப் பெரிய ஏரியான நாஷ்னே என்ற ஏரிக்கு பிக்னிக் சென்றபோது அவர் முன்பின் பார்த்திராத அந்த மிருகம் ஏரியிலிருந்து தலையைத் தூக்கியது. அதைப் பார்த்துப் பதறிப்போன டாக்டர் அந்த இடத்தைவிட்டு ஓட்டம் எடுப்பதற்கு முன் கையோடு எடுத்துப் போயிருந்த காமிராவால் அதைப் போட்டோ எடுத்துவிட்டார். அடுத்த நாள் அந்தப் புகைப்படம் அத்தனை பத்திரிகைகளிலும் முதல் பக்கத்தில் பிரசுரமாகி மக்களைப் பயமுறுத்தியது. இதை அடுத்து சுமார் நாற்பது கிலோ மீட்டர் நீளமுள்ள அந்த ஏரியை 'உலகத்திலேயே அபாயகரமான இடம்' என்று அறிவிக்கும் அளவுக்கு மக்களின் மனதை பயம் கவ்வியது.

'நீந்தும் ராட்சத யானை' என்று வர்ணிக்கும் அளவுக்கு அது நீளமாக இருப்பதாகவும், ஏரியிலிருந்து ரோட்டுக்கு ஏறி வந்து ஆடு மாடுகளைத் தின்று தீர்ப்பதாகவும் ஆளாளுக்குச் சொன்னார்கள். இன்னொருபுறம், இந்த ஏரியைச் சுற்றியிருக்கும் கிராமங்களில் திடீர் திடீரென்று சிலர் காணாமல் போக, இந்த மிருகம் எல்லோர் வயிற்றிலும் புளியைக் கரைத்தது. தங்களின் வழக்கமான நிகழ்ச்சிகளைப் பாதியிலேயே நிறுத்தி விட்டு ரேடியோ நிலையங்கள், இந்த மிருகம் பற்றிய உடனுக்குடனான செய்திகளை அறிவிக்கும் அளவுக்கு நிலைமை பரபரப்பானது. இந்த மிருகத்தின் அட்டகாசம் பற்றி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாதிரியான செய்திகள் வர. உலகத்தின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் ஆராய்ச்சியாளர்கள் ஸ்காட்லாண்டின் இந்த நாஷ்னே ஏரியை நோக்கிப் படையெடுத்தார்கள். தனது பங்குக்கு 'டெய்லி மெயில்' என்ற பத்திரிகை, அப்போதைய முன்னணித் திரைப்பட இயக்குநரான மார் மடியூக் என்பவரை இந்த மிருகத்தைப் படம் எடுத்து வர அனுப்பியது. பல நாள் இந்த ஏரியைச் சுற்றிப் பதுங்கிப் பதுங்கி வாழ்ந்து ஆராய்ச்சி செய்த அவர், மூவி காமிராவில் தான் பதிவு செய்து வந்த காட்சிகளைத் திரையில் போட்டுக்காட்டினார். இந்தக் காட்சிகளில் மிகப்பெரிய கால்த்தடங் கள் இருந்தன. இந்த ஏரியில் நீசே என்ற அந்தத் தண்ணீர் விலங்கு இருப்பதாக அவர் உறுதிபடச் சொல்ல, உலகம் அந்த இயக்குநர் மீதிருந்த நம்பிக்கையில் கேள்வியே கேட்காமல் அதை நம்பியது. இதை அடுத்து உலகத்தைப் பயமுறுத்திக் கொண்டிருந்த அந்த ஏரி திடீரென்று மிகப் பெரிய சுற்றுலாத் தலமாக உருவெடுத்தது. ஆயிரக்கணக்கானோர் இந்த ஏரிக்கு வந்து போனார்கள்.

இப்படி ஒரு மிருகம் இருக்கிறதா இல்லையா என்று தீர்மானமாகத் தெரிந்துகொள்ள அமெரிக்காவின் புகழ்பெற்ற அறிவியல் கழகம், தண்ணீருக்குள் செயலபடும் அதிநவீன 'சோனார்' கருவியைக் கொடுத்து விஞ்ஞானிகள் பட்டாளத்தையே இந்த ஏரிக்கு அனுப்பியது. உயிரைப் பணயம் வைத்து இந்த ஏரியில் ஆராய்ச்சி செய்த அந்த விஞ்ஞானிகள், பத்து மீட்டர் நீளமுள்ள மிதக்கும் மிருகம் ஒன்று அந்த ஏரிக்குள் இருப்பதாகச் சொல்ல, முகம் தெரியாத அந்த மிருகத்தைப் பார்த்து ஐரோப்பாவே அஞ்சியது.

''உயிரில்லாத வெறும் கருவிகள் சொல்லும் சாட்சியத்தை வைத்து இப்படி ஒரு மிருகம் இருப்பதாக ஏற்றுக் கொள்ள முடியாது..'' என்று ஒரு சிலர் மறுக்க, 1975 ஆம் ஆண்டு அமெரிக்கா மீண்டும் விஞ்ஞானிகள் குழு ஒன்றை இந்த ஏரிக்கு அனுப்பியது. நீண்ட ஆராய்ச்சிக்குப் பின்னர் இந்த விஞ்ஞானிகளும் நீசே என்ற ஒரு நீர்வாழ் விலங்கு இந்த ஏரியில் இருப்பதாக கற்பூரம் ஏற்றிச் சத்தியம் செய்தனர். இதையடுத்து நீசே உருவம் பொறித்த வாழ்த்து அட்டைகள், பரிசுப் பொருட்கள், பொம்மைகள்... எல்லாம் வெளி வந்து விற்பனையில் சக்கைப் போடு போட்டன.


கடைசியில் அறுபது ஆண்டுகளின் பின்னர் 1994 ஆம் ஆண்டு இந்தப் புதிருக்கான முடிச்சு அவிழ்ந்தது. ராபர்ட் வில்சன் என்ற டாக்டர் எடுத்த புகைப்படம்,உடைந்து போன ஒரு படகின் பகுதி என்றும் திரைப்பட இயக்குநர் மார் மடியூக் எடுத்த திரைப்படம் வெறும் ஏமாற்று என்பதும் அம்பலமானது.

''ஆம்.. நான் ஒரு பொம்மையை வைத்துத்தான் இந்தக் கால்தடங்களைப் படம்பிடித்து வந்தேன்'' என்று இயக்குநர் மார் மடியூக் வாக்குமூலம் கொடுக்க, மக்களின் கற்பனையில் மட்டுமே வாழ்ந்துவந்த அந்த கானல் மிருகம் அன்றோடு அழிந்தது!


விஞ்ஞானம் மிகவேகமாக முன்னேற்றம் கண்டுள்ள இன்றைய காலகட்டத்திலும் யாரேனும் ஒருசிலர் அவிழ்த்துவிடும் பொய்யானதொரு வதந்தியை உண்மையென நம்பி ஏற்றுக் கொள்ளும் ஒரு தரப்பினர் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனாலும் எந்தவொரு வதந்தியாலும் அது விஞ்ஞானபூர்வமாக, ஆதார பூர்வமாக நிரூபிக்கப்பட்டாலன்றி அதனை உண்மையென ஏற்றுக்கொள்ளமறுக்கும் மற்றுமொரு தரப்பினரும் நம்மிடையே தான் உள்ளனர்.

இதுதான் யதார்த்தம். ✱ ✱ ✱

> விஞ்ஞானம் மிகவேகமாக முன்னேற்றம் கண்டுள்ள இன்றைய காலகட்டத்திலும் யாரேனும் ஒரு சிலர் அவிழ்த்துவிடும் பொய்யானதொரு வதந்தியை உண்மையென நம்பி ஏற்றுக்கொள்ளும் ஒரு தரப்பினர் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள்.



# படிச்சென்ன....? படிப்பிச்சென்ன...?



நான் மடத்தடி மாரிமுத்து. இண்டைக்குப் பேப்பரைப் புரட்டி இந்தச் செய்திகளையெல்லாம் பார்க்கப் பார்க்கப் பயமாய் எல்லோ கிடக்கு. மற்றொருபுறம் அதைப் பற்றி யோசிக்க வெட்கமாகவும் எல்லோ கிடக்கு. எங்கட கலையும், கலாசாரமும் எங்க போயிட்டுதெண்டே தெரியேல்லை. இந்தச் செய்திகளை வைத்துக் கொண்டு நாங்க என்னெண்டு நாலு பேருக்கு முன்னால போறதெண்டு தெரியேல்ல. கொலையும் கொள்ளையும் இந்த மண்ணில மலிஞ்சு போச்சுதெண்டதை எண்ணேக்க எனக்கு நெஞ்சு படபடக்குது. தீமை செய்யப் பயந்து நீதிக்காகப் போராடின சனம், கொடுமைக்கு அஞ்சாத மனங்கொண்டு எப்பிடி இந்தத் துர்க்குணம் எங்கட சனத்திட்ட வளர்ந்தது எண்டதை யோசிக்க தலையுக்க என்னவோ செய்யுது.

கிணத்துக்க பிணம், பத்தேக்க பிரேதம், வயலுக்க சவம் எண்டு ஊர் முழுக்க அங்கங்க சடலங்கள் கிடக்கிற செய்தியாய்க் கிடக்கு. அதோட முடிஞ்சாப் போதுமெண்டு பார்த்தா பிறந்த பச்சைக் குழந்தைகளையும் ரோட்டில எறிஞ்சிட்டுப் போறாங்கள். உயிரோட வெட்டிப் புதைக்கிறாங்கள். குப்பையில வீசிவிட்டு போறாங்கள். என்ன கொடுமை இது?.

பெண் புரசு தனியாகத் தெருவால போக ஏலாமக் கிடக்கு. தனியா வீட்டில இருக்கவும் பயமாக் கிடக்கு. இந்த மனிசன் எப்ப மிருகமா மாறினான் எண்டு தெரியேல்ல. வாழப் போற காலம் கொஞ்சம். அதுக்கிடையில அஞ்சறிவு படைச்சதுகளப்போல ஏன் இப்படி ஆகிப்போனான்? மற்றவனை வதைச்சுத் துன்புறுத்திக்கொண்டு தான் மட்டும் வாழக் கொள்ளையடிச்சு, கூத்தடிச்சுத் தொலைக்கிறாங்கள். ஏன் எண்டே தெரியேல்ல. கொலை செய்யுறதும், கொள்ளை அடிக்கிறதும், கற்பழிக்கிறதும் மனிசனாப் பிறந்தவனே செய்கிறான் எண்டதை நினைக்கேக்க உடம்பு நடுங்குதெல்லோ. இதெல்லாத்தையும் யாரிட்டச் சொல்லி அழுகிறதெண்டு தெரியாமக் கிடக்கு. ஊர் உலகத்தில் இதுவரை காலமும் நடக்காத செயல் எல்லாம் நடக்குது. மரத்தால விழுந்தவனை மாடு ஏறி மிதிச்ச கதையாய் எங்கட இனம் படுகிற பாட்டை என்னெண்டு சொல்லுறது? உரிமைக்காய் போராடேக்கை ஒளிச்சுக் கிடந்த இந்தக் கொடுமைகள் எல்லாம் எப்பிடி வெளியில வந்ததெண்டு யோசிக்காம இருக்க இயலாது எல்லோ. ஒருக்கா நாங்க எல்லோரும்தான் இதுகளைப் பற்றி யோசிக்க வேணும். வீட்டில அப்புவும் ஆச்சியும் சகோரதங்களும் யோசிக்க வேண்டும். பள்ளிக்கூடத்தில வாத்தியாரும் அதிபரும் யோசிக்க வேணும். இப்ப பெடியளைப் பார்த்து கதைக்கவோ சிரிக்கவோ முடியுதில்லைப் பாருங்கோ. பள்ளிக்கூடத்திலையும் முந்தின காலம்மாதிரிப் பழக்கவழக்கங்களை மேம்படுத்திற மாதிரிப் பாடங்களும் இல்லை. படிப்பும் இல்லை. இந்தக் கொம்பியூட்டர் வந்து படிப்பிக்கிற முறையை மாத்திப்போட்டுது போல கிடக்கு. கையிலை கான் போன் இல்லாத ஒருத்தியையோ ஒருத்தனையோ காணமுடியுதில்லை. பேப்பரிலை சோதினை வைக்கிறாங்கள். சோதினையிலை பாஸ் எண்டு சொல்லி வாத்தியாருக்கும் பிள்ளைகளுக்கும் மாலை போடத்தான் வேணும். அந்தச் சோதினையில பழக்க வழக்கம் ஏதும் பார்க்கிறதாய் தெரியேல்லை. நடக்கிற சோதினை என்ன சோதினை? கேட்கிற கேள்விக்கு மறுமொழி எழுதிறது மட்டும்தான்.

> **ஒவ்வொரு பிள்ளைக்கும் நல்ல வழிகாட்டும் ஓர் இடம் பள்ளிக்கூடம்தான் பாருங்கோ. பள்ளிக் கூடம் போகச்சொல்லி அப்புவும் ஆச்சியும் எடுக்கிற கவனத்தப் பார்க்கேக்க பெருமையாக் கிடக்கு.**

புத்தகத்தைப் படிச்சுப்போட்டு சோதினைக்கு மறுமொழி எழுதுறாங்கள். பழக்கவழக்கம் எப்படி இருந்தாலும் அவன் பாஸ் பண்ணினால் அவன்தான் படிச்சவன். களவு செய்யப்படாது. பொய்சொல்லக் கூடாது. கொலை செய்யக் கூடாதெண்டு எல்லாரும்தான் சொல்லுறாங்கள். அதையேதான் வீட்டிலையும் பள்ளிக்கூடத்திலையும் சொல்லிக் கொடுக்கிறாங்கள். எல்லாரும்தான் எல்லாத்தையும் தெரிஞ்சு வைச்சிருக்கிறாங்கள். கள்ளனுக்கும், கொலைகாரனுக்கும், பொய்யனுக்கும் இதுகளெல்லாம் தவறென்று தெரியும் தானே? சோதினையில கேட்கிற கேள்விக்குப் பொய்யும், களவும், கொலையும் பிழை எண்டு எழுதிறவன் தன்ரை வாழ்க்கையில அதைச் செய்யாமல் விட்டால் அவனைப் படிச்சவன் எண்டு சொல்லலாமோ?

ஆனாப் பாருங்கோ அந்தத் தீமைகளையெல்லாம் செய்யப்படாது என்ற விடயம் தெரியும். ஆனால் செய்யாமல் இருக்கின்ற மனப்பாங்கும் பழக்கமும் தான் படிச்சவனுக்கு அழகு. அதைத்தான் தேடிப்பாக்கிறம். அதைக் காணவேயில்லை. மனப்பாங்கிலையும் நடத்தையிலையும் மாற்றமில்லாமல் படிச்சென்ன? படிப்பிச்சென்ன?. மனப்பாங்கில மாற்றமில்லாட்டி இந்தக் கொலையும், கொள்ளையும் எங்கட சமூகத்தில இருந்து தொலையப் போறதில்ல. ஒவ்வொரு பிள்ளைக்கும் நல்ல வழிகாட்டும் ஓர் இடம் பள்ளிக்கூடம் தான் பாருங்கோ. பள்ளிக்கூடம் போகச்சொல்லி அப்புவும் ஆச்சியும் எடுக்கிற கவனத்தைப் பார்க்கையுக்க பெருமையாய்க் கிடக்கு. சோதினை எல்லாத்திலையும் பிள்ளைகள் பாஸ் எண்டதும் சந்தோஷமாத்தான் இருக்கும். இந்தச் சோதனைகளோட பிள்ளைகளின் நல்ல குணத்தையும் வளர்க்க வேணும் என்டு நினைக்க வெல்லோ வேணும்? சிறுவர் பாதுகாப்பு, முதியோர் பராமரிப்பு, மனிதநேயம் என்றெல்லாம் சொல்கிறாங்கள். அதுகளையெல்லாம் கேட்கவும் வாசிக்கவும் நல்லாய்த்தான் இருக்கும். ஏன் அதுகள் எங்கடை பிள்ளைகளிடத்தில வளரவில்லையெண்டு ஒருக்கா யோசிச்சா நல்லதெண்டு நினைக்கிறன். தனியார் பாடசாலைகளைப் பாருங்கோ. அங்கையெல்லாம் நல்ல பழக்க வழக்கங்கள் தொடர்பாய்க் கவனம் எடுக்கிறாங்கள். ஆனால் இந்த அரசுப் பள்ளிகளிலை அதுகள் கொஞ்சம் குறைவு போலத்தானே தெரியுது. இப்பத்தைய பள்ளிக்கூடத்திலையும் எலெக்சனுக்கு வோட்டுப் போடுற ஆட்களைச் சேர்க்கிற இடமெண்டு நினைச்சுக்கொண்டு செயற்படுகின்ற ஒரு சிலர் இருக்கிறமாதிரித் தெரியுது. அதுதானோ என்னவோ கல்வியின் பக்கம் அரசியல் சார்ந்து ஒரு பக்கத்தால் கொடுமை விளைய வழிவிடுகிதோ தெரியில்ல. கல்வி எண்டால் அறிவு, திறன், மனப்பாங்கு, செயல் ஒழுங்கு எண்டு பல விடயத்தை வளர்க்கிற இடம். பிள்ளையள சுயமாய்ச் சிந்தித்து முடிவெடுக்கத் தூண்டுற இடம். அதுக்குள்ள ஐயையோ. இந்தப் பாழாய்ப்போன பக்கம் பிரிப்பு. ஒரு நல்ல விடயத்தைச் செய்யவும் இந்த வாத்திமார் பயப்படுகினம் போல. பிள்ளைகளைச் சரியான வழிக்கு அதட்டிக் கேட்கிற துணிவு இந்த வாத்திமாரிட்ட இல்லாமல் தானே போச்சு. நான் இந்த மடத்தடியில இருந்து சும்மா புசத்திறன். பள்ளிக்கூடத்தில இருக்கிற வாத்தியாருக்குத் தானே தெரியும் அவருக்கு வரப்போற சிக்கல். இருந்தாலும் எங்கட சனம், எங்கட பிள்ளைகள், எங்கட எதிர்காலம், அவங்களிண்ட முன்னேற்றம், மக்களின்ர உடமை எல்லாத்திலையும் கொஞ்சம் கவனம் எடுத்தால் நல்லது. நான் சொல்லிப் போட்டன் இனி அது உங்களைப் பொறுத்தது. *

மடத்தடி மாரிமுத்தர்



# முடிவு பெறாத அவசர காலம்

இலங்கையில் நீண்ட ஆயுளோடு வாழ்வதற்கு உத்தரவளிக்கப்பட்ட ஒரே விடயம், அவசரகால தடைச்சட்டம் மட்டும் தான். அரசுக்கு எதிராக எந்தத் தெரு மூலையிலிருந்தும் குரல்கள் எழும்பாவண்ணம் விழிப்பாயிருந்து பார்த்துக் கொள்வதற்காக மாதாந்தம் நாடாளுமன்றில் அதிகபெரும்பான்மை வாக்கு எண்ணிக் கையில் மீண்டும் அமுலுக்கு வந்துவிடும் இச்சட்டம்.

மாறி மாறி ஆட்சிப்பீடம் ஏறும் அரசுகள் ஒருபோதும் இதனை நீக்குவதற்கு எத்தனிக்கவில்லை. மாறாக எதையாவது காரணம் காட்டி அமுல்படுத்தவே முயன்றிருக்கின்றன. அதில் தசாப்தகால வெற்றியையும் அடைந்து வருகின்றன.

வாக்களிப்பின் பெரும்பான்மையை வைத்துக் கொண்டு எதனையும் தீர்மானிக்கும் நமது நாட்டு நாடாளுமன்றில் அதனையே வைத்து அவசரகால சட்டத்தையும் நீக்கிவிடலாம். ஆனால் தமிழர் தேசிய கூட்டமைப்பைத் தவிர ஏனைய எதிர்க்கட்சிகளுக்கு அதில் உடன்பாடு இல்லை.

இலங்கையின் மிகப்பெரிய பலமான எதிர் ஆட்சி என்று சொல்லிக்கொள்ளும் ஐ.தே.கட்சியினர் இதற்கான வாக்களிப்பின் போது தந்திரமாக விலகிக் கொண்டு, அன்றைய தினம் ஒய்வெடுத்து விடுவார்கள். அவசர காலச்சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணைக்கான வாக்களிப்பின் போது அதனை எதிர்த்து வாக்களிக்காமல் ஒதுங்கிக் கொள்ளும் எதிர்க்கட்சியின் இந்த வாடிக்கையானது, அவசரகாலத் தடைச்சட்டத்திற்கு ஆதரவாக அளிக்கும் வாக்குகளின் எண்ணிக் கையை அதிகரிப்பதோடு, எதிரான வாக்குகளின் எண்ணிக்கையைக் குறைத்து விடும். இந்த நடைமுறையை குறித்த சட்ட நிறைவேற்றம் தொடர்பான பொதுக் கொள்கையாகவே ஐ.தே.க கடைப்பிடித்து வருகிறது. ஒரு முக்கியமான, சிறுபான்மை இனத்துக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகிற சட்டத்தை ஆதரிக்கவுமில்லை, எதிர்க்கவு மில்லையெனில் பிறகு எதற்கு எதிர்க்கட்சி? ஐ.தே.க இத்தகைய போக்கைக் கடைப்பிடிப்பதனூடாக இச் சட்டத்தை அமுல்படுத்துவதற்குத் துணை புரிந்து வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர்த்து ஆளும் எதிர், உதிரி கட்சிகளின் துணையுடன் நிறைவேற்றப்பட்டுவிடும் இச்சட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வைக்கும் காரணங்கள் விந்தையானவை.

மாதந்தோறும் எப்படியாவது புலிச்சான்றுகளை இலங்கையின் காடுகளில் இருந்தோ, கடலில் இருந்தோ, தமிழகத்திலிருந்தோ திரட்டிவிடுவார்கள்.

இதற்கு அண்மைய மாதங்களில் இருந்து சில சம்பவங்களை அவதானிக்கலாம். கடந்த மாதம் நாடாளுமன்றில் பிரதமர் தெரிவித்திருந்த ஒரு விடயம் செம்மையாக வாங்கிக் கட்டிக் கொள்ளுமளவிற்கு வழி சமைத்திருந்தது. தமிழகத்தில் புலிகளின் முகாம்கள் இருப்பதாக அவர் தெரிவித்த கருத்துக்கு வந்த பதிலடிகளால் மறுநாளே அக்கருத்துக்கள் 'ஆதாரங்களற்றவை' என அவரே தெரிவிக்குமளவிற்கு இராஜதந்திர அழுத்தங்களைப் பெற்றதாக மாறியிருந்தது. என்ன அழுத்தம் வந்தாலும் எதையோ புழுகி கடந்த மாதமும் அவசர காலச்சட்ட நீடிப்பை அமுல்படுத்தி விட்டார்கள்.


இந்தமாதமும் அதே கூத்து நிகழத்தான் செய்தது. சட்ட நீடிப்புவிவாதம் நாடாளுமன்றத்தில் நடப்பதற்கு ஒருவாரத்துக்கு முதலே கதைகள் தயார் செய்யப்பட்டு பரப்பப்பட்டன.

ஹபரண காட்டுக்குள், வெள்ளைக் கொடி வழக்கில் சம்பந்தப்பட்ட 4 இராணுவ அதிகாரிகள் புலிகளால் கொல்லப்பட்டனர் என்ற செய்தியும், முல்லைத்தீவுக்கடலில் 4 படையினர் படகுகளோடு காணாமல் போயுள்ளனர் என்ற செய்தியும் அவற்றுள் முக்கியமானவை.

இதனை மேற்கோள் காட்டி முல்லைத்தீவு, யாழ்ப்பாணம்,வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களில் தொடர்ச்சியான இராணுவ தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த தேடல்கள் விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் நிகழ்த்தப்பட்டவைகள் போலவே மேற்கொள்ளப்பட்டதாக மக்கள் பல ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தனர்.

இந்த செய்திகள் இம்மாத அவசாகால நீடிப்புக்கு உயிர் வழங்கியிருக்கின்றன. அடுத்த மாதத்திற்கு எங்கிருந்து புலிகள் கதை வருகிறது என்பதைக் காத்திருந்து பார்ப்போம். ✱





**1979** ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பிறந்தான் X எனும் மனிதன். அவன் பிறந்திருக்கும் நிலம் சிங்கங்களினாலும் புலிகளினாலும் கடித்துக் குதறப்படப்போவதை அப்போது அவன் உணர்ந்திருக்கவில்லை. அவன் பிறந்த ஆண்டிலேயே சிங்கங்களின் அக்கிரமங்களுக்கெதிராக கிளர்ந்தெழுந்தன சோவியத் சார்புடைய சிவப்புச் சிங்கங்கள்.போராட்டங்கள் கட்டுமீறிப்போயின.அதிகார சிங்கங்களுக்கு கட்டுப்படுத்த வேறுவழி தெரியவில்லை. கறுப்புச்சட்டமொன்றை அமுல்படுத்தின. அதன்படி சிவப்புச்சாயலுடையவர்களையும், சத்தமாய் கதைப்பவர்களையும், உண்மைகளைப் பேசுபவர்களையும், எழுதுபவர்களையும் சிங்கங்களின் ஆட்சிக்கு எதிரானவர்கள் எனச் சந்தேகித்து அந் நாட்டில் இருக்கும் குவாண்டனாமோ சிறைகளுக்கு ஒப்பான சிறைகளில் அடைக்கலாம்.சித்திரவதை செய்யலாம்.கண்களை பிடுங்கலாம்.யாருக்கும் தெரியாமல் அடித்துக்கொன்று நடுக்கடலில், தெருவில், கிணற்றில், பாழடைந்த வீடுகளில் வீசலாம்.

X பிறந்தது அந்நாட்டின் வடக்குபாகத்தில்.அவன் பிறந்த காலத்திலேயே அப்பிராந்தியத்தில் வாழ்ந்த ஏழைப்புலிகளை தெற்குப் பிராந்தியத்தைச் சொந்தமாகக் கொண்ட சிங்கங்கள் வருத்தத்தொடங்கின.வாழ்வின் அனைத்து வளங்களையும் பறித்துக் கொண்டன.1983 ஆம் ஆண்டுகளில் அந்நிலத்தின் தலைப்பட்டணத்தில் புலிகளுக்குச் சொந்தமான பொருளாதார ஈட்டங்கள் மீது மிகப்பெரும் வேட்டையைத்தொடங்கின சிங்கங்கள்.பல புலிகளின் உயிர்கள் தெருக்களில் போட்டுக் கொழுத்தப்பட்டன.சிங்கங்களின் அட்டகாசங்களுகங்கெதிராக புலிகளும் ஏ.கே47 களை தூக்கினர்.கறுப்புச்சட்டம் மேலும் பல அத்தியாயங்களுடன் புலிகளுக் கெதிராக மாற்றப்பட்டன.வயது,பால் வேறுபான்றி சந்தேகத்திற்கிடமான எல்லாப் புலிகளும் கைது வெய்யப்பட்டன.

1995களில் X க்கு அந்நிலத்தில் வாழப் பிடிக்கவில்லை.பனியடர்ந்த நாடொன்றுக்காக புறப்பட்டான்.விமானம் ஏறுவதற்காக அந்நாட்டின் தலைப்பட்டணத்தின் பெருந்தெருக்களில் பொதிகளுடன் நடக்கத்தொடங்கினான் X.

இடையில் காவலரண் ஒன்றில் இருந்த துப்பாக்கி தாங்கிய சிங்கங்கள் X ஐ மறித்தன. தன்னை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான ஆவணங்களை அவை கள் முன் படைத்தான். பல கோணங்களில் விசாரிக்கப் பட்டான். புலி என்ற இனத்தில் பிறந்தமைக் காகவும்,தலைப் பட்டணத்துக்குள் நுழைந்தமைக் காகவும் X கைது செய்யப்பட்டான்.அங்கிருந்த மாடிச் சிறை ஒன்றுக்குள் அடைக்கப்பட்ட சில நாட்களக்குள்ளேயே அவனது சில உறுப்புக்கள் கடித்துக் குதறப்பட்டன.சாவின் எல்லையைத் தொட்டு வரும் வேதனைகளையும் சித்திரவதைகளின் போது உணர்ந்தான்.

ஏதோ அவனது அம்மாவின் இறைபிரார்த் தனைகள் பலித்தன.அந்த நகரத்தின் தெருவொன்றில் இரவுப்பொழுதொன்றில் கண்கள் கட்டப்பட்டு உயிரோடு வீசப்பட்டான்.

சிங்கங்களின் அட்டகாசத்திற்கு எதிராக துப்பாக்கி ஏந்துவதில் உள்ள நியாயத்தை உணர்ந்து கொண்ட X வீட்டுக்கு வந்ததும் முதல் வேலையாய் ஒரு கடிதம் எழுதி தன் மேசைக்கு கீழ் வைத்து விட்டு,துப்பாக்கிப் போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டான்.

2000 ஆம் ஆண்டுகளளவில் அவனது போராட்டத்தின் வீரியமும்,எழுச்சியும் சிங்கங்களை தோற்றுப்போகச் செய்தன. தந்திரமாகச் செயற்பட்ட சிங்கங்கள் தம் நண்பர்களுடன் இணைந்து துப்பாக்கி ஏந்திய புலிகளை சமாதான பேச்சுக்களுக்கு அழைத்தன. அப்போது அதைத் தவிர் வேறு வழிகள் அவைக ளுக்கு இல்லாதபடியால் புலிகளும் சம்மதித்தன. சிங்கங்கள் பேச்சுவார்த்தைத் தந்திரத்தில் புலிகளை படுகொலை செய்தன.

இவற்றில் எல்லாம் நம்பிக்கை இல்லாவிடினும் X கலந்த கொண்டான்.அவனுக்கு அப்போது தேவைப் பட்டது ஒரு முடிவுதான். அதுவும் கிடைத்தது. 2009ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்காலில் வைத்துக் காயப்பட்ட நிலையில் சிங்கங்களால் கைது செய்யப்பட்டான்.அந்த இடத்தில் வைத்தே அவைகள்அவனை கடித்துக் குதறின.பாகங்களாக பிரிக்கப்பட்ட அவனது உடல் காகங்களுக்கு இரையாகின.

X பிறந்து,கறுப்புச்சட்டத்துக்கு எதிராகப் போராடி மரணித்தும் போனான். ஆனால் இன்னும் கறுப்புச் சட்டம் மீதான வாக்கெடுப்பில் அது உயர் பெறுமானம் பெற்று வாழ்ந்துகொண்டே இருக்கிறது. ✱

ஜெரா

**உன்னுடைய கருத்துக்களில் ஒன்றுடனோடு கூட எனக்கு உடன் பாடு கிடையாது. ஆனால் அக்கருத்துக்களைச் சொல்ல உனக் கிருக்கும் உரிமையை என்னுடைய உயிரைக் கொடுத்தாவது காப் பாற்றுவேன் - ரூசோ.**






அச்சுனி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

புரட்சிகரமான முடிவுகளை எடுக்கும் நீங்கள், பண்பாடு, கலாச்சாரத்தை மீற மாட்டீர்கள். பிரபலங்களுக்கு நெருக்க மாவீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். புது வீடு வாங்குவீர்கள். மூத்த சகோதர வகை யில் ஆதாயம் உண்டு. சகாக்களைப் பற்றிக் குறைகூற வேண்டாம். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். வாடிக்கையாளர்களை மனம் கோனாமல் நடத்துங்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர் கள். முற்போக்குச் சிந்தனையால் முன்னேறும் வாரமிது.




கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்

சகதியில் கல்லை விட்டெறிந்தால் அது தன் மேலேதான் தெறிக்கும், என் பதை உணர்ந்து கெட்ட நண்பர்களை அறவே ஒதுக்கி விடுவீர்கள். அதி காரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். பிள் ளைகளுடன் வெளியூர் பயணம் சென்று வருவீர்கள். மனைவி வழியில் மதிப்பு, மரியாதைக் கூடும். சகோத ரர்களால் பயனடைவீர்கள். பூர்வீக சொத்தை சீர்செய்வீர் கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். புது வாடிக்கை யாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் உங் கள் கை ஓங்கும். புதிய பாதையில் சென்று சாதிக்கும் வாரமிது.




மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

உடுத்தும் உடையையும், உள்ளி ருக்கும் மனசையும் வெள்ளையாக வைத்துக் கொள்ளும் நீங்கள் யாருக் கும் தீங்கு நினைக்கமாட்டீர்கள். எதிர் பார்த்த பணம் வரும். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். உறவினர்கள் சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். சொத்துகள் வாங்குவது விற்பது லாபகர மாக இருக்கும். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப் பார்கள் வியாபாரத்தில் சில அதிரடி மாற்றங்களைச் செய் வீர்கள். பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய முயற் சிக ளில் வெற்றி பெறும் வாரமிது.



புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

எதிரிக்கும் உதவும் நல்லெண் ணம் கொண்ட நீங்கள், சமூக அவ லங்களைத் தட்டிக் கேட்க தயங்க மாட்டீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள், நண்பர்களின் வருகையால் வீட்டில் உற்சாகம் பொங்கும். தாயாரின் உடல் நலம் சீராகும். புதுவாகனம் வாங்குவீர்கள். சந்தோஷம நில வும். சொத்து வாங்குவது, விற்பது, வாங்குவது லாப கரமாக இருக்கும். உறவினர்கள் மதிப்பார்கள். குடும்பத் தில் மகிழ்ச்சி கிட்டும். கெட்ட நண்பர்களிடமிருந்து விடுப டுவீர்கள். கூட்டுத்தொழில் செழிக்கும். பழைய பிரச்சனை களிலிருந்து விடுபடும் வாரமிது.



மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

அதிர்ஷ்டத்தை அதிகம் நம்பாத நீங்கள், உழைப்பால் உயர்ந்தவர் கள். உண்மைக்காக போராடுவீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துக் கொள்வார்கள். எதிர்பார்த்த இடத் திலிருந்து நல்ல செய்திகள் வரும். சந்தோஷம் நிலவும். சொத்துப் பிரச்சனைகளை கவனமாக கையாளுங்கள். புதிய நண்பர்களை நம்பவேண்டாம். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத் தியோகத்தில் சூழ்ச்சிகளை தாண்டி முன்னேறுவீர்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். நீண்ட நாள் ஆசை கள் நிறைவேறும் வாரமிது.



உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த தாயின் அருமை பெருமைகளை அறிந்தவர்கள் நீங்கள் தான். குடும் பத்தாரின் ஆதரவுப் பெருகும். குழந்தை பாக்யம் கிடைக்கும். தடைப்பட்ட கல்யாண முயற்சிகள் பலிதமாகும். உடன்பிறந்தவர்கள் ஒத் தாசையாக இருப்பார்கள். எதிர்பார்த்த விலைக்கு பழைய மனையை விற்பீர்கள். சந்தோஷம் நிலவும். வியாபாரத்தில் பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். பாங்குதாரர்களுடன் மோதல்கள் வந்து விலகும். எதிர்பாராத திடீர் நன்மைகள் சூழும் வாரமிது.



சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

எதையும் இலவசமாக பெற்றுக் கொள்ள விரும்பாத நீங்கள், உழைப்பை நம்பி வாழ்வீர்கள். குடும்பத்தில் ஓரளவு நிம் மதி கிட்டும். குழந்தை பாக்யம் கிடைக் கும். பிள்ளைகளின் பாசம் அதிகரிக் கும். மூத்த சகோதர வகையில் நன்மை உண்டு. வேலையாட்களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும். பங் குதாரர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோ கத்தில் அதிகாரிகளை கலந்தாலோசிக்காமல் தன்னிச் சையாக முடிவெடுக்க வேண்டாம். சகிப்புத் தன்மையால் நிம்மதி பெறும் வாரமிது.




விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

யாருக்காகவும் தன் குறிக்கோளை மாற்றிக் கொள்ளாத நீங்கள் அழுத் தமான கொள்கை பிடிப்புள்ளவர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. கல்வி யாளர்களின் தொடர்பு கிடைக்கும். குடும் பத்தில் உங்கள் கை ஓங்கும். புதியவர்கள் அறிமுக மாவார்கள். தடைப்பட்ட அரசு காரியங்கள் விரைந்து முடியும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய் வீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெரு கும். பங்குதாரர்கள் உங்களின் ஆலோசனையை ஏற் பார். உத்தியோகத்தில் புது பொறுப்புகள் தேடி வரும். மனோபலத்தால் நினைத்ததை முடிக்கும் வாரமிது.




மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

புன்சிரிப்பால் மற்றவர்களின் மன தில் எளிதாக நுழைந்துவிடும் நீங்கள், பிரச்சனைகளை கண்டு அஞ்சமாட் டீர்கள். குடும்பத்தினருடன் வெளியூர் பயணம் சென்று வருவீர்கள். பிள்ளைகள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். தள்ளிப்போன சுபகாரியங்கள் ஏற் பாடாகும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். பழைய சிக்கல்களுக்கு தீர்வு காண்பீர்கள். கடன் பிரச்சினை முடி வுக்கு வரும். வியாபாரத்தில் புது இடத் திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமைக் கூடும். திட்டமிடுதல் மூலம் சாதிக்கும் வாரமிது.



உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருகோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

பழைய கலைப் பொருட்களை பத்திரப்படுத்தி வைக்கும் பழக்க முள்ள நீங்கள் நேர்மையை நேசிப் பவர்கள். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். பிள்ளைகளால் பெருமை யடைவீர்கள். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். உறவினர் களால் ஆதாயம் உண்டு. தாயாரின் உடல் நலம் சீராகும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். எதிர் பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தில் கணிசமாக லாபம் உயரும். வேலையாட்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் பழைய பிரச்சனைகளிலிருந்து விடு படுவீர்கள். உழைப்பால் உயரும் வாரமிது.



அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

தான் உண்டு தன் வேலை உண்டு என்றிருக்கும் நீங்கள் அடுத்தவர் விஷயத்தில் அநாவசியமாக தலை யிடமாட்டீர்கள். குடும்பத்தில் நல் லது நடக்கும். பிள்ளைகள் உங்கள் மனங்கோணாமல் நடந்து கொள்வார். உடல் ஆரோக் கியம் சீராகும். கோவில் விழாக்களை முன்னின்று நடத் துவீர்கள். வியாபாரம் எதிர்பார்த்த லாபம் வரும். புது பங்குதாரர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம். விடாமுயற்சியால் வெற்றி பெறும் வாரமிது.



பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

மறப்போம் மன்னிப்போம் என்ற கொள்கை உடைய நீங்கள் மற்ற வர்கள் செய்யும் தவறை இங்கிதமாக எடுத்துரைப்பீர்கள். வரவேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போங்கள். அநா வசியச் செலவுகளை தவிர்க்கப்பாருங்கள். நெருங்கிய நண்பர்கள், மனஸ்தாபங்கள் வந்துப்போகும். தாயாருக்கு மருத்துச் செலவுகள் வந்துப் போகும். சகோதர வகையில் அலைச் சல் அதிகரிக்கும். சகாக்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளையும் தாண்டி லாபம் சம்பாதிப்பீர்கள். பொறுமையுடன் செயல்பட வேண்டிய வாரமிது.

# கணிக்க முடியாத ஜோதிடம் இருக்கிறதா?



ஒருவரின் ஜாதகத்தில் ஏதாவது தோஷம் ஏற்படும் போது அதற்குரிய ஜோதிட பரிகாரங்கள், வழிபாடுகளைக் கூறுகிறீர்கள். பரிகாரம் என்பதே இதற்கு இல்லை; இதுதான் தலையெழுத்து என்று கூறும் வகையிலான ஜாதக அமைப்புகள் ஏதாவது உள்ளதா?

ஜோதிட ரீதியாக பரிகாரமே இல்லாத பிரச்சனை என்று எதுவும் கிடையாது. பொதுவாக பிரச்சனை என்றால் அதற்கு தீர்வு, பரிகாரம் உண்டு.

நவகிரகங்கள் மற்றும் அவற்றின் காரகத்துவம் பற்றி ஜோதிடத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. உதாரணமாக சூரியனை எடுத்துக் கொண்டால் அவர் ஆத்மா, பிதுர், அரசாங்கம், அரசியல், இதயம் ஆகியவற்றில் ஆற்றல் செலுத்துவார்.

ஜோதிட ரீதியாகப் பார்த்தால் ஒரு கிரகம் குறிப்பிட்ட நபரின் ஜாதகத்தில் சிறப்பாக இருந்தால் அதன் காரகத்துவம் முழுமையாகக் கிடைக்கும். அதே கிரகம் கெட்டுப்போய் இருந்தால் அது வழங்கும் பலன்களும் கெடுதல் பயக்கும்.

ஜோதிட ரீதியாக பரிகாரம் இல்லாத விஷயம் என்று எதுவுமில்லை. பண்டைய காலத்தில் நவகிரகத்தால் ஏற்படும் தோஷங்கள், அவற்றால் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்க்க குறிப்பிட்ட மந்திரங்களை ஜெபித்து முறையாக யாகம் நடத்தப்பட்டது.

ஆனால் தற்போதைய சூழலில் முறையாக யாகம் நடத்துபவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டதால், நடைமுறைப் பரிகாரங்களின் மூலம் தோஷத்திற்கு பரிகாரம் தேடுவதே சிறந்த வழி.


உதாரணமாக செவ்வாய் கிரகம் ரத்தத்திற்கும், விபத்திற்கும் உரியது. ஒருவர் ஜாதகத்தில் செவ்வாய், சனி பார்வை பெற்றிருந்தாலும், செவ்வாய்+சனி சேர்க்கை பெற்றிருந்தாலும் அவருக்கு அடிக்கடி சிறு விபத்துகள் ஏற்படும்.

எனவே சம்பந்தப்பட்ட ஜாதகர் தாமாகவே முன்வந்து ரத்ததானம் செய்யலாம். இதன் மூலம் விபத்தால் ரத்த இழப்பு ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ளலாம்.

திருமணமே நடக்காது என்பது போன்ற கடுமையான தோஷம் உள்ள ஜாதகத்தையும் பார்த்திருக்கிறேன். அந்த மணமகனுக்கு தற்போது 38 வயதாகிறது. அவரது ஜாதகத்தில் களத்திர ஸ்தானம் (7, 8ஆம் இடம்) சிறப்பாக இல்லாமல், சுக்கிரனும் கெட்டுப் போய் இருந்ததால் அவருக்கு மண விலக்கு பெற்ற பெண்ணை திருமணம் செய்வதே சிறந்த பரிகாரமாக அமையும் எனக் கூறினேன்.

அந்த ஜாதகத்தை கொண்டு வந்த பெற்றோர், எனது அலுவலகத்தில் இருந்து புறப்படுவதற்கு முன்பாக என்னிடம் ஒரு விடயத்தை தெரிவித்தனர். அதாவது, கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பே என்னிடம் மகனின் ஜாதகத்தைக் கொண்டு வந்து பார்த்ததாகவும், அப்போது கூட மறுமணம் செய்ய வேண்டும் என்று நான் கூறியதாகவும் நினைவுபடுத்தினர். ஆனால் குடும்ப கௌரவம் கருதி மணவிலக்கு பெற்ற பெண்ணை திருமணம் செய்யாமல் தவிர்த்து வந்தோம். தற்போது மகனுக்கு 38 வயது முடிவடைய உள்ளதால் வேறு வழியில்லாமல் மணவிலக்கு பெற்ற பெண்ணை தேடி வருகிறோம் என்று கூறினர். எனவே, ஒருவர் தனது ஜாதகத்தில் கிரகங்களின் ஆதிக்கம் எப்படி இருக்கிறது என்பதை உணர்ந்து அதற்கேற்றவாறு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்

## சொற்சிலம்பம் - போட்டி இல: 465



அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### மேலிருந்து கீழ்

01. கொடி முந்திரிகை.
02. சுவை உணர்வு.
03. புவனம்/ பூமி.
04. பெண்.
05. இலங்கையில் விளையும் ஒரு பழவகை.
08. நீதியின் பாற்பட்ட முறைமை.
09. பருத்த/ பெருத்த/ மொத்தமான.
11. சொற்களின் இணைப்பால் உருவாவது.
12. வெறுப்புடன் கூடிய வைராக்கியம்/ உறுதி.
14. பஞ்ச பாண்டவருள் மூத்தவன்.
15. இது இல்லையேல் சாதலா?
17. எருதின் ஏரி.
19. நீரில் நீந்தி விளையாடுவது.

### இடமிருந்து வலம்

01. உலகின் கிறிஸ்தவர்களுக்குப் பாப்பரசர் இந்த முறையானவர்.
06. சோதிடத்துடன் தொடர்புடையது.
07. கூற்றுவன்
08. குறைதல்.
10. இந்துக்களில் ஒரு பிரிவினர்.
12. வாழ்.
13. சாமர்த்தியசாலி
15. இசைப்பாடல்/ கீதம்
18. ஓர் அசைச் சொல்.
20. இறந்த சடலங்களை இப்படி ஆங்கிலத்தில் அழைப்பர்.
21. அரசன்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 465

*சொற்சிலம்பம் 465 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு மே 01 ஆம்திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஆகியன மே 08 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.*

*முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

*அனுப்பவேண்டிய முகவரிகள்:*

**சுடர் ஒளி,**
**85, ஜெயந்த மல்லி மராச்சி மாவத்தை,**
**கொழும்பு-14.**

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**561, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### போட்டி இல. 461 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** — **சந்திரா ரவீந்திரன்,** 'இல.199/57,தும்புறுகிரிய வீதி, ஹட்டன்.

**2 ஆம் பரிசு** — **செல்வி.கே.எப்.மில்ஹானி,** இல.14, புளியடி குறுக்கு வீதி, ஏறாவூர்.

**3 ஆம் பரிசு** — **முஹம்மத் பாஸில்,** இல. 141/1 குமாரதுங்க மாவத்தை, மாத்தறை.

### சொற்சிலம்பம் போட்டி இல.462 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01.பதி 02.திருமகள் 03.கடிதம் 04.கற்றல். 05.முறம். 06.கும். 08.நாற்பது. 10.நகரசபை. 12.கரும்புகை. 14.வாலி. 15.குலம். 16.அதிதி. 17.மரம். 19.நவ.

**இடமிருந்து வலம்**

01.பதிகம். 04.கழுகு. 07.திருடி. 08.நாற்றம். 09.மதமாற்றம். 10.நகம். 11.பல். 13.கள். 14.வாது. 15.குரு. 16.அலி. 17.மலம். 18.சந்தி. 19.நரம்பு. 20.திரவம்.

### பாராட்டுப் பெறுவோர்

**(1) ஜி.சத்தியபாரதி,**
இல,86/15 பன்வில வீதி, வத்தேகம.

**(2) செ.றொபட்,**
இல:14, நியுநாம்குயர், கொழும்பு-13.

**(3) கு.தரனியன்,**
இல.64/22 கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு.

**(4) எஸ்.ரியாஸ் முஹம்மத்,**
இல680, புன்னக்குடாவீதி, ஏறாவூர்-03

**(5) தமோதரம் வடிவேல்,**
இல-5, ஏறாவூர், செங்கலடி.

**(6) ம.கமலநாதன்,**
இல.16/1 கோணர்வீதி, மட்டக்களப்பு.

**(7) திருமதி.அ.பிலோமினா,**
இல.76/2 கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

**(8) செல்வி.அ.அங்கயற்கண்ணி,**
இல.7/27 புதிய சோனகத்தெரு, திருகோணமலை.

**(9) சந்திராணி தங்கத்துரை,**
வட்டவிதானை வீதி,பெரிய நீலாவணை, 01 கல்முனை.

**(10) ஞா.இம்மனுவல்,**
இல.83/4,மவுன்கார்மல் வீதி குருநகர், யாழ்ப்பாணம்.




**அ.கலையரசி,**
**கோண்டாவில்.**

**கேள்வி:** *நீங்கள் நரகத்தை நம்புகின்றீர்களா?*

**பதில்:** திருமணத்துக்கு முன் நம்பவில்லை.

**இ.சிகாமணி,**
**பெரியகடை, மன்னார்.**

**கேள்வி:** *எல்லா சினேகிதர்களையும் நம்பலாமா?*

**பதில்:**சிலர் snake கிதர்களாயும் இருக்கிறார்களே!

**வே.இளவரசன்,**
**புதுக்குடியிருப்பு.**

**கேள்வி:** *பெண்கள் அழகு பிரகாசிக்க வேண்டுமா?*

**பதில்:**அணைந்த விளக்கை நாடி விட்டில் பூச்சிகள் வரமாட்டா!

**அ.அகிலதாஸ்,கோப்பாய்.**

**கேள்வி:** *இரக்க குணம் யாருக்கு அதிகம்? பெண்களுக்கா? ஆண்களுக்கா?*

**பதில்:**இல்லை பேய்களுக்கு. அவை தானே பெண் என்றதும் இ(ர/ற)ங்குகின்றன.

**வே.தில்லையம்பலம்,**
**வவுனியா.**

**கேள்வி:** *திருத்த முடியாத தவறு எது?*

**பதில்:** திருமணம். ஒருதடவை தவறு விட்டால் பிறகு பிழைக்கவே முடியாது.

**எஸ்.திருச்செல்வம்,**
**நீர்வேலி.**

**கேள்வி:** *ஒருவனுக்கு மனைவி முக்கியமா? உடுப்பு முக்கியமா?*

**பதில்:** மனைவி இல்லாமலும் வெளியே போகலாமே!

**பி.பிரான்ஸிஸ் பீற்றர்,**
**மன்னார்.**

**கேள்வி:** *எனது மனைவி காரில் செல்லும் போது பின் சீற்றில் தான் இருக்கிறாள். அவள் பணிவு குறித்து என்ன நினைக்கின்றீர்?*

**பதில்:** அது பணிவு அல்ல. உம்மை சாரதியாகவும் தன்னை முதலாளியாகவும் கருதும் துணிவு.

**பா.வடிவேலு,**
**திருகோணமலை.**

**கேள்வி:** *ஒரு பெண் என்னைப் பார்த்து புன்னகைக்கின்றாள். நான் சந்தோஷப்படவா? சந்தேகப்படவா?*

**பதில்:** சஞ்சலப்படாதீர்; அதனால் பின்னர் அவலப்படுவீர்!

**மலைமகள்,**
**நீர்கொழும்பு.**

**கேள்வி:**துண்டு வெட்டிய பின்னரும் சில நோயாளிகள் வார்ட்டை விட்டுப் போக விரும்புகிறார்கள் இல்லையே?

**பதில்:** வீட்டில் காணாததை வாட்டில் கண்டிருப்பார்கள்.

**எஸ்.இந்திராணி, ஹட்டன்.**

**கேள்வி:**எனது வாழ்வில் பயங்கரச் சம்பவம் நடந்த திகதியை சோதிடர் சரியாகச் சொல்லுகின்றாரே?

**பதில்:** சில சோதிடர்கள் திருமணத் திகதியை கண்டுபிடித்துச் சொல்வதில் சூரர்கள்.

**கா.காசிநாதன்,**
**பருத்தித்துறை.**

**கேள்வி:**என் நண்பனுக்குத் தண்ணியால் கண்டம் என்றார் சோதிடர். ஆனால் அவன் மோட்டார் சைக்கிள் விபத்தில் இறந்து விட்டானே?

**பதில்:** தண்ணி அடித்துவிட்டு மோட்டார் சைக்கிள் ஓட்டினாரா என்பதை விசாரித்துப் பாரும்.

**ம.வே.கணபதிப்பிள்ளை,**
**தெல்லிப்பளை.**

**கேள்வி:**ஒரு மிஸ் என்னை ஏமாற்றி விட்டாளே?

**பதில்:** மிஸ்ஸை Miss பண்ண விட்ட ஏமாளியப்பா நீர்!

**எல்.பீற்றர் அல்போன்ஸ்,**
**கொழும்பு-14.**

**கேள்வி:**தரகர் கொண்டு வந்த மாத்துச் சம்பந்தத்தைச் செய்யலாமா?

**பதில்:**அது மாத்துச் சம்பந்தமா, சுத்துமாத்துச் சம்பந்தமா என்பதை ஒரு தடவை விசாரித்துப் பார்த்தால் நல்லது.

**ம.வடிவேற்கரசன்,**
**கல்கிசை.**

**கேள்வி:**பெண்களின் மேனியில் அழகுக்கு அழகூட்டும் அங்கம் எது?

**பதில்:** மல்லிகை மலரில் மணக்கும் இதழ் எது.

**பி.பிரதீபன்,**
**வத்தளை.**

**கேள்வி:**அழகு கண்டு களிக்கவா? உண்டு கழிக்கவா?

**பதில்:** வீட்டுத் தோட்டத்தில் உண்டு களியும்.மாற்றான் தோட்டத்தில் கண்டு களியும்.

**கே.கண்ணன்,**
**யாழ்ப்பாணம்.**

**கேள்வி:**என் மனைவி ஒரே பிடிவாதக்காரி. திருத்த என்ன வழி?

**பதில்:**முதலில் (தப்பிப்) பிழைக்கும் வழியைப் பாரும். பின்னர் திருத்தும் வழியைப் பார்க்கலாம்.

**து.ஜெரா,**
**வவுனியா.**

**கேள்வி:**திறமை, வாய்ப்பு இதில் வெற்றிக்கு எது அவசியம்?

**பதில்:** வாய்ப்பைப் பயன்படுத்தும் திறமை!

**சோபா,**
**கொழும்பு.**

**கேள்வி:**விவாகரத்துப் பெற்றுவிட்டேன். மறுமணம் செய்யலாமா?

**பதில்:** சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது; நல்ல மாட்டுக்கு ஒரு சூடு.



# சிறுவர் சுடர்

தொகுப்பு - எஸ்.ஜெயா

## குட்டி போட்ட பாத்திரம்






கே. அபிஷரணி, தரம் - 6,
யா/சைவப்பிரகாச வித்தியாலயம், நெடுந்தீவு.



அபாணா
கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை, வெள்ளவத்தை.

### கோழிக்குஞ்சு



## குறும்புக்காரன் குட்டீஸ்



# கண்முன்னால் அச்சுறுத்திய மரணம்

சிங்கப்பூரின் செந்தோசா தீவைக் கண்டுகளிக்க கேபிள் காரில் பயணித்த உல்லாசப் பயணிகள் எதிர்பாராத விதத்தில் விபத்தில் சிக்கிக் கொண்டாலும், மீட்புப் பணியாளர்கள் எடுத்துக் கொண்ட துணிகர மீட்பு நடவடிக்கையால் அவர்கள் காப்பாற்றப்படுகின்றனர்.




உண்மைச் சம்பவம்

அப்போது கரையிலிருந்த விமானியோடு ரேடியோத் தொடர்பைப் பேணி வந்த அதிகாரிகள் செயலில் இறங்கினார்கள். நிழல் போல் கண்ணுக்குத் தெரிந்த கார்களின் திசை, உயரம் போன்ற விடயங்களைத் துல்லியமாக விமானிக்குத் தெரியப்படுத்தினார்கள். கண்ணால் பார்க்காமல் மற்றவர்கள் கூறி திசை, உயரம் போன்ற விடயங்களோடு செல்வநாதனைத் துல்லியமாகக் கீழே இறக்குவது குருடன் வழிதேடிப் பிடிப்பதற்கு ஒப்பானதாகும். அத்தோடு காற்றின் அதிகரித்த வேகத்தால் ஹெலிகொப்டரை ஒரு நிலையாக நிறுத்த முடியவில்லை. ஆகவே அதிகாரிகளின் வழிகாட்டுதல் பயனளிக்கவில்லை. ஆனால் அதிர்ஷ்டவசமாக அந்த ஹெலி கொப்டரில் இருந்த இன்னொரு மீட்புப் பணியாளரான சுகெங் தனக்கு செல்வநாதனையும் காரையும் பார்க்க முடிகிறது என்று கத்தினான். உடனடியாகக் கரையிலிருந்த ரேடியோத் தொடர்பைத் துண்டித்த லெட்ஜர், சுகெங்குடன் இன்டர்கொம் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார்.

பதினொரு வருடப் பறப்பு அனுபவத்தைக் கொண்டிருந்தாலும் அவனால் அந்த வேளையில் ஹெலிகொப்டரை நிலையாக நிறுத்த முடியவில்லை. அந்த அளவுக்குக் காற்றின் வேகம் பலமாக இருந்தது.

திடீரென செல்வநாதன் தொங்கிக் கொண்டிருந்த கம்பி, கார்களை இணைத்த கம்பியில் உரசவே நெருப்புப் பொறிகள் பறந்து அதிலொன்று ஹெலிகொப்டரையும் தாக்கியது.

உயரத்தைக் கூட்டிய லெட்ஜர் மணியைப் பார்த்தான். பதினைந்து நிமிடம் தான் கழிந்திருந்தது. ஆனால் மணிக்கணக்கில் நேரம் போனது போல் தெரிந்தது. கைகளும் மணிக்கட்டுகளும் ரணமாக வலித்தன.

சுகெங் கத்தினார் ''வலது பக்கம் போ. மீண்டும் இடது பக்கம் மூன்று, இரண்டு, ஒன்று, சரி நில்'' செல்வநாதன் காருக்கு அருகே கொண்டு வரப்பட்டான். இதோ காருக்குள் குதித்து விட்டான். அமெரிக்கப் பெண்ணும் கனேடியத் தம்பதிகளும் ஹெலிகொப்படருக்கு மாற்றப்பட்டுக் கரைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். இனித்தான் மிகவும் இக்கட்டான மீட்புப்பணி இருக்கின்றது. செல்வநாதன் குதிக்கும் போதோ, அல்லது உள்ளே இருப்பவர்கள் அவசரப்பட்டு முண்டியடித்தாலோ ஒரேயொரு இழையில் தொங்கிக் கொண்டிக்கும் கார் அறுந்து விழக்கூடும்.

மாளவிகாவும் ரீனாவும் அரை மயக்கத்தில் இருந்தார்கள். ஹெலிகொப்படர் கீழே வரும்போது ஏற்பட்ட காற்றின் அழுத்தத்தால் மீண்டும் கேபிள்கார் ஆடத்தொடங்கியது. இது தான் எமது வாழ்க்கையின் கடைசி வினாடி என்று ரீனா எண்ணும் போதே ஆடிக் கொண்டிருந்த காரின் கதவினூடாகச் செல்வநாதன் ஜாக்கிதையாக உள்ளே குதித்தான்.

''உங்களை வீட்டுக்குக் கூட்டிப்போக வந்திருக்கிறேன்'' என்று அந்த நேரத்திலும் புன்னகையோடு செல்வநாதன் கூறினான். முதலில் அரவிந்தைப் பாதுகாப்புக் கயிற்றில் இணைந்து ஹெலிகொப்டருக்கு மாற்றினான். அடுத்து ராணா. தன்னுடைய சிறிய மைத்துனன் பிரசாந்தை இழந்திருந்த ராணா மிகவும் குழம்பிய மனநிலையில் இருந்தான்.

அவனை உற்சாகப்படுத்தும் நோக்கில் ''உன்னுடைய பிரசாந்த் கரையில் உனக்காகக் காத்திருக்கிறான். வா'' என்று செல்வநாதன் கூறும் போதே துக்கத்தில் அவனது குரல் அடைத்தது. ஒருவாறு அவனையும் ஹெலிகொப்டருக்கு மாற்றிவிட்டு மீண்டும் மெதுவாக உள்ளே குதித்தான். காற்றின் வேகத்தால் ஹெலிகொப்டரை நிலையாக நிறுத்தமுடியாமல் லெட்ஜர் தடுமாறிக்கொண்டிருந்தான். பாதுகாப்புக் கயிற்றை மற்றவர்களி[ல்] மாட்ட முடியாமல் செல்வநாதனும் த[டு]மாறிக் கொண்டிருந்தான். வார்த்தையா[ல்] வர்ணிக்க முடியாத கஷ்டம். ஆனாலும் கடவுளின் உதவியால் ஒருவாறு அவர்களைக் ஹெலிகொப்டருக்கு மாற்றினான் செல்வநாதன்.

### பேபி

இது ஒரு புறமிருக்க, 185 அடி உயரத்திலிருந்த தனது பாட்டியுடன் கீழே விழுந்த பிரசாந்தை கரையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த ஒரு நீச்சல் வீரன் உடனடியாகவே நீந்திச் சென்று தண்ணீரிலிருந்து அவனை இழுத்துக் கொண்டு கரையேறினான். நல்ல வேளையாகப் பாறைகள் எதனிலும் அவன் சிக்கியிருக்கவில்லை. உடனடியாகவே அவன் சிங்கப்பூர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டான். மண்டையோட்டில் உடைவு, அதிர்ச்சி, அத்துடன் நுரையீரலிருந்து இரத்தக் கசிவும் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. ஆரம்பத்தில் நம்பிக்கை இழந்தாலும், வைத்தியர்களின் போராட்டம் வெற்றியளித்தது. பத்து நாள்களுக்குப் பின்னர் அந்தக் குழந்தை பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் குழந்தையும் பாட்டியும் வெவ்வேறு இடங்களில் விழுந்தபடியால் அந்த வயதான பெண்ணைக் காப்பாற்ற முடியவில்லை.

இச்சம்பவம் நடந்து முடிந்த சில நாள்கள் சென்ற பின் சிங்கப்பூர் தீவின் முப்படைத்தளபதி ஏற்பாடு செய்த மிகப் பெரிய விழாவில், மீட்புப்பணியில் ஈடுபட்ட ஊழியர்கள் கௌரவிக்கப்பட்டதோடு. பதவி நிலை உயர்வுகளும், பதக்கங்களும் வழங்கப்பட்டன. நாட்டின் மிக உயர்ந்த விருதுகளாக அவை கருதப்படுகின்றன. லெட்ஜர் என்ற விமானியின் சாகசமான பறப்புக்கு (இலக்குகள் கண்ணுக்குப் புலப்படாத போதும்) விசேட விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. சிங்கப்பூரின் வரலாற்றிலேயே அத்தகையதொரு விருது பெற்ற முதல் வெளிநாட்டவர் என்ற பெருமையையும் அவர் ஈட்டிக்கொண்டார். ✱ ★ ✱

## இணையத்தள சாதனை



இணையத் தளப் பயன்பாடு குறித்து ஆய்வு செய்யும் காம்ஸ்கோர் நிறுவனம், கடந்த ஒக்டோபர் முதல் டிசெம்பர் வரையிலான காலத்தில் எடுத்த ஆய்வு முடிவுகளை அறிவித்துள்ளது.

இதன்படி, இணையத்தில் யார் அதிக நேரம் உலா வருபவர்கள் தெரியுமா? அமெரிக்கர்களா? பிரிட்டிஷ்காரர்களா? சீன அல்லது இந்தியக் குடிமக்களா? இவர்கள் யாரும் இல்லை.

கனடா நாட்டு மக்கள் தான் அதிக நேரம் இணையத்தில் உள்ளனர். 2010 ஒக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலத்தில், ஒவ்வொருவரும் சராசரியாக 43.5 மணி நேரம் இணையத்தில் செலவிடுகின்றனர். இது பன்னாட்டளவிலான சராசரி நேரத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாகும். இவர்களில் பெரும்பாலானவர்களின் வயது 55க்கும் மேல் என்பது இன்னொரு வியத்தகு செய்தி. 2009 ஆம் ஆண்டிலும் இதே பெருமையைக் கனடா தட்டிச் சென்றது.

தற்போது கனடாவில் இணையத்தளம் பயன்படுத்துபவர்கள் 2 கோடியே 30 லட்சம் பேர் உள்ளனர். இதே காலத்தில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர்கள் 35.5 மணி நேரமும், பிரிட்டிஷ் நாட்டவர் 32.3 மணி நேரமும், தென் கொரியாவைச் சேர்ந்தவர்கள் 27.7 மணி நேரமும் இணையத்தில் இருந்துள்ளனர். இந்தியாவில் மொபைல் பயன்பாடு வளர்ந்த அளவிற்கு, புரோட்பாண்ட் இணைய இணைப்பு வளரவில்லை என்பது பலரின் கவலைக்கான விஷயமாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. இருப்பினும் இப்போது இந்நிலை மாறத் தொடங்கி உள்ளது. சென்ற டிசெம்பர் மாதத்திலிருந்து பார்க்கையில் வளர்ச்சி சற்று வேகமாக உள்ளது தெரிய வந்துள்ளது. இந்தியாவில் ஒரு கோடியே 9 லட்சத்து 20 ஆயிரமாக இருந்த புரோட்பாண்ட் இணைப்பு, 2.7 வீதத்தால் உயர்ந்து, ஒரு கோடியே 12 லட்சத்து 10 ஆயிரமாக வளர்ந்துள்ளது. மொபைல் பயன் படுத்துபவர்களின் எண்ணிக்கை 77 கோடியே 11 லட்சத்து 80 ஆயிரமாக அதிகரித்துள்ளது. இவர்களில் நகரங்களில் பயன்படுத்துபவர்கள் 51.23 கோடி. கிராமப் புறங்களில் மொபைல் போன் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை 25 கோடியே 89 லட்சத்து 30 ஆயிரம் ஆகும். மொபைல் சேவை வழங்கும் நிறுவனங்களில், பாரதி ஏர்டெல், ரிலையன்ஸ் மற்றும் வோடபோன் நிறுவனங்கள் முதல் மூன்று இடத்தைப் பெற்றுள்ளன. காம் ஸ்கோர் நிறுவனத்தின் கணக்குப் படி, ஒரு நேரத்தில் சராசரியாக, 3 கோடியே 2 லட்சம் பேர் இன்டர்நெட் இணைப்பில் இருக்கின்றனர். இவர்களில் 72வீதம் பேர் வீடியோ படங்களை இணையத்தில் பார்க்கின்றனர். இவர்கள் சராசரியாக 58 படங்களைப் பார்க்கின்றனர். 5 மணி நேரம் இணையத்தில் செலவிடுகின்றனர். யு ட்யூப் தளத்தில் பார்க்கப்படும் இணைய வீடியோக்களில் 44.5 வீதம் இந்தியாவில் பார்க்கப்படுகின்றன. 78 கோடி தடவை இவை காணப்படுகின்றன. பேஸ்புக் சோஷியல் தளத்தில்66 லட்சம் பேர் பதிந்துள்ளனர். இவர்கள் 3 கோடியே ஒரு லட்சம் வீடியோ படங்களைப் பார்த்துள்ளனர்.





# டயானாவின் 32 மில்லியன் பெறுமதியான மோதிரம்

பிரிட்டிஷ் இளவரசர் வில்லியத்தை மணக்கவுள்ள கேட் மிடில்டன் திருமணத்துக்கு முந்திய தனது கடைசி உத்தியோகபூர்வ வெளிப்பயணத்தில் கலந்து கொண்ட போது, அவர் அணிந்துள்ள திருமண மோதிரத்தின் அழகையும் வெளிப்படுத்தத் தவறவில்லை.

நீலக்கல் மற்றும் வைரக்கல் என்பனவற்றால் ஆன இந்த மோதிரம் இவரின் விரலுக்குப் பெரிதாகக் காணப்படுவதாகவே அவர் தற்போது உணருகின்றார்.

இதற்குக் காரணம் அவர் முன்னரை விட தற்போது மெலிந்துள்ளதே ஆகும். 32 மில்லியன் பவுண் பெறுமதியான இந்த திருமண மோதிரம் முன்னர் இளவரசி டயானா அணிந்ததாகும்.

இந்த மோதிரத்தின் அடிப்பகுதி வளைவுக்குள் பொருத்தமான பிளாட்டினம் தகடுகளைச் செலுத்தி தனது விரலுக்கு ஏற்றதாக மாற்றித்தருமாறு மிடில்டன் அரச குடும்ப நகை வடிவமைப்பாளர்களைக் கேட்டுள்ளார்.

இந்த மோதிரத்தை அணிந்திருக்கும் போது அது தனது விரலுக்கு ஏற்றதாக, வசதியானதாக இருக்க வேண்டும் என்பதே மிடில்டனின் எதிர்ப்பார்ப்பாகும்.

இந்த மோதிரம் இளவரசி டயானாவின் நிச்சயதார்த்த மோதிரம், அதற்கு ஒரு வரலாறு உள்ளது. எனவேதான் அதன் பெறுமதியும் 32 மில்லியன் பவுண் என மதிப்பிடப் பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் பெண்கள் மத்தியில் குறிப்பாக இளம் பெண்கள் மத்தியில் டயானா போலவே மிடில்டனும் துரிதமாகப் பிரபலம் அடையத் தொடங்கிவிட்டார். அவரின் ஆடை அலங்காரம் மற்றும் கூந்தல் வடி வமைப்பைப் பலபெண்கள் ஏற்கனவே பின்பற்ற ஆரம்பித்து விட்டனர். கடந்த மாதம் முதல் அலங்கார ஷாம்பூக்கள் மற்றும் கூந்தல் லோஷன்கள் என்பனவற்றின் விற்பனை பிரிட்டனில் 27 வீதம் அதிகரிக்க ஆரம்பித்துள்ளது என்று வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மோதிரத்தை ஒத்ததாகத் தயாரிக்கப்பட்டுள்ள மாதிரி மோதிரங்களும் தற்போது நல்ல விலையில் விற்பனையாகி வருகின்றன. மிடில்டன் எதிர்காலத்தில் அணிவதற் கான சில நகைகளை தானே வடிவமைத்தும் உள்ளார்.


## தேவை

கொழும்புக்கு அருகிலுள்ள புடவை ஆலையில் கடமை புரிய, புடவை நெச வில் நல்ல அறிவும், பயிற்சியும் உள்ள மின்தறி மெக்கானிக் - பொருத்துநர் தேவை.

தங்குமிட வசதியுண்டு.

**071 4077359**

**தொலை பேசி இலக்கத்துடன்**

**தொடர்பு கொள்ளவும்.**

**டான்.டி சில்வா,**

அலுவலக மனேஜர்

ஒஷானி டெக்ஸ் ரைல்ட் இன்டஸ்ரீஸ்

(பிறைவேட் லிமிட்டட்),

517, மொறட்டுவ வீதி,

கவரபொல, பிலியந்தல,

011 2614400

0715332471.


## மேலதிக மரபணுவுடன் பிறந்த உலகின் முதல் குழந்தை




இரண்டு வயதான இந்தச் சிறுவன் தான் உலகில் முதன் முதலாக மரபணுவில் மேலதிக அங்கத்துடன் பிறந்த குழந்தையாகும். பிறேவ்அல்பி என்ற இவன் பிறப்பிலேயே விழிப்புலன் அற்றவனாகப் பிறந்தான். இதற்கான காரணத்தை வைத்தியர்கள் தேடிப் பார்த்தபோது தான், இவனது மரபணு மேலதிக அங்கத்துடன் இருப்பதுதெரியவந்தது. உலகில் இதற்கு முன் வேறு யாருக்கும் இவ்வகையான மரபணு இருந்ததாக எவ்வித மருத்துவச் சான்றுகளும் இல்லை. இவனது மரபணுவில் ஏழாவது குரோமஸோமில் ஒரு மேலதிக கரம் காணப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு இதுவரை பெயர் இல்லை. எப்படி அழைப்பது என்றும் தெரியவில்லை. மொத்தத்தில் மருத்துவர்கள் குழம்பிப் போயுள்ளனர். இப்போது இவனால் பார்க்க முடிகின்றது. இந்த மரபணு காரணமாக எற்பட்ட ஒரு குடல் சம்பந்தமான பிரச்சினைக்கு விரைவில் அவனுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.


# TAG DER OFFENEN TÜR

## SUPER RABATTE!



RISOTTO NUR 2.-






GRATIS

KAFFEE UND KUCHEN

**Möbel Ferrari**

Wässeristrasse 28
8340 Hinwil
Tel. 044 931 20 40
Fax. 044 931 20 49
info@moebel-ferrari.ch
moebel-ferrari.ch

**Öffnungszeiten**
Montag bis Freitag
09.00 bis 20.00
Samstag 09.00 bis 18.00

**0.0%** Direkt Finanzierung